# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை:9 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 12 சனிக்கிழமை (25-03-2000) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்:43

# சமாதானப் பேரணி யாழ். நகரில் இன்று

## நல்லூரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்25

**யுத்தத்தை உடனடியாக நிறுத்தி, சமாதானப் பேச்சுக்களை தாமதமின்றி ஆரம்பிக்க வேண்டும் என்று கோரி இன்று யாழ். நகரில் சமாதானப் பேரணி ஒன்று நடைபெறுகின்றது.**

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் ஏற்பாட்டில் - யாழ். குடாவிலுள்ள நாற்பதுக்கும் மேற்பட்டபொது அமைப்புகள் கலந்துகொள்ளும் இந்த சமாதானப் பேரணி இன்று காலை 9 மணிக்கு நல்லூர் கந்த சுவாமி கோயிலிலிருந்து ஆரம்பமாகும்.

அங்கிருந்து கோயில் வீதி, பிரதான வீதி ஆகியவை ஊடாகப் பேரணி யாழ்.துரையப்பா விளையாட்டரங்கை வந்தடையும்.

அங்கு மதத்தலைவர்களின் உரை இடம் பெற்றதும் சமாதானத்தை வலியுறுத்தும் - ஜனாதிபதிக்கு முகவரியிட்ட - மகஜர் யாழ். அரச அதிபருக்கு எடுத்துச் செல்லப்பட்டு கையளிக்கப்படும்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் மறியற் போர்

திருகோணமலை,மார்ச்25

திருகோணமலையில் தற்போது தங்கியிருக்கும் யாழ். பயணிகள் தமக்கான கப்பல் போக்குவரத்து ஒழுங்குகள் செய்து தரப்பட்ட வேண்டுமெனக் கோரி நேற்று திருகோணமலைப் பிரதேச செயலகம் முன்பாக மறியற் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

சுமார் 200 பயணிகள் இந்தப் போராட்டத்தில் பங்குபற்றினர். பயணிகளின் மறியற் போராட்டத்தை அடுத்து அந்த இடத்துக்கு வந்த பொலீஸார் போராட்டத்தைக் கைவிடுமாறு கோரியபோதும் அதனை ஏற்றுக் கொள்ளாத அவர்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

## உதயனில் பிரிட்டிஷ் தூதர்



நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருக்கும் இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் லின்டா ஜோய் டபிலிட் அம்மையார் தமது விஜயத்தின் கடைசி நாளான நேற்று 'உதயன்' - 'சஞ்சீவி' பணிமனையில் நடைபெற்ற விருது வழங்கும் வைபவத்தில் பங்குபற்றினார். ஸ்ரீலங்கா பத்திரிகை ஆசிரியர்கள் கூட்டமைப்பினால் கடந்த ஆண்டு 'துணிச்சலான பத்திரிகைக்கான விருது' உதயனுக்கு வழங்கப்பட்டிருந்தது.

அந்த விருதை 'உதயன்' - 'சஞ்சீவி' பிரதம ஆசிரியர் ம.வ. கானமயில்நாதனிடம் நேற்றைய வைபவத்தின்போது பிரிட்டிஷ் தூதுவர் கையளித்தபோது எடுக்கப்பட்ட படம் இது.

பிரிட்டிஷ் தூதருக்கு இடது புறத்தில் 'உதயன்' நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் காணப்படுகின்றார்.

உதயனுக்கு விருது வழங்கப்பட்டதை ஒட்டி நிறுவனத்தினால் பிரிட்டிக் கௌரவிக்கப்பட்ட ஆசிரியபீடப் பொறுப்பாளர்கள் பிரிட்டிஷ் தூதருக்கு வலது புறத்தில் காணப்படுகின்றனர். இடமிருந்து வலமாக பிரதம ஆசிரியர், இணை ஆசிரியர்கள் ந.வித்தியாதரன் மற்றும் என்.பத்மசீலன், பிரதம செய்தியாளர் ஞா.குகநாதன், உதவி ஆசிரியர் கா.குமாரதாஸன்.

# கட்டுநாயக்காவுக்கு அருகே வீடுகள் மீது சரக்கு விமானம் வீழ்ந்து நொறுங்கியது

## அறுவர் பலி; அறுவர் காயம்

கொழும்பு,மார்ச்25

பாங்கொக்கில் இருந்து கட்டுநாயக்கா நோக்கி வந்து கொண்டிருந்த 'ஸ்கை காப் - 702' என்ற பெயருடைய அன்ரனோவ் 12 சரக்கு விமானம் நேற்று மாலை 6.15 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குச் சமீபமாகக் கட்டானைக்கு அருகே கதிரான என்னும் இடத்தில் குடியிருப்புக்கள் மீது வீழ்ந்து நொறுங்கி எரிந்தது.

விமானத்தில் அச்சமயம் ஏழு ரஷ்ய சிப்பந்திகளும் ஒரு ஸ்ரீலங்கா சிப்பந்தியும் இருந்தனர்.

இவர்களில் இரு ரஷ்ய சிப்பந்திகள் உயிருடன் தப்பிவிட்டனர். நான்கு ரஷ்சியரின் சடலங்கள் மீட்கப்பட்டன. ஏனைய இருவரின் சடலங்களையும் விமானத்தில் இருந்து மீட்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

விமானம் வீழ்ந்த குடியிருப்புப் பகுதியில் அமைந்திருந்த மூன்று வீடுகளும் ஒரு தேவாலயமும் சேதமடைந்துள்ளன.

அந்த வீடுகளில் இருந்து குழந்தை உட்பட இருவர் இந்த விபத்தின் பின் சடலங்களாக மீட்கப்பட்டனர். இவர்களின் சடலங்கள் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டிருந்தன.

காயத்துடன் மீட்கப்பட்ட ஆறு பொதுமக்கள் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்தப்பகுதியில் தொடர்ந்து பொலீசாரின் தேடுதல் இடம்பெறுகின்றது.

இறந்தோர் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

## மூன்றாவது விமான சேவை நேற்று நடைபெறவில்லை

யாழ்ப்பாணம், மார்ச்25

பலாலிக்கும் கட்டுநாயக்காவுக்கும் இடையில் இடம்பெறும் பயணிகள் விமான சேவையில் மூன்றாவது சேவை நேற்று இடம்பெறவில்லை.

கட்டுநாயக்காவில் இடம்பெற்ற விமான விபத்துக் காரணமாக இந்தச்சேவை இடம் பெறவில்லை என்றும்-

மூன்றாவது சேவையில் பயணம் செய்ய யாழ்ப்பாணத்திலிருந்து பலாலிக்கு அழைத்துச் செல்லப்பட்ட பயணிகள் நேற்றிரவு காங்கேசன்துறையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் -

இன்று காலை அவர்கள் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படுவர் "என்றும் - தெரிவிக் கப்பட்டது.

(உ-3)

## ஆரம்பக் கல்வி பாடநெறி

# ஆசிரிய நியமனத்துக்காக விண்ணப்பித்தோர் கவலை

யாழ்ப்பாணம்,மார்ச்25

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் ஆயிரத்து 250 ஆசிரியர்களை நியமிக்கும் திட்டத்தின் கீழ் ஆரம்பக்கல்வி பாடநெறிக்கு விண்ணப்பித்தவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படவில்லை என சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த - சுமார் 500 பேர்யாழ்.மாவட்ட நாடாளுமன்ற

(8ஆம் பக்கம் பார்க்க)

# விமானப் பயணச் சீட்டு பெறுவது குறித்து விளக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச்25

விமானம் மூலம் பயணம் செய்ய விரும்பும் பயணிகள் தமது பிரிவு படையணி அலுவலகங்களில் பெறும் அனுமதியுடன் பலாலி இராணுவத் தலைமையகத்தின் அனுமதியையும் பெற்றால் மட்டுமே பயணச்சீட்டை கொள்வனவு செய்ய முடியும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி அறிவித்துள்ளார்.

பலாலி தலைமையக அனுமதியைப் பெறுவதற்கு தமது அலுவலகத்தில் பதிவுகளைச் செய்யும்படியும் -

அப்படி பதிவு செய்தால் 24மணி நேரத்தில் இந்த அனுமதியைப் பெறமுடியும் என்றும் -

அவசர தேவைக்கு ஜெஸ்டவர்

(8ஆம் பக்கம் பார்க்க)



'உதயனில்' நேற்று இடம்பெற்ற விருது வழங்கும் வைபவத்தில் பங்கு பற்றியோரையும் நயப்புரைநிகழ்த்திய கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண.பிதா ஏ.ஐ.பேர்னாட், பிரதம விருந்தினராகப் பங்குபற்றி உரையாற்றிய பிரிட்டிஷ் தூதர் செல்வி லின்டா ஜோய் டபீல்ட் அம்மையார் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது குடும்ப வைத்தியரான
**Dr. சிவனேசன் அவர்களின்**
(ஆயுள்வேதம், ஹோமியோபதி காரைநகர்)
பாசமிகு தங்கை

## செ. செல்வராணி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

தகவல் :-
S. மினி

பூநாறி லேன்,
கொக்குவில். (74787)



## கண்ணீர் அஞ்சலி

எமது ஓய்வு பெற்ற
**தாதிய பயிற்சிப் பாடசாலை அதிபர்**
**திருமதி நவமணி வல்லிபுரம்**
**அவர்களின் அன்புக் கணவர்**

## திரு சிங்காரம் வல்லிபுரம்

(சிரேஷ்ட சட்டத்தரணி)

அவர்களின் (23- 02- 2000 அன்று) மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

**தாதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்,**
**யாழ். போதனா வைத்தியசாலை.**
(74775)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 24 — 02 — 1925



உதிர்வு: 24 — 02 — 2000

அமரர்

## சோதிபதியம்மா கணபதிப்பிள்ளை

அன்பே உருவான அருமை அம்மாவே
தாயெனும் சொல்லின் உட்பொருளாய்
மூன்னூறு நாள் சுமந்து எம்மைப் பெற்று
சீராட்டி, தாலாட்டிய எங்கள் குல விளக்கே!
சோதியும் நீயே; தெய்வமும் நீயே!
தாயும் நீயே! தந்தையும் நீயே!
உள்ளக் கோயிலின் தெய்வமும் நீயே!

24 - 02 - 2000 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தாயாரின் நினைவை ஒட்டி இன்று (25 - 03 - 2000) நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.**

புத்தூர் கிழக்கு,
சாவியாலை. (74798)


## திறப்பு விழா

வரணி மகாவித்தியாலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 10. 00 மணிக்கு சிறுவர் பூங்கா திறப்பு விழாவும் கல்வி உபகரணக் கண்காட்சியும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் தென்மராட்சிக் கல்விப் பணிப்பாளர் வ; செல்வராஜா பிரதம விருந்தினராகவும், பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. கணேசன் சிறப்பு விருந்தினராகவும் தொழில் நுட்ப உத்தியோகத்தர் சு. கணேசமூர்த்தி கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். (உ.133)

## 'கனவுகள்' கருத்துரை

யாழ்ப்பாணம், மார்ச் 25

சாந்திகத்தினால் நடத்தப்படும் உளவளத் துறைசார்ந்த கருத்தரங்கு இன்று பிற்பகல் 3 மணிக்கு கச்சேரி–நல்லூர் வீதியில் அமைந்துள்ள சாந்திகம் கேட்போர் கூடத்தில் தலைவர் டாக்டர் என். சிவயோகன் தலைமையில் நடைபெறும்.

இந்தக் கருத்தரங்கில் 'கனவுகள்' என்ற மையப் பொருளில் யாழ்.பல்கலைக் கழக உள மருத்துவத்துறைத் தலைவர் பேராசிரியர் தயா சோமசுந்தரம் கருத்துரை வழங்குவார். (உ–4)

## பூங்கன்றுகள் கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 25

திருநெல்வேலி கிழக்கு முடமாவடியில் உள்ள பூங்கனிச் சோலையில் இன்றும் நாளையும் காலை 8 மணி முதல் இரவு 8.30 மணி வரை பூங்கன்றுகளின் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெறும். கண்காட்சிக்குக் கட்டணம் ஏதுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ–3)


**ராஜா**
**யாழ்ப்பாணம்**
3 ஆவது வாரமாக
ரஜனிகாந்த்,
ரம்யாகிருஸ்ணன்,
சௌந்தர்யா, சிவாஜி
மற்றும் பலர் நடித்த
**படையப்பா**
காட்சிகள்: 10.30, 2. 30
(சி/11349)



**லிபேட்டி**
அச்சுவேலி
இன்று மட்டும்
பார்த்திபன், ப்ரீதா,
வடிவேல்
நடித்த
**காக்கைச் சிறகினிலே**
(புதிய வெளியீடு)
காட்சிகள்; 10 30. 2.30
T. P. 070- 212223
070- 212678
Fax No.
0094 - 70212223
(74706)



## பரிசளிப்பு விழா

**ஹற்றன் நஷனல் வங்கியின்**
ஆதரவுடன்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
**சதுரங்கக் கழகத்தினால்**
இன்று நடத்தப்படவிருந்த பரிசளிப்புவிழா
நாளை (26-03-2000) ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2.00 மணிக்கு
நடைபெறும் என்பதனைச் சகல பாடசாலைகளுக்கும் அறியத்தருகின்றோம்.

**– Hatton National Bank**

(சி/11521)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர்
**திரு. க. ஜெயானந்தன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

## சுப்பையா கதிரித்தம்பி

அவர்களின் மறைவை யொட்டி துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

**ஆசிரியர்கள், மாணவர்கள்**
யா/திருநெல்வேலி
இந்து தமிழ்க்கலவன் பாடசாலை
திருநெல்வேலி.
(11527)



## 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



## திருமதி இராசையா சின்னராசி

உதிப்பு: 15-1-1944
உதிர்வு: 10-2-2000

நாற்பத்தைந்து நாள்கள் நகர்ந்தனவோ!
பேரக்குழந்தை அம்மம்மாவென்று
ஆர்ப்பரிந்து அழைக்குமுன்
போர்க்கொடுமை உந்தனையும்
விட்டுவைக்கல்லை.
கூற்றுவனின் பாசக்கயிறோ
ரவைவடிவாய் உன்கதை முடித்ததுவோ!
யாரேனும் நினைக்கவில்லை
பாதிவயதில் இப்படியாகுமென்று!
ஏங்கித் தவிக்கின்றோம்
இனியுமுன் முகத்தை........!

கடந்த 10—2 2000 வியாழக்கிழமை கல்வியங்காடுதனில் எம்மையெல்லாம் தவிக்கவிட்டு பிரிந்த எங்கள் குடும்பத் தலைவியின் இறுதிக் கிரியைகளில் கலந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் தொலைத்தொடர்பு, தபால், தந்திமூலம் அனுதாபம் கூறியவர்களுக்கும் சகலஉதவிபுரிந்தவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (25—3—2000) சனிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா நற்சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனை என்றென்றும் இறைஞ்சிடுவோம்.

**குடும்பத்தினர்.**

நாவலடி,
உடுப்பிட்டி. ]74760[



## வந்துவிட்டது!

இலகுவானமுறையில் சித்தியடைய வழி

## அல்பாவின் - ALFA - 2000

**தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்**

சித்தியடைய இலகுவான வழி, பாடத்திட்டத்திற்கு அமைய வினாக்கள் அடங்கிய வினாப்பத்திரம் விடைகளுடன் விற்பனையாகின்றன. மாதம் இருமுறை வெளியாகும். தவறவிடாதீர்கள்! முந்திக்கொள்ளுங்கள்!

**கிடைக்குமிடங்கள்:–**

1. தயா அச்சகம், 138, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
2. பொஸ்கோ புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
3. கலா புத்தகசாலை, தாவடி, சுன்னாகம்.
4. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(74791)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## நாடகம்

வானொலியில் 'அடிபதிலடி' நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள். 1. யாழ்ப்பாணம் சிறுகதைத்தொகுப்பு 2. யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடகநூல் 3. நாடகம் எழுதுவது எப்படி? ரூபா 50. (74647)

## ஆங்கிலக் கல்வி

G.C.E.(O/L) ஆங்கிலத்தில் சித்தியடையாதவர்களுக்கும் சித்தியடைந்தவர்களுக்கும் அரச, தனியார் துறைகளில் தொழில் செய்பவர்களுக்கும் மேலதிக அறிவைப் பெறுவதற்கும், G.C.E. (A/L) ஆங்கிலப் பரீட்சைக்குப் பயிற்றுவிக்கவும். இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். விளம்பர இல. 1030 மே/பா. உதயன். (74630)

## விற்பனைக்கு

கே. கே. எஸ் வீதியில் 70 அடி நீளமும் 15 அடி அகலமும் கொண்ட 273 ஆம் இலக்க கடைக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: இல. 1026, மே/பா உதயன். (74545)

National (Japan) Deck (N.V-450 EN) உம் Volks wagen 8 ஸ்ரீ தொடர் காரும் உடன் விற்பனைக்கு. பார்வையிடும் நேரம் சனி, ஞாயிறு பிற்பகல் 3.00 - 5.00 வரை. தொடர்பு இல. 67, செட்டித்தெரு, நல்லூர். (74698)

சவுதியில் இருந்துகொண்டு வரப்பட்ட நல்ல நிலையில் உள்ள NATIONAL AIR CONDITIONER BTU 12000 விற்பனைக்கு உண்டு. JAPAN தயாரிப்பு. தி. சூரியகுமாரன், 70, காரைக்காட்டு வீதி, பூநாறி மரத்தடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (74728)

## புறொயிலர்

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். இல. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர்வளவு) (74664)

## மரக்கன்றுகள்

மா, பலா, தோடை, தேசி, கமுகு, குறோட்டன்ஸ், றோஸ், செம்பரத்தை மற்றும் பூங்கன்றுகளும். Concrete பூச்சாடிகளும் கன்றுகளுக்குரிய 1 1/2-2அங்குல Concrete கல்லுகளும் விற்பனைக்கு உண்டு. தினமும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (74669)

## வியாழ மாற்றம்

V.A. சிவராசா வெளியிட்ட 02-06-2000 இல் நிகழும் விண்ணில் வியாழமாற்றம் மண்ணில் உங்கள் "யோகபலன்கள்" மற்றும் 2000 புது வருஷ பலாபலன்கள் என்று கேட்டு வாங்குங்கள். எங்கும் விற்பனையாகின்றன. 152 B, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (74734)

## கற்பித்தல்

ஆண்டு 1-5 வரை (புலமைப் பரீட்சை உட்பட) 3 கிலோ மீற்றர் சுற்றாடலுக்குள் வசதிக்கு ஏற்ற வகையில் வீடுகளுக்கு வந்தோ அல்லது தனியார் கல்வி நிறுவனங்களுக்கோ அதிகாலையிலோ, மாலையிலோ வந்து சகல பாடங்களும் கற்பிக்கப்படும். தொடர்பு: த. இராமநாதன் (இளைப்பாறிய ஆசிரியர்), பூம்பத்தை வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. (74654)

## கைச்சங்கிலி தவறிவிட்டது

அரியாலை கனகரத்தினம் வீதியிலிருந்து வெட்டுக்குளம் பிள்ளையார் ஒழுங்கை நாயன்மார்க் கட்டுக்கிடையில் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. தயவு செய்து கண்டு எடுத்தவர்கள் மனிதாபிமான முறையில் தந்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். வே. பேரம்பலம் 138, கனகரத்தினம் வீதி, அரியாலை. (74744)

## இறைச்சிக்கோழி விற்பனை

Broiler, Cullbirds இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். நியாயமான விலை, நுட்பமான நிறுவை. தொடர்புகளுக்கு: 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (74668)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு: இல-40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (74726)

இறைச்சிக்கோழி (Broiler) கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் (சின்னக்கடை, அருகில்) (74729)

## ஆடுகள் விற்பனை

சுத்தமான ஜமுனாபாரி ஆடுகள் மறிக்குட்டிகள், கடாய்க்குட்டிகள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர், வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி.நல்லூர். (74672)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 04 - 07 - 1922

மறைவு 24 - 02 - 2000

**திருமதி முத்தம்மா வேலுப்பிள்ளை**

**இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மாசாந்தி அடைய எல்லாம் வல்ல விஸ்வலிங்க விநாயகனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.**

**பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தகவல்:
*த. கதிரமலை,*
*63, முருகமூர்த்தி வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

(74764)

## அறுவடைத் தரிசனம் - 2000

தெய்வீக சுகமளிக்கும் சுவிசேஷ எழுப்புதல் கூட்டம்

தேவ செய்தி வழங்குபவர்: **போதகர் வின்சன் சகாயநாதன்**

**றொறண்டோ அறுவடை மிஷனறி சபை, கனடா.**

இடம்: **கலையரங்கு, மருதனார்மடச் சந்தி**
காலம்: **இன்று 25-03-2000 சனிக்கிழமை**
நேரம்: **பிற்பகல் 3.00 மணி**

*** யாவும் இலவசம் ***

**இயேசு உங்களை அழைக்கின்றார்.**

(74661)

# The Barbara Mulvaney Computer Training Center

758, Hospital Road, Jaffna.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

மகளிர் மட்டும்

மகளிரால் மகளிருக்கென பிரத்தியேகமாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் மேற்பார்வையின் கீழ் தொடர்ந்தும் இயங்கி வரும்

## பாபறா மல்வேணி கணனிப்பயிற்சி நிறுவனத்தில்

உங்களை இணைத்துக் கொள்ளுங்கள்

**கற்கை நெறிகள்:**

- Diploma in Microsoft Office - 6500.00
- Certificate Courses

| | | |
|---|---|---|
| MS Word | - | 1750.00 |
| MS Excel | - | 1750.00 |
| MS Access | - | 1750.00 |
| MS Power Point | - | 1500.00 |
| Windows Operating System | - | 1750.00 |

- அலுவலக உத்தியோகத்தர்கள்
- பாடசாலை மாணவ, மாணவிகள்

ஆகியோருக்கான பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்தப்படும்.

- Computer printing & stencil cutting செய்து கொடுக்கப்படும்

**உங்கள் பதிவுகளை 05-04-2000 ற்கு முன்னர் உறுதிப்படுத்திக் கொள்ளவும்.**

(74693)

# 4 ஆவது நிறுவன தி

## காத்திரமான பங்களிப்பு

எமது பிரதேசத்தில் கணனிக் கல்வியை அறிமுகப்படுத்தி, மாணவர்களுக்கும் தொழில் துறைசார் பணியாளர்களுக்கும் கணனி அறிவையும் அது தொடர்பான பிற துறைகளின் அறிவையும் வழங்கிவருகின்ற முன்னோடி நிறுவனமாக I.I.S நிறுவனம் திகழ்கின்றது. மேலும் இந்நிறுவனம் வேறு பல தொழில் நிறுவனங்களுக்கும் தொழில்சார் சேவைகளையும் அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

உலகின் இன்றைய பொருளாதாரக் கட்டமைப்பை Digital Economy என அழைப்பர். அறிவுசார் பொருளாதார வளர்ச்சிக்கு கணனி அறிவும், அதனுடன் இணைந்த தகவல் தொழில்நுட்ப அறிவும் இன்றியமையாதனவாகும். இதனால் சகலரும் பெற்றுக்கொள்ள வேண்டிய இவ்வறிவை வழங்குவதில் இந்நிறுவனத்தின் வருங்காலப் பங்களிப்பு, இன்றிலும் பார்க்கக் காத்திரமானதாக விளங்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இந்நிறுவனத்தின் பணி மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை,
*துணைவேந்தர்.*

## செயற்திறன் மிக்க நிறுவனம்

உலகளாவிய ரீதியில் தகவல் தொழில் நுட்பத்தில் தனது ஆதிக்கத்தினைச் செலுத்திவரும் கணனித்துறையில் யாழ்.மாவட்டத்திலும் வளரச்சிறப்பாக சேவையாற்றி வரும் Institute of Informatics Studies நிறுவனம் தனது 4 ஆவது நிறுவன தினத்தைக் கொண்டாடுவதைக் கேள்வியுற்று பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்த நிறுவனத்தோடு நெருங்கிய தொடர்புடையவன் என்ற வகையில் மிகக் குறுகியகாலத்தில் தரமான சேவையை வழங்கி இன்று மாபெரும் விருட்சமாகக் கிளைகள் பலவிட்டு வேரூன்றி இருப்பதைப் பார்த்து பெருமித மடைகின்றேன். அந்தவகையில் இந் நிறுவனத்தின் நிறுவன தினத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவது எனக்குக் கிடைத்த பெருவாய்ப்பாகவே கருதுகின்றேன். இந் நன்னாளில் நிறுவனத்தினையும் நிறுவன தினத்தில் சான்றிதழ் பெறவிருக்கும் மாணவர்களையும் வாழ்த்தி இறையாசியை வேண்டி நிற்கின்றேன்.

வே.பொ. பாலசிங்கம்.
*மாநகர ஆணையாளர்,*
*யாழ்ப்பாணம்.*

## I.I.S. ஓர் வரப்பிரசாதம்

இன்று உலகம் ஒரு குக்கிராமமாக மாறிவிட்டது. தகவல் தொடர்பில் கணனியின் பங்கு இச்சாதனையை ஏற்படுத்தி உள்ளது. எந்த தேவையாக இருந்தாலும் உடனே அத்தனையும் பெற உலகமானது 'இன்ரநெற்' எனப்படும் வலைப்பின்னலினால் சூழப்பட்டுள்ளது. இத்தனை சாதனைக்கும் சூத்திரதாரி யார் என்றால் கணனி என்ற விடை ஏகோபித்த முடிவாக வெளிவரும். இத்தகைய கணனிக் கல்வியை வழங்குவதில் கடந்த பல ஆண்டுகளாகப் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து முன்னேறிவரும்; I.I.S. நிறுவனமானது தனது 4ஆவது நிறுவன தின நிகழ்வைக் கொண்டாடுவதை இட்டுப் பேருவகை அடைகின்றேன். இந்நிறுவனம் தனித்துக் கணனிக் கல்வியை மட்டுமல்லாது கணனி சார்ந்த பல சேவைகளையும் வழங்குவதைக் கண்டு பெருமிதம் அடைகின்றேன். எல்லாத் தேவைகளுக்கும் கொழும்பை எதிர்பார்த்த காலம் மலையேறிப்போய்விட்டது. 'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்பதற்கு I.I.S. இலக்கணம் வகுத்து நிற்கின்றது. அந்த வகையில் I.I.S. யாழ். மாவட்ட மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்று கூறுவதில் மிகை ஏதும் இல்லை. இந்நாளில் இந்நிறுவனம் இனிவரும் காலங்களிலும் சிறப்பாகச் செயற்பட்டுத் தனது தன்னலமில்லாத கணனிச் சேவையைத் தொடர வேண்டும் என வாழ்த்துவதோடு, இத்தினத்தில் சான்றிதழ் பெறவிருக்கும் கணனி வல்லுநர்களையும் மனமார வாழ்த்துகின்றேன்.


Eng. S. A. GNANENTHIRAN
B. Sc. Eng. (S.L.) A. M. I. E. (S.L.)
P.G. Dip. in Ed. (S.L.) E.S.B.M. (S.L.)
REGIONAL OFFICER,
JAFFNA REGIONAL CENTRE,
THE OPEN UNIVERSITY OF
SRILANKA.

எந்திரி ச. ஆ. ஞானேந்திரன்
*B. Sc. Eng. (S.L.) A. M. I. E. (S.L.)*
*(பிராந்திய இயக்குநர்)*
*யாழ். பிராந்திய நிலையம்,*
*இலங்கைத்திறந்த பல்கலைக்கழகம்.*

INSTITUTE OF INFORMATICS STUDIES
Jaffna SriLanka

Institute of
Affiliated

"கணனி அரியாசனத்தில் இருத்தி, இவ
உலகோடு எம்மை சரியாசன



1996 ஆம் ஆண்டு சிறிய விதைய
பெருவிருட்சமாகப் பரிணாம வளர்
எமது கணனிக்கல்வித் தேவையை
இன்று தனது நாலாவது அகவை
தாய்க்கு நன்றியுடன் இவ்விதழ் ச


**சிறி அமலா நகைமாடம்**
கண்கவர் நகைகளின் சங்கமம்
74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

JEYASUNJAN CONSTRUCTION
Specialist in construction in Jaffna peninsula
Nanthavanam,
Urelu East, Chunnakam,
SriLanka.

**NIDUSHA STUDIO & VEDIO**
Specialist in Photography & Vedio
Main Street,
Nelliyady.

சன்லைற் றைக்கிளினர்ஸ்
60 வருட றைக்கிளினர்ஸ் சேவை
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.
பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

புலவர் வீடியோ & ஒடியோ
நவீன தொழில்நுட்பத்தோடு கூடிய
ஒளி, ஒலிச் சேவை
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

**GANGAI PRESS**
Specialist in Computer Printing Works
Navalar Road,
Jaffna.

# தின விழாச் சிறப்பிதழ்



itute of Informatics Studies

IIS

Telephone No: 2831
E-Mail: iis@sltnet.lk.

Affiliated with IMIS, UK


ல் இருத்தி, இவள் தகவல் தொழில்நுட்ப (IT)
ம்மை சரியாசனம் வைத்த தாய்"




ிய விதையாக விதைக்கப்பட்டு இன்று
ம வளர்ச்சி பெற்று யாழ் மாவட்டத்தில்
தேவையை சிறப்பாகப் பூர்த்தி செய்து
அகவை காணும் எமது நிறுவனத்
்விதழ் சமர்ப்பணம்.

சிறப்பிதழ் அமைப்பு
மாணவர் மன்றம், IIS.

## கணனிக் கல்வியின் வழிகாட்டி

கணனித்தொழில் நுட்பம் உலக நாடுகளில் அனைத்துத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தி வளர்ந்து வரும் அதேவேளை அரசியல், இராணுவ, பொருளாதாரக் காரணிகளால் எமது பிரதேசத்தில் அதன் வளர்ச்சி தடைப்பட்டுப் போயிருந்த காலப்பகுதியிலும் கூட எம் மக்களுக்கு அந்த அறிவை வளர்க்கும் நோக்குடன் பல சிரமங்களுக்கு மத்தியிலும் சேவை மனப்பாங்குடன் செயற்பட்டு வரும் Institute of Informatics Studies நிறுவன தின நிகழ்விற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதை இட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பல்வேறு காரணங்களால் எட்டாக்கல்வியாக இருந்த கணனிக் கல்வி '2000ஆம் ஆண்டில் சகலருக்கும் கணனி' என்ற அடிப்படையில் 5000 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கியிருப்பது நிறுவனத்தின் சேவை உணர்வானது வெள்ளிடை மலையாகத் தெரிகின்றது. அந்தவகையில் நிறுவனத்தின் சேவை மேலும் தொடர்ந்து யாழ்.மாவட்ட மாணவர்களுக்குச் சேவ்வயினை வழங்க வேண்டுமென்று மனமார வாழ்த்துகின்றேன்.

க.சண்முகநாதன்.
*அரச அதிபர்*

## Scholerships for Poor

We are happy to be associated with the Institute of Informatics Studies in their 4th Institute day celebrations.

Members of the staff of this Institute are conducting classes in computer for our local staff and we are satisfied with their performance.

Glad to note that many bright students from poor homes are given scholarships to further their studies in Computer by this Institute, which is good motivation.

The demand for computer studies in this part of the peninsula is ever increasing and we are sure that Institutes of this nature will reach out to meet those demands.

Wishing the Institute day all success.

Rob. Drouen
Head of sub Delegation
I.C.R.C. Jaffna

## தலையாய நிறுவனம்

கணனிக் கல்வியியல் நிறுவனமாகிய ஐஐஎஸ் இற்கு ஆண்டு நிறைவையொட்டி ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

21ஆம் நூற்றாண்டு மலர்ந்துள்ள இவ்வேளையில் சமூகத்தில் தொழில்நுட்பத்தின் சாதனைகள் மிக வேகமாக வளர்ந்து வருகின்றன. இச் சாதனைகளுக்கு முகம் கொடுத்து இத்துடன் சரிசமமாகச் செயல்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அறிவை வழங்கிவருகின்ற தலையாய நிறுவனங்களில் ஒன்றாக இது மிளிர்ந்து வருகின்றது. எமது பிரதேசத்தில் தொடர்ந்து பல ஆண்டுகளாகக் கணனித்துறையில் தனித்து இயங்கி வந்துள்ள இந்நிறுவனம் மிக அண்மைக் காலங்களில் புதிய தகவல், அறிவு முறையை விருத்தி செய்து பல கிளை நிறுவனங்களுடன், பல்லாயிரக்கணக்கான மாணவர்களைப் பயிற்றுவிப்பதுடன் பல்வேறு புதிய துறைகளைப் புகுத்தி எமது கல்வியுலகிற்குத் தொண்டாற்றி வருகின்றது. அந்நிறுவனத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழாவில் அந்நிறுவனம் மென்மேலும் பல புதிய துறைகளைப் புகுத்திக் கிளைவிட்டு வளருகின்ற ஒரு விருட்சமாக, கற்பகதருவாக வளர வேண்டுமென நான் மனமார வாழ்த்துகின்றேன்.

திருமதி.எஸ். மகாலிங்கம்.
வலயக் கல்விப்பணிப்பாளர்.
யாழ்ப்பாணம்.

## தனித்துவமான பங்கு

குடாநாட்டில் பல்கலைக்கழக மட்டத்தில் மட்டுமே பேசப்பட்டு வந்த கணனிக் கல்வியை சமூக மட்டத்துக்கு விரிவுபடுத்தியதில் தனியார் கல்வி நிறுவனங்களுக்குப் பெரும் பங்குண்டு. இத்தனியார் கல்வி நிறுவனங்களில் I.I.S. நிறுவனத்துக்குத் தனித்துவமான இடமுண்டு.

புத்தாயிரம் ஆண்டில் 5000 மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்கியமையின் மூலம் பொருளாதார வளம் குன்றிய குடும்பங்களைச் சார்ந்த பெருமளவானோருக்கும் கணனிக் கல்வியை சாத்தியமாக்கிய இவர்கள், கடந்த ஆண்டில் எமது சங்க ஏற்பாட்டில் பல்கலைக்கழகப் போதனைசாரா ஊழியர்களுக்கும் கணனி பற்றிய அடிப்படைப் பயிற்சியொன்றையும் வழங்கியிருந்தனர்.

இவற்றினைக் கருத்தில்கொண்டு இந்நான்காவது நிறுவன நாளில் நன்றியுடன் கூடிய வாழ்த்துக்களை ஊழியர் சங்கம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறது. புதிய நூற்றாண்டில் குடாநாட்டில் கணனித்துறையின் விருத்திக்குத் தங்கள் காத்திரமான பங்களிப்பு மேலும் தொடர மனமார வாழ்த்துகின்றோம்.

சி. கலாராஜ்
தலைவர்,

பல்கலைக்கழக ஊழியர் சங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்.


VEDIO
Vedio

துபா அச்சகம்
தொலைத் தொடர்பு சேவை
அச்சு வேலைகளின் முன்னோடி
138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

Sivaganeshan Stores
(Dealer in Textiles)
Specialist in Wedding Sarees
41, Grand Bazzar,
Jaffna.

எஸ். எஸ். யசோதரன் ஆட்ஸ்
சித்திர வேலைப்பாடுகளின் கலையகம்
185, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்.
(வின்சர் தியேட்டர் முன்பாக)

SS
g Works

லிங்கன் கிறீம் கவுஸ்
சிற்றுண்டிகள் மற்றும் குளிர்பானங்களுக்கு
ஒரே இடம்
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

BOSECO
Distributors of Stationeries
3. Modern Market, Hospital Road, Jaffna.
252, Point Pedro Road, Nalur, Jaffna.

மேவின் தையல்நிலையம்
தையலில் மையல் கொள்ள வைக்கும்நிலையம்
92, யாழ். வீதி,
யாழ்ப்பாணம்.

# சமாதானத்தின் கதவுகள் அகலத் திறக்கட்டும்



அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே...!

தொடரும் யுத்தத்தை நிறுத்தி, சமாதானத்தையும் அமைதியையும் நாம் நடைமுறையில் அனுபவிப்பதற்கான சந்தர்ப்பமொன்று இப்போது மீண்டும் எமக்குக் கிடைத்திருக்கின்றது. கடந்த காலங்களில் கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் நம்மவர்கள் சரிவரப் பயன்படுத்தத் தவறிவிட்டார்கள். அதன் விளைவுகளால் அழிவுகளையும் அவஸ்தைகளையும் மட்டும்தான் நாம் இன்றுவரை சந்தித்திருக்கின்றோம். கடந்த காலத் தவறுகளைக் கண்டறிந்து கற்றுக் கொள்ளாவிட்டால் சமாதானத்திற்குப் பதிலாக சுடுகாட்டைத்தான் நாம் காணமுடியும் என்பதை நாம் உணரவேண்டும்.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இருதரப்பினருமாகிய அரசும் புலிகளும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கே வரவேண்டும். மக்களாகிய உங்களோடு இணைந்து எமது கட்சியும் இதை வலியுறுத்த விரும்புகின்றது. ஏனெனில், கடந்த காலப் பேச்சுவார்த்தைகளின்போது விதிக்கப்பட்ட நிபந்தனைகள்தான் சமாதான முயற்சிகளை முறித்துக் கொண்டன. பூநகரி முகாமை அகற்றினால்தான் பேச்சுவார்த்தை என்று புலிகள் நிபந்தனை விதித்தபோது அப்பேச்சுவார்த்தை முறிவடைந்தது. அதன்பின்பு அரசபடைகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி அங்கு பூநகரிக்கு நிகரான பல முகாம்களையும் சோதனைச் சாவடிகளையும் அமைத்திருக்கிறார்கள். அதேபோல் அரசும் எந்தப் பூநகரியை விட்டுக் கொடுக்கமாட்டோம் என்று அடம்பிடித்ததோ அதே பூநகரியைப் புலிகளிடம் இழந்திருக்கிறது. மொத்தத்தில் இரு தரப்பினரும் ஒரு குறுகியபார்வைக்குள் தம்மைச் சுருக்கிக் கொண்டு தமது அரசியல், இராணுவ நலன்களையே முன்னிலைப்படுத்தியிருக்கிறார்கள்.

சமாதானம் என்பது விட்டுக்கொடுத்தல், உறுதியாயிருத்தல் ஆகிய இரண்டு வழிமுறைகளுக்கூடாகத்தான் உருவாகமுடியும் என நானும் எனது கட்சியும் நம்புகிறோம். அனுபவங்களில் இருந்துதான் போதனைகள் பிறக்கின்றன. விட்டுக்கொடுத்தல் என்பது சரணாகதி அடைவதென்பதல்ல அர்த்தம். மாறாக, பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்ற இரு தரப்பினருக்கும் இடையிலான நல்லெண்ணங்களை பரஸ்பரம் புரிந்து கொள்வதற்கு அது உதவுகின்றது. எந்த விடயத்தில் விட்டுக் கொடுத்துப்போவது, எந்த விடயத்தில் உறுதியாயிருப்பது என்பதில் தமிழ் பேசும் தரப்பினர் தெளிவாக இருந்தால் போதுமானது. அழிவுகளிலிருந்து மக்களாகிய உங்களைப் பாதுகாக்க வேண்டுமேயானால் இது போன்ற முடிவுகள்தான் தேவைப்படும் என்பதை நாம் உணரவேண்டும்.

இயல்பு வாழ்க்கை திரும்பினாலே பேசமுடியும் என்று புலிகள் இப்போது நிபந்தனை விதித்துள்ளார்கள். யுத்தம் தொடர்கின்ற வரைக்கும், மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் தாக்குதல்கள் நடைபெறுகின்ற வரைக்கும் இயல்பு வாழ்க்கையென்பது சாத்தியமற்றதொன்றே. ஆகவே முதலில் தேவைப்படுவது ஒரு யுத்தநிறுத்தம். அதுவே பேச்சுவார்த்தைக்கான அடித்தளமாகவும் அமையும். பேச்சுவார்த்தையின்போது சமாதான முயற்சிகளை முறித்துவிடக்கூடியதான கோரிக்கைகளைத் தவிர்ப்பதும், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படைக் கோரிக்கைகளை முன்வைப்பதுமே முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். ஏனெனில், இறுதித் தீர்வை எட்டும் வரை இருதரப்பினர் மத்தியிலும் நம்பிக்கையீனங்களும் சந்தேகங்களுமே மேலோங்கி நிற்கும். இந்நிலையில் படைகளை விலக்கிக் கொள்ளுமாறும் முகாம்களை அகற்றிக் கொள்ளுமாறும் விடுக்கப்படுகின்ற கோரிக்கைகள் மீண்டும் யுத்த சூழலையே தோற்றுவிக்கும். ஒரு நிரந்தரத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது ஏற்படக்கூடிய அசௌகரியங்களை தற்காலிகமாகத் தாங்கிக் கொள்வதற்கும் நாம் தயாராகவே இருக்கவேண்டும் எனவும் நம்புகின்றேன். பேச்சுவார்த்தை நீண்டகாலத்திற்கு இழுபட்டுச் செல்வதையும் தவிர்க்கவேண்டும் என்பது வலியுறுத்தப்படவேண்டிய ஒரு விடயமாகும்.

மறுபுறத்தில் ஆயுதங்களைக் கைவிட்டு வந்தால் மட்டுமே பேசமுடியும் என்று புலிகள்மீது நிபந்தனை விதித்து, வழமையான பல்லவியை அரசு பாடமுற்படுமேயானால் அதுவும் சமாதான முயற்சிக்குக் குறுக்கே எழுப்பப்படுகின்ற ஒரு தடைச் சுவராகவே இருக்கமுடியும். இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரந்தான் நாமும் ஆயுதப் போராட்டத்தை இடைநிறுத்திக் கொண்டவர்கள். ஆனால் அந்த ஒப்பந்தம் செயலிழக்கச் செய்யப்பட்ட பின்பு புலிகளால் நிராகரிக்கப்படுகின்ற போராட்டத்தின் இன்னொரு பரிமாணமான ஜனநாயக வழிமுறைக்குள் நின்று நாம் போராடியும் வாதாடியும் வருகின்றோம். ஏனெனில் போராட்டத்தில் பல பரிமாணங்கள் இருக்கின்றன. அதில் ஒன்றுதான் ஆயுத அழுத்தம். ஆனால் புலிகளைப் பொறுத்தவரையில் ஒரு போராட்டத்தில் இருக்கக்கூடிய பல்வேறு பரிமாணங்களில் ஆயுத அழுத்தத்தை மட்டுமே நம்பியிருக்கின்றனர். ஆகவே நிபந்தனையற்ற பேச்சுக்குப் புலிகள் வரும் பட்சத்தில் அரசு, 'ஆயுதக்களைவு' விடயத்தில் விட்டுக் கொடுத்துப்போவதே ஆரோக்கியமானதாக இருக்கும் என்று கருதுகிறேன். அதேவேளை புலிகள் ஆயுதப் போராட்டத்தை இடைநிறுத்திப் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என்பதையும் நாம் வலியுறுத்த விரும்புகிறோம்.

இன்னொரு நிபந்தனையையும் புலிகள் விடுத்திருப்பதை நாம் அறிவோம். அது, தம்மோடு மட்டுந்தான் அரசு பேசவேண்டும் என்ற நிபந்தனையே. எமது கட்சியை (ஈ.பி.டி.பி) பொறுத்தவரையில், யுத்தநிறுத்தம் சம்பந்தமான விடயத்தில் புலிகளோடு மட்டும் அரசு பேசவேண்டும் என்பதும், இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரோடும் அரசு பேச வேண்டும் என்பதுமே. ஆயுத யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள் என்ற வகையில் புலிகளும் முக்கிய தரப்பினராகவே இருக்கின்றார்கள். அதனால் யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் புலிகளோடு மட்டும்தான் யுத்தநிறுத்தம் தொடர்பாக அரசு பேச வேண்டும். ஆனால் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஏனைய தரப்பினருக்கும் இருக்கின்ற பங்கினையும் அக்கறையினையும் யாரும் மறுத்துவிட முடியாது. ஒரு ஜனநாயகச் சூழலில் ஏகப்பிரதிநிதிகள் என்ற கருத்துக்கு இடமிருக்க முடியாது. உங்கள் பிரதிநிதிகள் யாரென்பதைத் தீர்மானிப்பவர்கள் மக்கள் சக்தியாகிய நீங்கள்தான். ஒரு சுயாட்சிப் பிரதேசமாக அமையப் போகின்ற 'ஈழமண்டலத்தில்' மக்களாகிய உங்களது மாற்றுக் கருத்துக்களுக்கு இடமிருக்க வேண்டும். பலகட்சி ஜனநாயகமுறை இருக்கும் இடத்திலேயே அது சாத்தியப்படும் என்பதுதான் உண்மை நிலை. இக்கருத்தினை நாம் இப்போதிருந்தே வலியுறுத்தத் தவறினால் எதிர்காலத்தில் ஜனநாயக உரிமைகளை எம்மால் பாதுகாக்க முடியாமல் போய்விடும்.

ஏனைய சில தமிழ்க்கட்சிகள் இவ்விடயத்தில் தெரிவிந்திருந்த கருத்துக்களையும் நீங்கள் அறிவீர்கள். பேச்சில் ஒன்றையும் நடைமுறையில் இன்னொன்றையும் அவர்கள் கடைப்பிடிப்பதையே உணரமுடிகிறது. புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு, தாம் ஒதுங்கிக் கொள்வதாகச் சொன்ன விடயம் உண்மையாயின் அவர்கள் அரசதரப்பினரோடு தற்போது பேச்சு வார்த்தையில் ஈடுபடுவது எதற்காக...? தேர்தல்களில் பங்கெடுப்பதும் பதவிகளில் இருப்பதும் எதற்காக...? அறிக்கைகளும், கண்டனங்களும் எதற்காக...? தமது கட்சிகளை இன்றுவரை கலைத்துவிடாமல் பாதுகாப்பது எதற்காக...? புலிகளோடு இணைந்து இவர்கள் போராடவேண்டும், இன்றேல் அடையாளம் தெரியாமல் ஒதுங்கிக் கொள்ளவேண்டும். இதில் எதைச் செய்யவும் இவர்கள் தயாரில்லை. ஆகவே, அரசியலுக்காகவே அவர்களது அறிக்கைகள் என்பதை நாம் உணரலாம். உங்களையும் ஏமாற்றி, புலிகளையும் ஏமாற்ற நினைக்கும் செயல்தான் இது.

அரசியலுக்காக மக்களல்ல, மக்களுக்காகவே அரசியல். ஈ.பி.டி.பியினராகிய நாம் என்றும் எதிலும் வெளிப்படைத் தன்மையையே விரும்புகின்றோம். நாம் புலிகளுக்கெதிரான இரகசியப் பிரசாரங்களில் ஈடுபடுபவர்களல்ல படையினரோடு இணைந்து புலி பிடிக்கச் செல்பவர்கள் அல்ல. புலி உறுப்பினர்களின் கழுத்தை வெட்டிப் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களும் அல்ல. புலிகளுக்கென்று சிறைக்கூடம் வைத்திருந்தவர்களும் அல்ல. முரண்பாடான விடயங்களை இனங்கண்டு வெளிப்படையாகவே தெரிவிக்கும் நேர்மையான அரசியலையே எமது கட்சி பின்பற்ற வேண்டும் என்பதே எனது விருப்பம் ஆகும். கருத்துக்களைக் கருத்துக்களால் சந்திப்பதுதான் ஆரோக்கியமான விடயமாக இருக்கமுடியும்.

மக்களாகிய உங்களின் சார்பாகவும், உங்களின் சுபீட்சத்துக்காகவுமே, இன்று நாமும் அரச தரப்போடு பேசி வருகின்றோம். இதுவரை கால இழப்புக்களினாலும் உழைப்புக்களினாலும் மட்டுமே இன்று நாம் உறுதியோடு அரசுடன் பேச முடிகிறது. இந்த இழப்பிற்கும் உழைப்பிற்குமுரிய சகல தரப்பினருக்கும் எம்தேசம் என்றும் தலைவணங்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

அரைகுறைத்தீர்வுகளில் கையொப்பமிடுவதற்கு நாம் தயார் இல்லை. எமது சுயாட்சிக் கொள்கையில் நாம் உறுதியாயிருக்கின்றோம். ஏனைய தரப்பினரைவிட நாம் வேறுபட்ட கோரிக்கைகளையும் கொண்டிருக்கின்றோம். அதிகாரப் பகிர்வின் மூலம் வடக்கு – கிழக்கிற்கு – ஈழமண்டலத்துக்கு விசேட அதிகாரத்தினை நாம் கேட்கின்றோம். எமது சுயாட்சி அதிகாரத்தின் கீழுள்ள பொலீஸ்படை மட்டும் போதாது. இராணுவம், வான்படை, கடற்படை ஆகியவற்றிலும் தமிழ்பேசும் பிரிவுகள் அமைக்கப்படவேண்டும்.

அம்பாறை உட்பட வடக்கு – கிழக்கு இணைந்த ஒரே அலகை தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற நிலப்பரப்பு ஓர் அகத்தன்னாதிக்கம் உடைய அலகாக இருத்தல் வேண்டும்.

மேற்கூறிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதி, நீதி, காணி, கல்வி, அதிகார விடயங்களிலும் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றோம். அதைவிட இலங்கை ஒரு மதசார்பற்ற நாடாக இருத்தல் வேண்டும் என்றும் வலியுறுத்திவருகின்றோம். அரசுக்கு நாம் கொடுத்திருந்த 19 பக்க அறிக்கையில் மலையக மக்கள் வடக்கு – கிழக்கிற்கு வெளியே வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் ஆகியோரது விடயங்களிலும் எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

நோர்வே நாட்டின் சமாதான முயற்சிகளை நான் மனந்திறந்து வரவேற்கின்றேன். அதேநேரம் அரசுக்கும் புலிகளுக்கும் நான் தெரிவிக்க விரும்புவது இதுதான். சமாதானத்தை உருவாக்க இன்றே தயாராகிவிடுங்கள். இன்றேல் நாளை இதைவிடத் தடைகள் அதிகமாகிவிடும். எதிர்காலச் சந்ததியினருக்கு மட்டுமல்ல, இன்றைய தலைமுறையினருக்கும் நாம் தேடிக் கொடுக்க வேண்டியது புதைகுழிகளையும் சிறைக்கூடங்களையும் அல்ல. மாறாக சமாதான தேசத்தையே சமாதானத்துக்கான கதவுகளை அகலத்திறந்து விடுங்கள்.

நாம் விரும்புவது ஒடுக்குமுறையோடு உடன்பட்டுப் போகின்ற சமாதானத்தை அல்ல. கௌரவத்துடனான உரிமையோடு வாழமுடிகின்ற சூழலையும் அதற்கான சுதந்திரத்தையுமே. இதற்கான முதலாவது திறவுகோல் யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களிடமே உள்ளது. அதுவே யுத்த நிறுத்தம்.

என்றும் நாம் மக்களின் நண்பர்கள்
தேசத்துக்காகத் தியாகங்களை ஏற்போம்.

*அன்புடன்*

***டக்ளஸ் தேவானந்தா,***
*செயலாளர் நாயகம்*
*ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி*
*(ஈ.பி.டி.பி)*

(74759)

## அறிவித்தல்

### கோபாலசுந்தரம் கணேசா

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட முதலாம் வருட புகுமுக மாணவன் 23—03—2000 அன்று அகால மரணமெய்தினார். இவரது இறுதி அஞ்சலிக் கூட்டம் 26-03 2000 ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு விஞ்ஞான பீடத்தில் நடைபெறவுள்ளது அனைத்து பீட மாணவர்களும் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;

**யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட**
**புகுமுக மாணவ ஏற்பாட்டுக்குழு**

(74812)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 | 23 |
| — | — |
| 11 | 03 |
| — | — |
| 1927 | 1995 |

### க. சின்னத்துரை

(முன்னாள் ஆண்கள் சேணிப் பாதுகாவலர், கீரிமலை)

திதி: 26-03-2000

எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டு ஐந்து சென்றாலும்
என்றென்றும் உம் நினைவு
எம்மை விட்டு அகலாது!

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(சி/11522)

## கண்ணீர் அஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 23 | 23 |
| — | — |
| 04 | 03 |
| — | — |
| 1976 | 2000 |

### கோபாலசுந்தரம் கணேசா

(விஞ்ஞானபீட புகுமுக மாணவன்)

இவரது திடீர் மறைவை யிட்டு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மாணவர்கள்,**
**விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

[74338]

## அரியாலையில் தேடுதல்

யாழ்ப்பாணம், மார்ச் 25

அரியாலை மாம்பழச் சந்திக்கு சமீபமாக நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து அரியாலை மலர்மகள் வீதி, திருமகள் வீதி மற்றும் கனகரட்ணம் வீதி, நடுத்தெரு வீதி ஆகியன நேற்றுச் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டன.

இதேவேளை மேற்படி சம்பவத்தை அடுத்து அந்த வீதியால் சென்ற அரியாலை கண்டி வீதியைச் சேர்ந்த க. தயாபரன் (வயது 20), க. சிவா (வயது 23) ஆகிய இருவரும் படையினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவர்களைக் கைது செய்தமைக்கான 'ரசீது' படையினரால் கையளிக்கப்பட்டுள்ளது.

(உ-7-86)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ். ஹற்றன் நஷனல் வங்கியின் ஆதரவுடன் யாழ். இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம் நடத்திய யாழ். மாவட்ட பாடசாலை தனிநபர் மற்றும் அணிகளுக்கிடையிலான வருடாந்த சதுரங்கச் சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

யாழ். நீதிவான் ஆர். ரி. விக்னராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ய்-5)

## லயன்ஸ்கழக கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 25

லயன்ஸ் கழகத்தின் 9 ஆம், 10 ஆம் பிராந்தியங்களின் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

பிராந்தியத் தலைவர் லயன் ஐ. தங்கேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் பிராந்திய ஆலோசகர் லயன் எஸ். பத்மநாதனும், லயன் சீமாட்டி புஷ்பம் பத்மநாதனும் பிரதம விருந்தினர்களாகப் பங்குபற்றுவர்.

லயன் கே. ஜெயரட்ணம் கௌரவ பேச்சாளராகப் பங்குபற்றுவார்.

(உ-3)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச். 25

வட்டுக்கோட்டை பங்குரு கந்தசுவாமி கோயிலில் சங்காபிஷேகம் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

(உ-3)

## பேரணிக்கு வாழ்த்து

நாட்டில் நிரந்தர சமாதனம் பிறக்கவும், போரின் அவலங்கள் நீங்கவும், எம்மக்கள் வாழ்வில் சுயகௌரவத்துடன் கூடிய அமைதியும், சாந்தியும் நிலைபெற இன்றைய சமாதானப் பேரணி வழிசமைக்கட்டும்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்**
**யாழ். மாநகரசபை**

(சி/11526)

### சுன்னாகம் வர்த்தக சங்க
அங்கத்தவர்களுக்கு

## அன்பான ஒரு வேண்டுகோள்

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான சமாதானப் பேரணி இன்று (25-03-2000) காலை 9-30 மணிக்கு யாழ். நகரில் நடைபெற உள்ளதால் சுன்னாகம் வர்த்தகசங்க அங்கத்தவர்கள் அனைவரும் கதவடைப்புச் செய்து இப்பேரணியில் கலந்துகொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம். இதேதினம் நடைபெறவிருந்த பொதுக்கூட்டம் மேற்குறிப்பிட்ட காரணத்துக்காக மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என்பதனையும் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

சி. செல்வசீலன் (செயலாளருக்காக) ந. அரசரத்தினம் (தலைவர்)
சுன்னாகம் வர்த்தக சங்கம்.

(74781)

23-03-2000 வியாழக்கிழமை அன்று அகாலமரணம் எய்திய எமது கல்லூரி

தரம் 10F மாணவன்

### செல்வன் வாமதாசன் சங்கரதாசன்

அவர்களுக்கு

## எமது கண்ணீர் அஞ்சலி!

மத்தியத்தின் மைந்தனாகி
மேன்மை பெற்று வையமெங்கும்
மணம் பரப்பமுன்னாலே
மென் தளிராய் உதிர்ந்து விட்டாய்
நேற்று வந்தாய் நாளையும் நான்
என் திறமை பொலிவுபெற
ஆற்றுதற்கு காலையிலே
வந்திடுவேன் என்று சென்றாய்
காற்றினிலே வந்தசேதி
கனவாகிப் போகாதோ
தேற்றும் வகை அறியாது
தேம்பித்தும்புகின்றோம்
ஆற்றும் அவன் கழலடியில்
உன் ஆன்மா சாந்தி பெற
மத்தியத்தின் சமூகமே
மன்றாடி நிற்குதையா.

**— யாழ். மத்திய கல்லூரிச் சமூகம்**

(74802)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 | 26 |
| — | — |
| 08 | 02 |
| — | — |
| 1917 | 2000 |

### அமரர் அம்பலவாணர் இராசதுரை

B. A. (Lond)

(முன்னாள் D.R.O. திருமலை, இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர், பரமேஸ்வராக் கல்லூரி)

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு எமது துயரங்களில் பங்கு கொண்ட அன்பு உள்ளங்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பி வைத்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகள் அச்சிட்டு துயரத்தை வெளிப்படுத்தியவர்களுக்கும் மற்றும் சகல விதமான உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

அவரது 31 ஆவது நாள் நினைவு தினமாகிய 27-03-2000 திங்கட்கிழமை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் எமது இல்லத்தில் வந்து சிறப்பித்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

260, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

**- குடும்பத்தினர்**

(74713)


உ

# புதுக் கடைத் திறப்பு விழா

நிகழும் பிரமாதி வருடம் பங்குனி மாதம் 12 ஆம் நாள் இன்று (25 - 03 - 2000) சனிக்கிழமை பகல் 11.19 முதல் 01.1மி மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில் எம்மால் புதிதாக

## சிறீ மாரி நகை மாடம்
## SRI MAREE NAGAI MADAM

எனும் ஸ்தாபனத்தை ஆரம்பிக்க இருப்பதால் நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் சமுகந்தந்து ஆக்கமும் ஊக்கமும் தந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றென்றும் உங்கள் தேவைக்கேற்ற சேவை!

78, கஸ்தூரியார் வீதி,
(லிங்கம் கூல்பார் முன்பாக)
யாழ்ப்பாணம்.

**— ஸ்தாபனத்தினர்**

(74794)

## வேதபாட பரீட்சை' 99
### சான்றிதழ் வழங்கும் வைபவம்

இடம்:- YMCA **மண்டபம்** (கச்சேரி அருகில்)
காலம்:- இன்று **(25-03-2000)** சனிக்கிழமை
பிற்பகல் 3.30 மணி. (புதிய நேரம்)

பரீட்சையில் பங்குகொண்ட மாணவர்கள், பெற்றோர், ஜெப பங்காளர், ஊழியர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கிறிஸ்தவ கீதங்கள்**
**இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெறும்.**

இது கிறிஸ்துவுக்காக இளைஞரின் அழைப்பு

**462, பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**



## IIS தொடரட்டும் உன்பணி

யாழ்.மாவட்ட மாணவர்களின் கணனிக் கல்வியை முன்னெடுப்பதில் கடந்த 4 ஆண்டுகளாகக் காத்திரமான பங்களிப்பை வழங்கி வரும் தனிப் பெரும் நிறுவனமாகிய **IIS** இன்று தனது 4வது நிறுவன தினத்தைக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ் வடைகின்றோம். இந்த நன்னாளில் நிறுவனத்தினையும் நிறுவன தினத்தில் சான்றிதழ் பெறவிருக்கும் மாணவர்களையும் மனமார வாழ்த்துகின்றோம்.

***The proprietor,***
***Twinkle star Chits and Finance.***

## கணனித்துறையின் முன்னோடி

யாழ்.நகரில் கணனிச் சேவையில் அர்ப்பணிப்புணர்வோடு கடந்த பல ஆண்டுகளாகச் செயற்பட்டு வரும் **IIS** நிறுவனம் தனது 4வது நிறுவன தினத்தை கொண்டாடுவதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். கணனிக்கல்வியை யாழ். மாவட் டத்திலே மாணவர் திறம்பட தொடரமுடியும் என்பதை எடுத்துக் காட்டிய பெருமை இந்நிறுவனத்தையே சாரும். அந்த வகை யில் இத்தினத்தில் நிறுவனத்தின் சேவையானது மேலும் சிறப்பாகத் தொடரவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

*Proprietor.*
*K. K. A. Kandaiahpillai stores.*

## மனமார வாழ்த்துகின்றோம்

இன்று தனது 4ஆவது நிறுவன தினத்தைக் கொண்டாடும் கணனிக் கல்வியில் தனக்கென ஒரு முத்திரை பதித்திருக்கும் **IIS** நிறுவனத்தை அதன் சேவை மேலும் பல்லாண்டு காலம் தொடர வேண்டும் என வாழ்த்துவதோடு இத்தினத்தில் தமது சான்றிதழ்களைப் பெறவிருக்கும் மாணவர்களையும் மனமார வாழ்த்துகிறோம்.

*பஸ்ரியன் ஹோட்டல்,*
**37, கண்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## வாழ்த்துகின்றோம்

இன்று முழு உலகமுமே கணனி மயமாகிக் கொண்டிருக்கும் நேரத்தில் எமது யாழ். நகரின் இளைய சமுதாயத்தின் தேவை அறிந்து எவ்வளவோ நெருக்கடிகளுக்கு மத்தியில் கணனிச் சேவையை அறிமுகப்படுத்திப் பலரது பாராட்டையும், அபிமா னத்தையும் பெற்றுத் திகழும் **IIS** நிறுவனம் தனது 4ஆம் ஆண்டு நிறைவைப் பூர்த்தி செய்யும் இவ்வேளையில் மேலும் பல சேவைகளை அறிமுகப்படுத்தி வளம் பெற வாழ்த்துவோர்.

**சுப்பஸோ வீடியோ ஒடியோ அன்ட் ஸ்ருடியோ**
**149, கஸ்தூரியார் வீதி**
**யாழ்ப்பாணம்.**

## வாழ்த்துகின்றோம்

யாழ்.நகரில் தகவல் தொழில்நுட்பத்துறையில் தன்னிக ரில்லாச் சேவையாற்றி வரும் **Institute of Informatics Studies** நிறுவனம் தனது நான்காவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இத்தினத்தில் மேலும் பல தகவல் தொழில்நுட்பத்துறைக் கல்வியை அறிமுகப்படுத்தி அதன் சேவை வளர வாழ்த்து கின்றோம்.

**சீமாட்டி புடைவைக் கடல்,**
**122, மின்சார நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்**

(C/11523)


# மரண அறிவித்தல்

## கந்தையா இராசரத்தினம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

கட்டைப்பிராயைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசரத்தினம் 21.03.2000 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவனேஸ்வரி காலஞ்சென்ற சுமதி, மற்றும் கலா, பாமினி, லோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கியைகள் இன்று (25.03.2000) சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

சண்டிலிப்பாய். (74799)

தகவல்
**க.நவரத்தினராசா.**

## ஆசிரிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் செயலா ளர் நாயகமுமான டக்ளஸ் தேவா னந்தாவுக்கு நேற்றைய தினம் இது குறித்து மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

விண்ணப்பம் கோரப்பட்ட பொழுது ஆரம்பக்கல்வி கற்கை நெறிக்கே அதிகளவானோர் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந் தனர் எனவும் - தற்போது ஏனைய பாடங்களுக்கு விண்ணப்பித்தவர்க ளுக்கு நேர்முகப்பரீட்சைக்கான திகதி அறிவிக்கப்பட்டு பெயர்விவ ரங்கள் வெளியான நிலையில் தமக்கான நேர்முகப பரீட்சை குறித்து தகவல் வெளி யிடப்பட வில்லை எனவும் -அவர்கள் தமது மகஜரில் குறிப் பிட்டுள்ளனர்.

## விமானப் பய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு இந்த அனுமதியை விசே டமாகப் பெற ஏற்பாடு செய்யப்படும் என்றும் - அவர் சொன்னார். (உ-3)

## சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வமதத தலைவர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மனிதநேய அமைப்புக்களின் பிரதி நிதிகள் உட்பட பலர் இப்பேரணி யில் கலந்து கொள்வர்.

பேரணியில் கலந்து கொள் வோருக்கு உதவும் வகையில் குடா நாட்டின் சகல பிரதான வீதிகளிலும் யாழ். லொறிச் சங்கம், தனியார் மினிபஸ் உரிமையாளர் சங்கம் மற் றும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஆகியவற்றின் வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.


**ஷண்ணின்**
**நேற்றைய வீடியோ CD வெளியீடு**

*நாகர்ஜுன். கீர்த்தி ரெட்டி. ஐஸ்வர்யாராய். சௌகார் ஜனாகி நடிப்பில் சிறந்த காதல் சித்திரம்*

**ஷங்கர்**

(திரை அரங்குகளுக்கு முன்னுரிமை)

* சேது, குட்லக், ஏழை யின் சிரிப்பில் ஒறிஜினல் பிரமிட் CD கொப்பிகள் குறைவான விலையில்.
* பதிவு செய்யப்பட்டு அழகிய வர்ணக்கவர்க ளுடன் புதிய CD திரைப் படப்பாடல்கள், பக்திப் பாடல்கள், ஹரிகரன், தேவா, உன்னிக்கிருஷ் ணனின் தெரிவுப்பாடல் கள் யாவும் இப்போது விற்பனையில் உள்ளன.

*ஷண்*
*ரெக்கோடிங் ஸ்பேோட்*
பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(74815)

**வீடியோ CD வெளியீடு**
அருண்பாண்டியனின்
✦ ஜக்கிஜான்
நாகர்ஜுனின்
✦ சங்கர்
✦ காதலே சாட்சி
(பிரமிட் CD)
**விஷ்ணு வீடியோ**
கோண்டாவில்
(74816)

**A/L 2001, 2002**
**பிரிவுகளுக்கான**
**பொது வினா**
ஆரம்பம் :- 28.03.2000
(செவ்.3.15 - 4.15)
By:- Mr.அ.குமாரவேல்.
*யாழ். கல்வி நிலையம்*
மானிப்பாய் வீதி,
ஆறுகால் மடம்.
(74785)


# மரண அறிவித்தல்கள்

## முத்துமயில்வாகனம் மாணிக்கமுத்துமயில்வாகனம்

கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட முத்துமயில்வாகனம் மாணிக்கமுத்து மயில்வாகனம் அவர்கள் 23-03-2000 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துமயில்வாகனம் - இலட்சுமிப்பிள்ளை யின் அன்பு மகனும் முத்துப்பிள்ளையின் அன்புக் கணவரும் முத்து மயில்வாகனம் (ஜேர்மனி), மகேஸ்வரன், இரத்தினமயில்வாகனம் (கனடா), மனோகரன் (Doctor - நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் அம்பிகை, உதயகுமாரி, இந்திராணி, அகிலினி ஆகியோரின் அன்பு மாமனாரும் மகிந்தன், அபிராமி, விதுனன், வாகீசன் (சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன்), சாருஷா, மதுரா, ஆதித்தன், மித்திரன், மயூரி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (25-03-2000) சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோப்பாய் கந்தன்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

நீதிவான் வளவு,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (74784)

தகவல்:
**மா. மகேஸ்வரன்**
(ராசா)

## நயினாதீவு கார்த்திகேசு சோமசுந்தரம்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம் திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சோமசுந்தரம் அவர்கள் நேற்று (24.03.2000) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பூரணத்தின் அன்புக் கணவரும் தில்லை நாதன் (உதவிக் கல்விப்பணிப்பாளர், வேலணை), வரதநாதன் (பிரான்ஸ்), சற்குணநாதன (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் முத்துலட்சுமி, நந்தினி (பிரான்ஸ்), நிலானி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், செல்லையா, நாகமுத்து, மாணிக்கம், சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் வள்ளியம்மை காலஞ்சென்றவர்களான கண்மணி, பேரம்பலம், கதிரித் தம்பி, விசுவலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுசிகாந் (லண்டன்), பிரேம்காந், ரஜனிகாந், நிதர்சனன், அஜந்த், பூரணியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும்.

40,குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (74811)

தகவல்:
**சோ.தில்லைநாதன்** (மகன்)
(உதவிக் கல்விப்பணிப்பாளர்,
வேலணை)

## வாமதாசன் சங்கரதாசன்

(நயினாதீவு 3ஆம் வட்டாரம், யாழ். மத்திய கல்லூரி, 10ஆம் ஆண்டு மாணவன்)

நயினாதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வாமதாசன் சங்கர தாசன் 23-03-2000 வியாழக்கிழமையன்று அகாலமரணமானார்.

அன்னார் வாமதாசன் - நாகலெட்சுமியின் அன்புமிகு புதல்வனும் முரளிதாசன், திரிஅம்பிகை, ரூபதாசன் ஆகியோரின் பாசமிகு சகோத ரனும் காலஞ்சென்ற கோபாலப்பிள்ளை மற்றும் பாக்கியலெட்சுமி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற முருகேசு மற்றும் வள் ளிப்பிள்ளையின் பேரனும் வல்லிபுரம் (பிரான்ஸ்), அம்பிகைபாலன், சிவகடாட்சம் (சிவம் வெற்றிலைக்கடை, யாழ்ப்பாணம்), விஜயலெட்சுமி ஆகியோரின் பெறாமகனும் பாலசுப்பிரமணியம், உருத்திராம்பாள், காலஞ்சென்ற உருத்திரலிங்கம் - திரிபுராம்பாள், இராசேஸ்வரன் - ஜெகதாம்பாள், தணிகாசலம் (கனடா), காசிநாதன், துரைரெத்தினம், மகேஸ்வரன் (சுவிஸ்), வசந்தராசா (கனடா) ஆகியோரின் அன்பு மருகருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25-03-2000) சனிக் கிழமை நயினாதீவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோ. வாமதாசன்
(இலங்கை மின்சாரசபை, நயினாதீவு)

(74786)

## சுப்பையா கதிரித்தம்பி

(முன்னாள் கிராமச் சங்கத் தலைவர், நாரந்தனை, இணக்கசபைத் தலைவர், சமாதான நீதிவான்)

கரம்பன் கிழக்கைப்பிறப்பிடமாகவும் தற்சமயம் இல. 71/10, சீனியர் ஒழுங்கை, கலட்டியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பையா கதிரித்தம்பி நேற்று (24.03.2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் ஜெயானந்தன் (அதிபர், யா/திருநெல்வேலி இ.த.க.பாடசாலை) காலஞ்சென்ற லலிதா தேவி (உபதபால் அதிபர், கரம்பன் தெற்கு) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் திருமதி பராசக்தி ஜெயானந்தன் (போதனாசிரியை யா/ தொழில் நுட்பக்கல்லூரி), திரு.சோ.சிவசுப்பிரமணியம் (கோண்டாவில்) ஆகியோரின் மாமனாரும் பிராளினி (99 உயிரியல் பிரிவு, வேம்படி மகளிர் கல்லூரி) சுரேந்திரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகி யோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.03.2000) சனி காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இல.71/10, சீனியர் ஒழுங்கை,
கலட்டி அம்மன் கோவிலடி. (74796)

தகவல்
**க.ஜெயானந்தன்.**
(மகன்)

## திருமதி சாவித்திரிதேவி நடேசன்

அளவெட்டி தெற்கைப்பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சாவித்திரி தேவி நடேசன் 24-03-2000 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சட்டத்தரணியும் நொத்தாரிசுமான ஏகாம்பரம் நடேசனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சட்டத்தரணி J.P.U.M., சீ.இளைய தம்பி - கனகேஸ்வரியின் அன்பு மகளும் காலஞ்சென்ற துரைசிங்கம் மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற Dr. மகேந்திரன், திருமதி திலகவதி யோகரத்தினம்(U.K), சிறீனிவாசன் சட்டத்தரணி(U.K புளோரி), திருமதி ராஜேஸ்வரி சிதம்பரநாதன்(U.K), திருமதி ஜெயலக்சுமி - தில்லை நாதன் (கனடா), திருமதி இந்திராணி - ரவிகுலன் (அளவெட்டி), திரு.திருமதி கௌதமி - பாஸ்கரன்(கனடா), திரு.திருமதி இளங்கோ வன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இவரது இறுதிக்கிரியைகள் நாளை (26-03-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி. (74792)

தகவல்:-
ஏ.நடேசன்(கணவர்)
சட்டத்தரணி.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25-03-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சஞ்சீவி
சஞ்சிகை


ராகங்கள் பலவிதம்
ராகம்ஸ் பட்டுச்சேலையின்
சேலைகள் ஒவ்வொன்றும்
தனிரகம்! புதுவிதம்!
என்னங்க
அசந்திட்டீங்களா?
அதுதாங்க!
ராகம்ஸ் பட்டுச்சோலை
இல- 24, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். C/11221



# கருத்துக் கலசம் - தீஜூரா

## "நான்" நீங்குக!

***நீதி நூல்கள் எப்போதும் 'நான் அல்ல நீயே' என்று சொல்கின்றன. அவற்றின் இலட்சியம் 'சுயநலம்'அல்ல, 'சுயநலமின்மை' என்பதே ஆகும்.***

**-சுவாமி விவேகானந்தர்-**

நான் என்பது ஒருவனின் ஆணவத்தைப் பிரதிபலிப்பது. மமதை, அகங்காரம், செருக்கு என்பவற்றுக்கும் "நான்" என்ற முனைப்பே காரணம். சமய நோக்கில் ஆணவம் மும்மலங்களில் ஒன்று. மனிதனை நீதி நெறிக்கு விரோதமாக நடக்கத் தூண்டுவது.

மனிதனின் நடைமுறை வாழ்க்கையில் நான் என்ற ஆணவம், சுயநலத்தில் இருந்து எழுவதே. அடுத்தவர்களை மதிக்காது. அவர்களின் நலன்களைப் புறக்கணித்தும், அடுத்தவர்களுக்கு அநீதி இழைத்தும் தானே எல்லோருக்கும் பெரியவன் என்றும் "உயர்ந்து" நிற்க நினைப்பதும் ஆணவமே. சுயநலம், ஆணவம் அடுத்தவர்களுக்கு அக்கிரமம் செய்யத் தூண்டும்.

மனிதனிடம் உள்ள ஆணவம் ஒழிக்கப்படவேண்டும்; அடக்கப்படவேண்டும். அதுவே இறையுணர்வைத் தரும்.

சுயநலம் பரந்து விளையும் போது, சமூக நலம் நலிந்து போகின்றது. இன்று எமது சமுதாயத்தில் அந்த நிலையே பரந்து, "உயர்ந்து" நிற்கக் காணலாம். அடுத்தவன் எக்கேடு கெட்டாலும், தான் வசதியாக, வளமாக வாழ்ந்து முன்னேற வேண்டும் என்பதே 95 சதவீதமானோர் விருப்பமாக, ஆசையாக, ஏன் இலக்காகவும் உள்ளது. இந்தச் சுயநலத்தின் விளைவாகப்போட்டி, பொறாமை, முந்திக்கொள்ள முண்டி அடித்தல், அடுத்தவனுக்குக் குழிபறித்தல், சண்டை, சச்சரவு என்று பல சமூக நோய்கள் பரவுகின்றன; மக்களுக்குத் தொற்றுகின்றன.

பலவகைகளாலும் பாதிப்புற்ற சமூகமாக, துன்பதுயரங்கள் மலிந்த சூழலில் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். சாதாரண நிலை - இயல்பு நிலை - முற்றிலும் மாறிய, "புதினமான" சூழலில் அவர்கள் காலத்தை நகர்த்துகின்றார்கள். மிகப் பெரும் எண்ணிக்கையானோர் ஆதரவற்றவர்களாக அடிப்படைத் தேவைகள் மூன்றையும் நிறைவேற்றிக் கொள்ள இயலாது அவதிப்படும் காலமாக உள்ளது.

மற்றெந்தக் காலத்தையும் விட மற்றவர்களுக்கு உதவவேண்டிய வேளை இது. நொந்தவர்களுக்கு, நலிந்தவர்களுக்கு உதவவேண்டும் என்ற தன்னலமற்ற போக்கு எமது மத்தியில் வளராதவரை, வளர்ந்து பரவாதவரை, சூழ்ந்துள்ள இருள் நீங்குவது அசாத்தியம். தன்னலம் மிகுந்து விட்டதால் சமூக நீதிகளையும் வாழ்க்கை வரன்முறைகளையும் மக்கள் மறந்து விட்டனர். அதுவுமன்றி, அவற்றை அழித்து விடவும் கங்கணம் கட்டும் கவலைக்குரிய நிலையைக் காண்கின்றோம்.

'வாழு, வாழவிடு' என்ற கோட்பாடு மறந்துபோன ஒன்றாயிற்று. மற்றவர்களின் நலன் குறித்து சிறிதளவு சிந்தித்தால் கூட, எமது இதயத்தில் சிங்கத்தை நிகர்த்த ஆற்றல் பிறக்கும் என்பது ஆன்றோர் கண்ட அனுபவ உண்மை. ஆனால் இப்போது மற்றவர் நலனை அழிப்பதன் பொருட்டுத் தமது ஆற்றல்களை வீணாக்குவோரே அனேகர். இந்த நிலை நீங்கி சமூக நலம் வளர, சிறக்க ஒவ்வொருவரும் சுய நலமின்மையைக் கணிசமான அளவேனும் தம்மிடம் வளர்க்க வேண்டும். "நான்" போக்கப் பழகுவோமாக.

# தேசிய இனம் என்ற அங்கீகாரத்தை தமிழருக்குப் பெற்றுத் தந்த தந்தை

இலங்கைத் தமிழரசுக்கட்சி 1949 டிசெம்பர் திங்களில் தந்தை செல்வநாயகத்தினாலும் அவரது நாடாளுமன்ற சகாக்களான அமரர் கு.வன்னியசிங்கம் மற்றும் மூதவை உறுப்பினர் டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதனாலும் கூட்டாக ஸ்தாபிக்கப்பட்டது. இலங்கைத் தமிழரசுக்கட்சி ஸ்தாபிக்கப்பட்ட வரலாற்றில் அதன் பொன்விழாவைத தமிழ் மக்கள் இந்த ஆண்டு கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூலம் அரசியல் வரலாற்றில் தந்தை செல்வா புரிந்த சாதனைகளை நினைவுகூருதல் பொருத்தமானதே.

பிரதேசம், மதம் மற்றும் சாதி அடிப்படையில் பிளவுபட்டு, கூறுபட்டிருந்த தமிழ்ப் பேசும் மக்களை ஒன்றுபடுத்தி தேசிய இனமெனும் அங்கீகாரத்தை அவர்களுக்குப் பெற்றுத் தந்தவர் தந்தை செல்வா.

1957இல் மக்கள் ஐக்கிய முன்னணி பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்காவுடன் பிராந்திய சபைகளுக்காகத் தாம் செய்துகொண்டிருந்த ஒப்பந்தத்தையும் -

1960 இல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன், அவர் பதவியில் அமர்த்தப்பட்டால் தமது கணவர் பண்டாரநாயக்கா கையெழுத்திட்ட "பண்டா - செல்வா" உடன்படிக்கையைத் தமது அரசு நடைமுறைப்படுத்தும் என எழுத்தில் வடிக்கப்படாத ஒரு கனவான் ஒப்பந்தத்தையும் -

1965 மார்ச் திங்கள் 24ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் டட்லி சேனநாயக்காவுடன் 'மாவட்ட சபைகளுக்கான' ஓர் ஒப்பந்தத்தையும் - செய்து கொண்டிருந்தவர் தந்தை செல்வா.

**எதிர்வரும் வெள்ளியன்று அவரது 101 ஆவது ஜனனதினம்**

தந்தை செல்வாவுடன் பின்னவர் இருவரும் செய்துகொண்டிருந்த ஒப்பந்தங்கள் காரணமாகவே பிரதமர்களாக அவ்விருவராலும் வரமுடிந்தது.



சம்பந்தப்பட்ட மூன்று ஒப்பந்தங்களாலும் இத்தீவின் மூவேறு பிரதமர்களால் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழ்ப் பேசும் மக்களின் மரபு வழித்தாயகமாக ஏற்று அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அவற்றின் மூலம் ஆவண ரீதியாகவும், கனவான் ஒப்பந்தம் மூலமும் தமிழ்ப் பேசும் மக்களின் தேசிய இன அந்தஸ்து மறைமுகமாகவேனும் ஒப்புக்கொள்ளப்பட்டது. தமது அரசியல் வாழ்க்கை வரலாற்றின் சாதனையாகத் தந்தை செல்வா தமிழ்ப் பேசும் மக்களைத் தேசிய இன அந்தஸ்துக்கு உயர்த்தியிருந்தமையால் தந்தை செல்வா தமிழ்ப் பேசும் தேசிய இனத்தின் தேசபிதாவாக வந்திருந்தார்.

போர் நிறுத்தப்பட்டு இத்தீவில் திரும்பவும் சமாதான சகவாழ்வு ஏற்படவேண்டுமானால் வடக்கிலும் கிழக்கிலும் தீவு எதிர்கொண்டிருக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு தந்தை செல்வா செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களின் ஆதாரத்தில் வடக்கு - கிழக்கு இணைந்த ஒரே தாயக அலகாகக் கொண்டு தமிழ்ப் பேசும் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிப்பதாக, சுயநிர்ணய அடிப்படையிலான ஓர் அரசியல் தீர்வு காணப்படுதல் வேண்டும் என சகல தமிழ் தரப்புகளாலும் வற்புறுத்தப்பட்டு வருவது அறியப்பட்டதே. அவ்வகையில் தற்போது நோர்வே நாடு எடுத்து வரும் மூன்றாந்தரப்பு சமாதான முயற்சியை ஆதாயப்படுத்திக் கொள்வதற்கு தமிழ்த் தேசிய இனம் எழுச்சிபெற வேண்டும்.

**சா. ஆ. தருமரத்தினம்**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொன்விழா ஆண்டில் வரும் தந்தை செல்வாவின் 101ஆவது ஜனனதினம் எதிர்வரும் 2000 மார்ச் 31இல் பயன்விளைவாகக் கொண்டாடப்படுதல் வேண்டும். அத்தினத்தில் பல்வேறு அமைப்புக்களும் தந்தை செல்வா நினைவாலயத்தில் மேற்கொள்ளும் மலர் அஞ்சலியோடு பல்வேறு நிகழ்ச்சிகளையும் நடத்தவேண்டும்.

யாழ்.ஐக்கிய கிறிஸ்தவ சங்கம் சுண்டுக்குளி புனிதர் யோவான் ஸ்நானகர் தேவாலயத்தில் தேச பிதா தந்தை செல்வாவின் வாழ்வுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்காக நடத்தும் விஷேட ஆராதனையில் அனைவரும் பெரும் ஆர்வத்துடன் கலந்துகொள்ளுதல் நலம்.

புனித யோவான் கல்லூரியின் ஒரு மாணவனாக தந்தை வழிபாடு செய்த தேவாலயமாக சுண்டுக்குளி புனிதர் யோவான் தேவாலயம் இருப்பதாலேயே யாழ்.ஐக்கிய கிறிஸ்தவ சங்கம் அவரது ஜனன தினங்களில் வருடாவருடம் இந்த ஆராதனையை அங்கு நடத்திவருகிறது. கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாது அனைத்து மதத்தினரும் இச்சிறப்பு வழிபாட்டில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். தமது சகமாணவர் ஒருவர் தமிழ்த் தேசிய இனம் முழுமைக்கும்

(XV ஆம் பக்கம் பார்க்க)

## வாழைக்குலை

ஆழக் குழிவெட்டி அதற்குள் குப்பையிட்டு
தீயிட்டால் வராது நோயென்னும்
நானறிந்த வித்தையை விட்டு அங்கே
ஏற்றி விட்டு எருவும் போட்டு
தொந்தி வயிற்றானை புத்தியிலிருத்தி
வைத்தேன் ஒரு வாழைக் குட்டி!

வளமாய் அது வளர்தல் கண்டு
உளமே பூரித்து நிற்கையிலே ஓர் நாள்
ஆட்டிலறி ஷெல்போல் போட்ட தொரு
பொத்தி
மாதங்கள் சில ஓட மெத்தப் பெருத்த
குலையொன்று மூன்று பேர் சேர்ந்து வெட்டி
தோளளவுக்கு மேல் என்று மூத்த மகள்
சொல்ல,
இல்லை இல்லை என் தலையளவு என்று
தாரம் தான் சொல்ல, சந்தை வரை போய்
வரலாம் என்று தூக்கி வைத்து
விதைத்தேனே விசையினேயே மிதி
பலகையில்:

காசது காணாது ஏங்கித் தவித்தவேளை,
'அம்மா! வாழைக்குலைக் காசில் எனக்கொரு
கொம்பாஸ்' என்றான் மூத்த மகன், எனக்கு
அதிலையொரு ஸி.அர் கொப்பியெண்டான்
சின்னமகன்
நானுமோ கற்பனையில், நல்ல மீன் வாங்கி
பொரியலோடு குழம்பும் பதமாய் ஆக்கி
மூக்கு முட்ட அடிக்க வேணுமெண்டு
ஆசையில்,
மிதிக்கத் தொடங்கினேன் சைக்கிளை!

சிந்தனையை அறுத்த நொந்த குரலொன்று
வந்த குலைக்குக் கேட்டதே முப்பதுரூபாய்
முடியாது என்றேன் மூர்க்கமாய்த்தான் நான்.
படியாத என் மனது படிந்ததே பின் இருபதில்.
முதல் கேட்டவனின் நக்கல்
பார்வையொருபுறம்
என்னை எரிக்க, முந்திய காலம் போல்
எப்போ இனி வரும் எனும் எண்ணத்தில்,
பொசுக்கித் தீயிலிட்டோம் எம் ஆசைகளை!

**- இந்திரஜித்**

## இரவொன்றில் இட்ட சாபம்

மெல்ல விழி மூடி கனவில் மிதப்பமென்றால்
சொல்லி வைத்தாற் போல
சுவரதிர...'ஆட்லறி'
கர்ச்சித் திடிக்கிறது!
கடந்து செல்லும் அதன் குண்டு
பிச்செம் செவிப்பறையை
வளிப்படையைக் கிழித்தபடி
தூரத்தில் வீழ்ந்து 'திடும்' என்று
வெடிக்கையிலே
மாரடைப்பு வந்தாற்போல மனம்.... இருண்டு
நொடிப்பொழுது
செத்துப் பிழைக்கிறது!
"சீ...செகிட்டு ஆட்லறி!"
மற்றவரைப் பற்றி மனதிற் கவலையின்றிக்
கத்தியெமை இரவிரவாய்க்
கண்விழிக்க வைக்கிறதே!
எத்தனைநாள்.......
நிம்மதியின் நித்திரையை குறைவைத்து
நினைத்தவுடன் ஊர்முழுதும் சிவராத்திரி
செய்கிறதே!
இனியுமெத்தனை தினத்திலிது
எமனாகப் போகிறதோ?
கனவுகளிலேனும் நாம் கோட்டை கட்ட இது
விடுதோ?
நிம்மதியை,
எங்கள் நித்திரையை,
கனவுகளை,
கும்மாளம் போட்டுக் குலைக்கின்ற ஆட்லறி
அகலவேணும்!
இல்லை...... அதைப்"பேசி" அகற்றவேணும்!

**- அருணன்**

## வருக, கவிஞ!

அழிகின்ற எம்மினம் ஒருபுறம்
அடிபணி கும்பல்க ளொருபுறம்
பொழிகின்ற சொன்மழை நம்பியே–வாக்குப்
போட்டவ ரேங்குறா ரொருபுறம்!

விழிகளைப் புதைகுழிப் பக்கமாய்....
வேதனை மிஞ்சுதே ஒருபுறம்!
வழியது தேடியே வாடுறோம்–எம்
வாழ்விலே ஒளியினைத் தேடுறோம்!

இடக்குடன் பாடினால் ரசிப்பவர்–தனக்கு
எதிரியாய்ப் பாடினா லுதைக்கிறார்!
சுடவெனத் துவக்குகள் தூக்கிறார்–கவிச்
சோதியில் எரிபடப் போகிறார்!

உணர்ச்சியாய்ப் பாடிய காசியும்–சிறையி
னுள்ளேதான் வாடினார், அறியணும்!
பணத்துக்குப் பாடுற கவிகளே–இனியேல்
பாதையி லிவற்றையும் நினைமினே!

தொட்டதைப் பாடுதல் சுதந்திரம்–சுடு
துவக்கினால் பயமது வருதலால்
பட்டெனப் பாடலை மறைப்பது–இனிப்
பாவமே! பாவமே!! பாவமே!!!

உச்சியில் இடியது வீழினும்–இங்கு
உண்மையே பாடுவம் என்றநம்
அச்சமில் பாரதி போலவே–இன்று
ஆயிரம் பாரதி தோன்றணும்!

**- குரு -**

# கிளின்ரனின் விஜயம் உபகண்டத்தில் சமாதானம் ஏற்பட வழி திறக்குமா?

அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் இந்தியாவில் நான்கு நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு இன்று பாகிஸ்தான் செல்கிறார். கடந்த 19 ஆம் திகதி இந்தியா வந்த கிளின்ரன் 20ஆம் திகதி பங்களாதேஷில் ஒருநாள் பயணத்தை முடித்துக் கொண்டு 21ஆம் திகதி தனது உத்தியோகபூர்வ விஜயத்தை இந்தியாவில் ஆரம்பித்தார். இன்றைய சர்ச்சைக்குரிய பாகிஸ்தான் விஜயம் ஐந்து மணி நேரத்துக்கே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவும் பாகிஸ்தானும் மற்றொரு யுத்தம் ஒன்றுக்கு தயாராகிக் கொண்டிருக்கின்றன. இந்த இரு நாடுகளும் அணுஆயுதப் போட்டியில் ஈடுபட்டிருக்கும் தற்போதைய நிலையில் கிளின்ரனின் தென்ஆசிய விஜயம் மிகவும் முக்கியமானதாக கருதப்படுகிறது.

## கடந்த காலங்களில் நல்லுறவு இல்லை

அமெரிக்காவைப் பொறுத்தவரை கடந்த 50 ஆண்டு காலமாக அமெரிக்க - இந்திய உறவு நல்ல நிலையில் இல்லை. சர்வதேச விவகாரங்களில் இந்தியா கூட்டுச்சேராக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்ததும், பனிப்போர் காலத்தில் ரஷ்யாவுக்கு சார்பான கொள்கையை அது கடைப்பிடித்து வந்ததுமே இதற்குக் காரணம்.

கடைசியாக 1978 இல் ஜிம்மி கார்ட்டர் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தார். அதன் பின்னர் வந்துள்ள அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன்தான். இந்த விஜயம் கடந்த கால கசப்பான உறவுகள் சீரடைய உதவும் என்றும் -

இந்தியாவும் பாகிஸ்தானும் CTBT எனப்படும் (Comprehensive Testing Ban Treaty) முழு அளவிலான அணு ஆயுதப் பரிசோதனைத் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வழி வகுக்கும் என்றும்-அரசியல் ஆய்வாளர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

1998 ஆம் ஆண்டு இந்தியாவும் பாகிஸ்தானும் எட்டிக்குப்போட்டியாக அணு வெடிப்புப் பரிசோதனைகளை நடத்தின. அதன் பின்னர் அணு ஆயுதப் பரிசோதனைத் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு அமெரிக்கா இரு நாடுகளையும் தீவிரமாக வலியுறுத்தி வந்தது. அணுவெடிப்புப் பரிசோதனை நடத்தப்பட்ட பின்னர் அமெரிக்கா பத்துத் தடவைகளுக்குமேல் இந்த விவகாரம் குறித்து இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி விட்டது. ஆனால் எந்தவித முன்னேற்றமும் இல்லை. இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு இதுவரை இந்தியாவோ அல்லது பாகிஸ்தானோ இணக்கம் தெரிவிக்கவில்லை.

காஷ்மீர் தொடர்பாக மீண்டும் யுத்தம் மூளும் அபாயம் ஏற்பட்டு வருவதாலும், பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி நடைபெறுவதாலும், இந்தியாவில் உள்ள தற்போதைய அரசு இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பாகக் கடுமையான போக்கைக் கடைபிடிப்பதாலும் முழுஅளவிலான அணு ஆயுதப் பரிசோதனைத் தடை ஒப்பந்தத்தில் இந்தியா உடனடியாக கையெழுத்திடும் வாய்ப்பு இல்லை. இந்த விடயத்தில் கிளின்ரனின் அழுத்தத்துக்கும் இந்தியா பணிந்து போகத் தயார் இல்லை.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா,சீனா ஆகிய நாடுகள் அணு ஆயுதத் துறையில் தமது இலக்கை எய்திவிட்டன. இத்துறையில் வளர்ச்சி பெறும் ஏனைய நாடுகளை மட்டம் தட்டுவதற்கு இந்த ஒப்பந்தம் வழி வகுக்கிறது என்று இந்தியாவின் தற்போதைய அரசாங்கம் தெரிவிக்கிறது.

கிளின்ரனின் இந்திய விஜயத்தின் போது இந்த ஒப்பந்தம் குறித்து இந்தியாவின் நிலைப்பாடு தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அமெரிக்க செனெட் இந்த ஒப்பந்தத்துக்கு இன்னும் ஒப்புதல் அளிக்காத நிலையில் இந்தியா மீதோ அல்லது பாகிஸ்தான் மீதோ கடுமையான நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்கும் நிலையில் கிளின்ரன் இல்லை -

## பாகிஸ்தானைப் புறக்கணிக்க அமெரிக்கா தயார் இல்லை



புதுடில்லியில் கிளின்ரனுக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம்

## இந்தியாவின் முக்கிய பங்கு

உலக உலா
என்.பி.சீலன்

பிராந்தியப் பாதுகாப்பு, சர்வதேச பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றைப் பொறுத்தவரை இந்தியா ஒரு முக்கிய நாடாகக் கருதப்படுகிறது. சுமார் 100கோடி மக்கள் வாழும் இந்தியா தற்பொழுது அமெரிக்க வர்த்தகச் சந்தையில் ஓரளவு பிரதான பங்கை வகித்து வருகிறது.

பனிப்போர் முடிவடைந்த பின்னர் சீனாவும் ரஷ்யாவும் கூட்டுச்சேர்ந்து அமெரிக்க ஆதிகத்தை முறியடிக்க முயற்சிக்கின்றன. தற்போதைய சூழ்நிலையில் இந்தியாவுடன் நெருங்கிய உறவு வைத்துக் கொள்வது அவசியமானது என்று கிளின்ரன் கருதுகிறார். இந்தியாவைப் பலப்படுத்துவது மூலம் காலப் போக்கில் சீனாவின் ஆதிக்கத்தை மட்டுப்படுத்த முடியும் என்று அமெரிக்கா நம்புகிறது. 1962 எல்லைச் சண்டையின் பின்னர் இந்திய - சீன உறவு இன்னும் பெரிதாக அபிவிருத்தி அடையவில்லை. பாகிஸ்தானைப் போன்று சீனாவையும் தனது எதிரி நாடாகவே இந்தியா கருதி வருகிறது.

## இந்தியா அமெரிக்கா முரண்பாடு

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இந்தியாவும் அமெரிக்காவும் இன்னும் முரண்பாடான கொள்கையே கடைப்பிடித்து வருகின்றன. காஷ்மீர் தொடர்பாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் பிரச்சினை இருக்கிறது என்று அமெரிக்கா கூறுகிறது. ஆனால் இந்தியா, அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி என்றும் தற்பொழுது பாகிஸ்தான் வசம் உள்ள அசாத் காஷ்மீரும் மீட்கப்படவேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்தி வருகிறது. காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக மத்தியஸ்தம் செய்ய கிளின்ரன் தெரிவித்த விருப்பத்தையும் இந்தியா நிராகரித்து விட்டது இந்தியாவும் பாகிஸ்தானும் கோரிக்கை விடுத்தால் தாம் மத்தியஸ்தம் செய்யத் தயார் என்று கிளின்ரன் கூறுகிறார். காஷ்மீர் பிரச்சினை ஓர் உள்நாட்டுப் பிரச்சினை. வெளிநாட்டுத் தலையீடு தேவையில்லை என்கிறது இந்தியா. இந்தியாவின் தற்போதைய அரசின் கடுமையான போக்கிற்கு இதுவும் ஓர் உதாரணம்.

## சர்வதேசப் பங்களிப்பை கிளின்ரன் வலியுறுத்துகிறார்

கார்கில் சண்டையின் பின்னர் பாகிஸ்தானைப் பழிவாங்க இந்தியா சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாக பிரிட்டிஷ் - அமெரிக்க இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கடந்த ஒக்ரோபரில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின் பின்னர் இந்தியாவைப் பொறுத்தவரை பாகிஸ்தானும் கடுமையான போக்கைக் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் மற்றொரு யுத்தம் மூண்டால் அது எல்லைகளைத் தாண்டி பெரிய யுத்தமாக உருவெடுக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. அணு ஆயுதத் துறையில் முதிர்ச்சியடையாத நிலையிலுள்ள இந்த இரு நாடுகளையும் தவறான கணிப்புக்கள் அணு ஆயுத யுத்தத்துக்கு இட்டுச் செல்லும் பேராபத்தும இருந்து வருகிறது.


புதுடில்லியில் வாஜ்பாய்க்கும் கிளின்ரனுக்கும் இடையில் இடம் பெற்ற பேச்சுக்களில், காஷ்மீர் பிரச்சினை மீண்டும் பெரும் யுத்தமாக உருவெடுப்பதைத் தடுப்பதற்கு சர்வதேச பங்களிப்புத் தேவை என்று கிளின்ரன் வலிறுத்தி இருந்தார்.

* பாகிஸ்தானில் உள்ள முஸ்லிம் தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்கள் மீது தாக்குதல் நடத்துமாறு கார்கில் பிரச்சினையின் பின்னர் இந்தியாவில் உள்ள தீவிரவாத சக்திகள் வாஜ்பாய் அரசுக்கு நெருக்கடி கொடுத்து வருகின்றன. அப்படியான ஒரு தாக்குதல் நிகழுமானால் பாகிஸ்தான் உடனடியாகத் திருப்பித் தாக்கும் என்று அமெரிக்கா அஞ்சுகிறது.

கிளின்ரனின் தென் ஆசிய விஜயம் இருவருடங்களுக்கு முன்னரே திட்டமிடப்பட்டது. 1998இல் இடம்பெற்ற அணு வெடிப்புப் பரிசோதனைகள், அதன் பின்னர் கடந்த ஆண்டு இடம்பெற்ற கார்கில் சண்டை, பாகிஸ்தானில் ஆட்சிக் கவிழ்ப்பு ஆகியவை காரணமாக விஜயம் ஒத்திவைக்கப்பட்டுத், தற்பொழுதே இடம்பெறுகிறது.

## இழுபறியில் இடம்பெறும் பாக். விஜயம்

கிளின்ரனின் பாகிஸ்தான் விஜயம் கடைசி நேரம்வரை பெரும் இழுபறியிலேயே இருந்து வந்தது. இந்தியாவிலும் அமெரிக்காவிலும் இதற்கு எதிர்ப்பு இருந்த வந்தது. கடைசியாக இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் வழியில் கிளின்ரன் பாகிஸ்தானில் தரித்துச் செல்வார் (Stop Over) என்றே தெரிவிக்கப்பட்டது. ஆனால் பாகிஸ்தானின் முஷாரப் அரசு கௌரவப் பிரச்சினையாகக் கருதி இதனை உத்தியோகபூர்வ விஜயமாகவே எடுத்துக் கொண்டுள்ளது. அமெரிக்கா திரும்பும் வழியில் கிளின்ரன் இன்று பாகிஸ்தானில் 5மணி நேரம் செலவிடுவார். அப்பொழுது பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் முஷாரப்புடன் முக்கிய பேச்சுக்களை நடத்துவார்.


புதுடில்லியில் கிளின்ரனுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின் போது கிளின்ரனின் மகள் செல்ஸியை வாஜ்பாய் வரவேற்கிறார்.

பாகிஸ்தனைப் பயங்கவாத நாடுகள் பட்டியலில் சேர்க்கும்படி அமெரிக்காவை இந்தியா கோரி வருகிறது. ஆனால் அமெரிக்கா இன்னும் அதற்குத் தயாரில்லை. சர்வதேச அரங்கில் பாகிஸ்தானின் முக்கியத்துவம் கருதிய பாகிஸ்தானுடன் முரண்படும் துணிச்சல் அமெரிக்காவுக்குக் கிடையாது.


பங்களாதேஷ் விஜயத்தின்போது இராணுவ அணிவகுப்பை கிளின்ரன் ஏற்றுக்கொள்ளும் காட்சி.

பாகிஸ்தானுடன் முரண்பட்டால் பாகிஸ்தானில் தனது செல்வாக்கைப் பிரயோகிக்க முடியாது போய் விடும் என்பது அமெரிக்காவுக்குத் தெரியும். உபகண்ட அமைதிக்குப் பாகிஸ்தானின் பங்களிப்பு முக்கியமானதாக இருப்பதால் அமெரிக்கா பாகிஸ்தானைப் புறக்கணிக்கத் தயாரில்லை.

கடந்த ஆண்டு ஜுலையில் நவாஸ் ஷெரீப்பை அமெரிக்காவுக்கு அழைத்து கார்கில் பிரச்சினை தொடர்பாகக் கிளின்ரன் பேசினார். கார்கிலில் இருந்து பாக். ஊடுருவல்காரர்களை வெளியேற்றும்படியும் ஷெரீப்பைக் கேட்டுக்கொண்டார். ஷெரீப் அதற்கு இணங்க வேண்டியதாயிற்று. இப்படியான ஒரு நிலைமையையே பாகிஸ்தான் பொறுத்தவரை வைத்திருக்க அமெரிக்கா விரும்புகிறது.

மேலும் பாகிஸ்தானைப் புறக்கணிப்பது சீனா பக்கம் அது மேலும் சாய வாய்ப்பு ஏற்படுத்திவிடும். உபகண்டத்தில் யுத்த ஆபத்து ஒன்று உருவாகும் பட்சத்தில் இரு நாடுகள் மீதும் தனது நிர்ப்பந்தத்தைப் பிரயோகிக்கக்கூடிய ஒரு நிலைமையை வைத்திருக்கவே அமெரிக்கா விரும்புகிறது.

* பாகிஸ்தானில் ஜனநாயக அரசு கவிழ்க்கப்பட்டது.

* சர்வதேசப் பயங்கரவாதியாக அமெரிக்காவினால் கருதப்படும் பின்லேடனுக்குப் பாதுகாப்பு வழங்கி வரும ஆப்கானிஸ்தானுக்குப் பாகிஸ்தான் முழு ஆதரவு வழங்கிவருவது.

* CTBT எனப்படும் முழு அளவிலான அணு ஆயுத பரிசோதனையைத் தடை ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் கையெழுத்திட மறுப்பது.

* 1998 அணு வெடிப்புப் பரிசோதனையின் பின்னர் பாகிஸ்தான் மீது அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட வர்த்தகத் தடை.

ஆகியவை காரணமாக அமெரிக்க - பாகிஸ்தான் உறவு பாதிக்கப்பட்டுள்ளது. இந்த உறவை சீர் செய்யவே அமெரிக்கா விரும்புகிறதே ஒளிய மேலும் பாதிப்பு ஏற்படுத்துவது அதன் நோக்கம் அல்ல.

கிளின்ரனின் பாகிஸ்தான் விஜயம் முஷாரப்பின் இராணுவ ஆட்சிக்கு அமெரிக்காவின் ஒப்புதலாகக் கருதப்படலாம் என்று தெரிவித்தே கிளின்ரனின் பாகிஸ்தான் விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுவந்தது. ஆனால் கிளின்ரன் இதனை அடியோடு நிராகரித்துவிட்டார்.

கிளின்ரனுக்கும் முஷாரப்புக்கும் இடையில் இன்று நடைபெறும் பேச்சுக்களில் பயங்கரவாதம், போதைப் பொருள் கடத்தல் முக்கிய இடம் வகிக்கும் என்று தெரிவிக்கப்பட்டாலும் பாகிஸ்தானில் மீண்டும் ஜனநாயக ஆட்சியைக் கொண்டுவருமாறு கிளின்ரன் கோருவார் என்று நம்பப்படுகின்றது. பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி ஏற்பட்டால் மட்டுமே காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண வாய்ப்பு ஏற்படும். ஆனால் பிரச்சினை தீருவதற்கான எந்த ஓர் அறிகுறியும் இல்லை.

# மனிதனைத் தாக்கும் பால் உறுப்பு நோய்கள்

## பாகம் III

## பெண் இலிங்க உறுப்புக்களில் ஏற்படும் நோய்கள்

குழந்தைகளை ஈன்றெடுத்து ஒரு நல்ல சமுதாயத்தினை உருவாக்குவதில் பெண் முக்கிய ஸ்தானம் வகிக்கிறாள். இப்பெண் சமுதாயத்தின் இனப்பெருக்க உறுப்புக்களில் ஏற்படும் நோய்ப்பாதிப்புக்கள் பெண்களை மட்டுமன்றி முழுச் சமுதாயத்திலும் தாக்கத்தினை விளைவிக்கின்றது. ஆகவே ஒவ்வொரு பெண்ணும் தனது இனப்பெருக்க உறுப்புக்களைப் பற்றியும், அவற்றில் ஏற்படும் நோய்கள், குணங்குறிகள் பற்றியும் அறிந்து வைத்திருத்தல் அப்பெண் ஒரு சுகதேகியாக வாழ வழி அமைக்கும். நமக்கு ஏற்படும் நோய்களுக்கான குணங் குறிகள் ஓரளவு எமக்குத் தெரியுமாயின் நாம் உடனடியாக வைத்தியரை நாடி ஆலோசனை பெறுவதுடன் சிகிச்சையினையும் பெறலாம். இதனை நோக்கமாகக் கொண்டே இக்கட்டுரை இங்கு வரையப்படுகின்றது.

பெண்ணின் பால் உறுப்புக்களில் ஏற்படும் நோய்களை பின்வருமாறு பிரிக்கலாம்.

(01) மாதவிடாய் ஒழுங்கீனங்கள் (Menstrua disorders)

(02) தொற்று நோய்கள் (Infections)

(03) யோனி வழியினூடு இடுப்புக்குழி உறுப்புக்களின் இறக்கம் (Genital prolapse)

(04) புற்று நோய்களும் (cancers)ஏனைய கட்டிகளும்.

### மாதவிடாய் ஒழுங்கீனங்கள்

மாதவிடாய்(menstruation) ஏற்படும் ஒழுங்கீனங்களைப் பற்றி பார்ப்பதற்கு முன்னர் ஒரு சுகதேகிப் பெண்ணில் ஏற்படும் மாதவிடாய் வட்டங்களைப் பார்ப்போம்.

பெண்ணின் இனப்பெருக்கத் தொகுதியானது ஆணின் இனப்பெருக்கத் தொகுதி போலல்லாது கருக்கட்டலுக்கும், கருத்தரித்தலுக்குமாக ஓர் ஒழுங்கான நிகழ்வு வட்டங்களை (Regular cycle) காட்டுகின்றது. இதனால் சூலகங்கள் எனப்படும் இலிங்க உறுப்புக்கள்



பெண்ணின் உட்புறச்சனனி உறுப்புகள்

சிசுவினை உருவாக்குவதற்கு தேவையான சூல்களை சூல்கொள்ளல் (ovulation) எனும் செயற்பாட்டின் மூலம் வெளிவிடுகின்றன. இவ்வாறு வெளியேற்றப்படும் சூல் கருப்பைக்கானில் ஆணின் விந்துடன கருக்கட்டாதவிடத்து சூலின் (முட்டையின்) பகுதிகள் அமைப்பழிகின்றன. இத்துடன் ஓமோன் தொழிற்பாடு குறைவடைவதனால் கருப்பைச் சுவர் மெலிதடைந்து கருப்பைச்சுவரில் உள்ள குருதிக் கலன்களும் அமைப்பழிகின்றன. இதனால் குருதியும், அமைப்பழிந்த பகுதிகளும் யோனி வழியினூடாக வெளியேற்றப்படுகின்றன. இது மாதவிடாய் என அழைக்கப்படுகின்றது. பூப்பெய்திய பின் சுகதேகியான ஒரு பெண்ணில் பொதுவாக 28 நாள்களுக்கு ஒரு தடவை (சில வேளைகளில் 2 அல்லது 3 நாள்கள் கூடலாம் அல்லது குறையலாம்) இது நிகழ்கின்றது. பெரும்பாலும் 80ml இரத்தம் இதன் போது வெளியேற்றப்படுகின்றது. ஒழுங்கீனங்களைப் பார்ப்போம்.

**மாதவிடாய் நிகழாமை (Amenorrhea)**

ஒரு பெண்ணின் வாழ்க்கை வட்டத்தில் "மாதவிடாய் நிகழாமை" பல்வேறு சந்தர்ப்பங்களில் நிகழ்கின்றது. இது சாதாரணமான உடற்தொழிலியற் செயற்பாட்டினால் ஏற்படலாம் அல்லது நோயுள்ள ஒரு பெண்ணில் நோயுடன் தொடர்புடையதாக ஏற்படலாம்.

சாதாரண உடற்றொழிலியல் நிகழ்வுகளினால் ஏற்படும் சந்தர்ப்பங்கள்:-

*பூப்படைவதற்கு முந்திய காலப் பகுதி:-*

சாதாரணமாக ஒரு பெண் 12-16 வயதெல்லைக்குள் பூப்பெய்துகின்றாள். இதற்கு முந்திய காலப் பகுதியின் போது, சூலகத்தினுள் சூல்கள் விருத்தியடைகின்றன. அத்துடன் இக்காலப்பகுதியில் மாதவிடாயை ஏற்படுத்தத் தேவையான ஓமோன்கள் (ஈஸ்ரஜன், புரொஜெஸ்ரரோன்) மிகக்குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. இறுதியில் சூல்கள் விருத்தியடைந்து ஒரு வட்டத்திற்கு உள்ளாக்கப்படும் போது மாதவிடாய் நிகழ்கின்றது.

*கர்ப்பகாலம்:-*

சூலானது கருக்கட்டப்பட்டதும் மாதவிடாய் நிகழாமை ஏற்படுகின்றது.

*பாலூட்டும் காலம்:-*

ஒரு தாய் குழந்தையைப் பிரசவித்தவுடன், தாயின் உடலில் புரோலக்ரின்(prolactin) எனும் ஓமோனின் அளவு அதிகரிக்கின்றது. இக்காலப்பகுதியில் சூல்களின் வளர்ச்சி தடைப்படுகின்றது. குழந்தை பிறந்த பின் தாய் பாலூட்டாத விடத்து மாதவிடாய் 2-3 மாதங்களில் நிகழும். தாய் பாலூட்டல் நீடிக்கும் போது மாதவிதடாய நிகழாதிருக்கும் காலப் பகுதியும் நீடிக்கிறது.

*முற்றான மாதவிடாய் நிறுத்தத்தின் பின்னான காலம் (After the menopause):-*

சூலகங்களில் தொழிற்பாடுள்ள, சூல்களை உருவாக்கும் கலங்கள் (Graafian follicles) இல்லாது போகும் பட்சத்தில் இது நிகழ்கின்றது.

**நோயுடன் தொடர்புடைய் மாதவிடாய் நிகழாமை (Pathological amenorrhea) ஏற்படும் சந்தர்ப்பங்கள்:-**


பெண்ணின் உடலில் ஏற்படும் ஏதாவது அசாதாரண நிகழ்வின் (நோய்) காரணமாக மாதவிடாய் நிறுத்தம் ஏற்படலாம்.

இது இரண்டு வகைப்படும்.

1. முதலான மாதவிடாய் நிறுத்தம்
2. துணையான மாதவிடாய் நிறுத்தம்.

*முதலான மாதவிடாய் நிறுத்தம்*

சில வயது வந்த பெண்களில் ஒரு போதிலும் மாதவிடாய் நிகழாத நிலமை காணப்படுகின்றது. இதற்கு பல்வேறு காரணங்கள் ஏதுவாகலாம். சிலரில் மாதவிடாய் நிகழுகின்ற போதிலும், கண்களினால் காணமுடியாதவாறு அதாவது குருதி வெளியேற்றம் இன்றி இது நிகழ்கின்றது. இது யோனிவழியில் மென்சவ்வினால் அடைப்பு ஏற்படல் அல்லது கைமென் (hymen) துளையில்லாத




பெண்ணின் வெளிப்புறச் சனனி உறுப்புகள்

நிலை காணப்படல் போன்ற நிலமைகளில் ஏற்படலாம். இவர்களில் குருதி ஆரம்பத்தில் யோனிப் பகுதியில் தேங்கும் பின்னர் கருப்பை, சூலகக்கான் என்பவற்றிலும் தேங்கிக் காணப்படலாம். இவர்களில் பின்வரும் குணங்குறிகள் காணப்படும்.

* நாரி நோ
* வயிற்று வீக்கம்
* அமுக்கத்தினால் சிறுநீர் தேங்கிக் காணப்படல்

இவர்களுக்கு மென்சவ்வில் சிறு துளையிடல் போன்ற சிகிச்சை மூலம் குருதியை வெளியேற்றுவதனால் குணப்படுத்தலாம்.

அத்துடன் சில பிறப்புக் குறைபாட்டுக் காரணிகளாலும், கபச்சுரப்பியினால் சுரக்கப்படும் சில ஓமோன்களின் குறைபாடு, சூலகத்தின் விருத்தியின்மை, கருப்பை விருத்திக் குறைபாடு போன்றவற்றாலும் முதலான மாதவிடாய் நிறுத்தம் ஏற்படலாம்.

*துணையான மாதவிடாய் நிறுத்தம்*

சில பெண்களில் மாதவிடாய் சிலவருடங்கள் ஒழுங்காக நிகழ்ந்து பின்னர் நின்றுவிடுகின்றது. இது பல்வேறு காரணங்களினால் ஏற்படுகின்றது. பொதுவாக அறுபது வீதமான துணையான மாதவிடாய் நிறுத்தங்கள் மனஅழுத்தங்களினாலேயே (Mental Stress) நிழ்வதாக அறியப்பட்டுள்ளது. உதாரணமாக போலியான கர்ப்பத்தரித்தலை(Pseudo Pregnancy) குறிப்பிடலாம். இங்கு சில பெண்களில் தாயாக வேண்டும் என்ற கூடுதலான ஆசையினாலோ அல்லது பிரசவத்தைப் பற்றிய அதிக பயத்தினாலோ, கர்ப்பவதிகளுக்குரிய குணங்குறிகள் தோன்றுகின்றன. அதாவது மாதவிடாய் நிற்றல், குமட்டல், வாந்தி, வயிறு வீக்கமடைதல் போன்ற மாற்றங்கள் இவர்களில் ஏற்படுகின்றன இப்படியானவர்கள் திரும்பத் திரும்ப சிறுநீப் பரிசோதனைகளை (HCG) செய்து தாங்கள் கர்ப்பம் தரிக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ளவேண்டும். இருப்பினும் தாயாக வேண்டும் என்ற ஆசை அதிகளவில் உள்ளவர்களை நம்ப வைப்பது கடினம்.

சிலபெண்கள் தாங்கள் மெலிந்து அழகாக வரவேண்டும் என்ற அதிக ஆசையினால் உள்ளெடுக்கும் உணவின் அளவினைக் குறைக்கின்றார்கள் இறுதியில் ஒரு சில உணவு வகைகளைத் தவிர எல்லா உணவுகளையும் தவிர்க்கிறார்கள். இதனானால் மூளையின் தொழிற்பாடு பாதிக்கப்பட்டு மாதவிடாய் நிறுத்தமும் ஏற்படுகின்றது. இப்படியானவர்கள் உணவு உள்ளெடுப்பதை அதிகரித்தால் (சாதாரணமாக) இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யலாம். முடியாதவர்கள் உளநலவியலாளர்களிடம் ஆலோசனை பெறல் அவசியம்.

மற்றும் துணையான மாதவிடாய் நிறுத்தமானது அகஞ்சுரக்கும் சுரப்பிகளின் ஒழுங்கீனங்கள், ஓமோனின் ஒழுக்கீனத்தால் சூலகங்கள் பருமனடைதல், சூலகங்களில் ஏற்படும் கட்டிகள் போன்றவற்றாலும் நிகழலாம். இவற்றைவிட கருத்தடை மாத்திரை பாவிப்பவர்களில் கருத்தடை ஊசி பாவிப்பது நிறுத்தப்படும் போது மாதவிடாய் நிறுத்தம் நிகழலாம். இவர்களில் அநேகமாக 6 மாத காலப்பகுதியினுள் தாமாகவே மாதவிடாய் நிகழும். ஆனாலும் ஒரு தொகுதியினருக்கு ஏற்படுத்துவதற்கு சிகிச்சை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.


**செ.லோகேந்திரராஜ்**
**லோ.ராஜுகி**
(யாழ். மருத்துவ பீட மாணவர்கள்)


**அதிகரித்த இரத்தப்போக்கு (Menorrhagia)**

மாதவிடாய் ஒழுங்காக உள்ள போதிலும் சில பெண்களில் இரத்தப்பெருக்கு அதிகளவில் பின்வரும் காரணங்களால் ஏற்படுகின்றது.

* கருப்பை, சூலகங்களில் ஏற்படும் நோய்கள் கட்டிகள்.
* மனநிலை பாதிக்கப்படல், அதிக கவலை.
* கர்ப்பந்தரித்தலில் ஏற்படும் பிரச்சினைகள்
* தொற்று நோய்கள்

சில பெண்களில் பூப்பெய்திய சில காலங்களில் அதிகளவு குருதிப் பெருக்கு ஏற்படுகின்றது. இது பொதுவான ஒரு செயற்பாடலல்ல. ஆகவே வைத்தியரை நாடி ஆலோசனை பெறுவது நல்லது.

மற்றும் சில பெண்களில் குறுகிய கால இடைவெளியில் அடிக்கடி மாத விடாய் நிகழ்கின்றது. இது பொதுவாக பின்வரும் சந்தர்ப்பங்களில் காணப்படலாம்

* திருமணம் முடித்து சில மாதங்கள்
* கருச்சிதைவின் பின்
* குழந்தை பிறந்த பின்னர்

இவ்வாறு நிகழ்வதனால் குருதிச் சோகை ஏற்பட வாய்ப்புண்டு.

**மாதவிடாயின் போதான நோ (Dysmenorrhea)**

பொதுவாக மாதவிடாயின் போது நோ ஏற்படுவதில்லை. இருப்பினும் சில பெண்களில் மாதவிடாயின் போது அதிக நோ ஏற்படுவதனால் அவர்கள் மிகவும் வேதனை அடைகின்றனர். இது பின்வரும் காரணங்களால் ஏற்படலாம்.

இடுப்புக்குழியில் ஏற்படும் தொற்று நோய்களினால்:-

இதன் போது மாதவிடாய்க்கு முன்னரே நோ தொடங்கி விடும். அத்துடன் இந்நோவுடன் அதிகரித்த இரத்தப் போக்கும் உடலுறவின் போது நோவும் ஏற்படும்.

தொற்று நோய் தவிர்ந்த காரணங்களினால்:-

இக்காரணங்கள் பொதுவானதாகவும், பெரும்பாலும் இளம் பெண்களிலும் ஏற்படுகின்றது. இங்கு கருப்பைச்சுவரிலுள்ள தசைகளில் தசைப் பிடிப்பு ஏற்படுகின்றது. இதனால் கருப்பைச் சுவரிலுள்ள குருதிக் கலன்கள் அழுத்தப்பட்டு குருதி விநியோகம் தடைப்படுகின்றது. இதன் விளைவாக கடுமையான நோ (Ischemic Pain) ஏற்படுகின்றது.

இவற்றைத் தவிர, கருப்பைக் கழுத்து மென்சவ்வுகள் இறுக்கமடைதல், ஓமோன்களின் சமநிலையற்ற தன்மை. அதிகரித்த புரஸ்ரகிளன்டின் (Prostaglandin) செயற்பாடு மற்றும் மாதவிடாய் மிகவும் வேதனையானது என நினைக்கும் மனநிலை போன்ற சந்தர்ப்பங்களிலும் இது ஏற்படுகின்றது. இவ்வாறான நோ திருமணம் செய்த பெண்களைவிட திருமணம் செய்யாத பெண்களிலேயே காணப்படும். இவை சாதாரணமாக ஒரு பிள்ளை பிறந்தவுடன் குறைந்து விடும்.

(தொடரும்)

## கலையுள்ளம் படும்பாடு

கலையோடு இளநெஞ்சம் உறவாட
கவியோடு பருவங்கள் அலைமோத
மதுவோடு வண்டினம் உறவாட
மதியிழந்து அடியற்ற மரமாக
இயலோடு இன்னிசை கலந்தாட
இணையிலா கற்பனைகள் உருவாக
கலையோடு எழில்நங்கை நடமாட
கடல்போல துயரமது அலைமோத

மதியது வானிடையே மறைந்தோட
மலைபோல எண்ணங்கள் பலவாக
நிலையாத செல்வங்கள் எமைநாட
நிதியோடு உள்ளங்கள் விளையாட
புயலோடு மனமது போராட
புவிமீது நீர் சிந்தும் நிலைகாண
தவிப்போடு என்னுள்ளம் கண்மூட
தனிமரமாய் கலையுள்ளம் கவிபாட

கடலோடு நதிவந்து கலந்தாட
கவிபாடும் இளநெஞ்சம் குளமாக
வித்தார உருவெடுத்து உளமாட
விதியோடு கலையுள்ளம் விளையாட
சில்லென்ற் தென்றல் எனைவருட
சிலையோடு சித்திரங்கள் கலையாக
கவியாகக் கற்பனைகள் உருவாக
கலையுள்ளம் படும்பாடு இதுவன்றோ!

- தர்ப்பணா சிறிமகாதேவன்-

# யாரோடு நோக...?

"எப்படியாவது அவரைக் காப்பாத்துங்க டொக்டர். மாதாவே! ஜேசுவே! ஆண்டவரே! அவர இரட்சியுங்கள். ஐயா! அவர எப்படியாவது காப்பாத்துங்க டொக்டர்" என்ற என் இறைஞ்சும் குரலுக்கு....

"அம்மா! சற்று அமைதியாக இருங்க. நாங்க எங்கட முழு முயற்சியும் எடுக்கிறம்தானே" என்கிறார் அந்தப் பெரிய டாக்குத்தர் ஐயா. என்னால அமைதியாக இருக்க முடியுமா?

"ஐயா! எப்படியாவது அவரக் காப்பாத்தித் தாங்க ஐயா" என்று தொடங்க...

அங்கிருந்த நேர்ஸ் "இதில நிண்டு கத்தாம வெளியே போய் இரு" என்று எரிந்து விழுந்தாள். என்ன செய்வது? வெளியே வரமுன் அவரத் திரும்பிப் பார்க்கிறேன்.

பாவி மனுஷன் எந்த அசுமாத்தமும் இல்லாம கட்டை மாதிரி கட்டில்ல கிடக்குது. தலையிலும், வயித்திலும்,கால் தொண்டையிலும் பெரிய கட்டுக்கள் போட்டுக்கிடக்குது. பெரிய டாக்குத்தர் ஐயாவுடன் நாலஞ்சு டாக்குத்தர்மார் நிண்டு, நெஞ்சிலே தேய்ப்பதும், மூக்கினுள் வயரினைச் சொருகுவதும், பிறசர் பார்ப்பதும், ஏதோ பெட்டி மாதிரி மிசினைப் பூட்டி அந்தச் சின்ன ரீவியில பச்சை நிறத்தில அலையலையாகவும், கோடுகோடாகவும் ஓடுவதைக் கவனிப்பதும், கையில ஊசிகளைக் குத்தி ஏதேதோ உள்ளுக்கு ஏத்துவதுமாக இருக்கின்றனர்.

நேர்ஸ் மீண்டும், "அம்மா உன்னைத்தான்! உனக்கு எத்தின தரம் சொல்லுறது வெளியே போய் இரு எண்டு." என்று பாய்ந்தாள். என்ர நிலம அவளுக்குப் புரியுமா? மனசுக்குள் அவளைத் திட்டியவாறு கதவைத் தள்ளிக் கொண்டு வெளியே வருகிறன்.

வெளியே வந்து அந்த சிமெந்துத் தரையில குந்தியவாறு நிமிர்ந்து பார்க்க மேலே தொங்கிய வெள்ளைப் பலகையில, சிவப்பு எழுத்தில 'அதிதீவிர சிகிச்சைப் பிரிவு' என எழுதிக்கிடக்கிது.

'மேரி மாதாவே, ஜேசு பாலனே, எங்கள் ஆண்டவரே அவர எப்படியும் காப்பாத்துங்க' என மனசுக்குள் ஜெபித்துக் கொள்கிறேன். மனசு நீருக்குள் விழுந்த கல்லாய் பழைய நினைவுக்குள் மூழ்குகிறது.

மயிலிட்டியில் எவ்வளவு சீரும் சிறப்புமாய் வாழ்ந்தோம். நாலு வள்ளங்கள் சொந்தமாக வைத்துத் தொழில் செய்துகொண்டிருந்தவர். ஸ்ரீபன் சம்மட்டியார் என்றால் மயிலிட்டி மட்டுமல்ல சுற்றுமுள்ள பிரதேசங்களுக்குமே தெரியுமளவுக்கு பிரபலமானவராகி இருந்தார்.

எமக்கு திருமணமான அன்றே என்னருகில் அமர்ந்து, "பிலோமினா உன்னை நான் பிலோமிம்மா என்றுதான் கூப்பிடுவேன்." என்றவாறு என் கையை தன்கையில் வைத்து விரல்களைக் கோர்த்து இறுக்கிக் கொண்டார்.

"என்ர குஞ்சு" என்று அன்றே அவர அணைத்துக் கொண்டேன். எம் தாம்பத்தியம் அன்றுமுதல் இன்றுவரை அதே அன்பும் பாசமும் மாறாமல் இருக்கிறது.

இடைக்கிடை நான் அவர் தலைமுடியைக் கோத, என்மடியில் கிடந்தவாறே, "பிலோமிம்மா எங்கட கடல் மட்டுமல்ல, மண்ணுங்கூட பூரிச்ச மண்ணடி. எண்ணத்தைப் போட்டாலும் நல்லா விளையுமடி. இந்த மடியில கிடந்து இந்த மண்ணில தான்டி நான் சாகவேணும்." என்பார்.

"நானிருக்க நீங்க சாகமுடியுமா? இதென்ன இப்ப விசர்க்கதைகள்?" என்றவாறு அவர் வாயைப் பொத்துவேன்.

"இல்லையம்மா. ஆம்பிளை பெண்டா அன்பான பெண்டாட்டி இருக்கயக்கயே செத்துட வேணுமடி. மனிசி போயிட்டா புருஷன் நிலமை நாயைவிடக் கேவலமாயிடுமடி. கொடுத்து வைச்சவன் மனிசியிருக்கயக்கயே செத்துடுவாண்டி" என்று தொடங்குவார்.

நான் அவர முறைக்கப் பார்க்க, என் கண்கள் கலங்க, "சரி பிலோமியம்மா நான் இனிக் கதைக்கயில்லை" என என்னைக் கட்டிக் கொள்வார்.

அவரைப் போலவே அந்த மண்ணும் விசித்திரமானதுதான்.

அவர் நட்ட வாழைகளும், தென்னைகளும் பூரித்து, பதாளித்து, குலைகுலையாய்த், தள்ளி, மலர்ந்து நிற்பதே அதற்கு சான்று பகரும்.

அவரில ஒரு பழக்கம்... தினமும் இரவு அன்று முழுவதும் நான் என்னென்ன செய்தாரோ, அவ்வளவையும் அப்படியே மறைக்காம என்னட்டச் சொல்லி விடுவார்.

சிலதை, "இப்படிச் செய்தது பிழையாடி பிலோமிம்மா?" என்றும் கேட்பார்.


ஆனா தான் நினைச்சதுதான். அத மாத்தவேமாட்டாது. இந்தப் பிடிவாதக் குணந்தான் எனக்கு அவரில பிடிச்சது. பிடிக்காததும் இந்தக் குணந்தான்.

எங்கட மூத்தவன் றொகான் வயத்தில தங்கிய நாளிலிருந்தே என்னைப் பூப்போலத்தான் தாங்கினார்.

இடையிடையே என் வயித்தில தன்ர காதை வைத்துக் கேட்பார். கதைப்பார். எனக்கு சிரிப்பாகவும் இருக்கும், சந்தோஷமாகவும் இருக்கும்.

"மாங்காய் வேணுமாடி பிலோமிம்மா" என்று மாங்காய்களாகக் கொண்டுவந்து குவிப்பார். தானே சமைத்து ஊட்டியும் விடுவார். என்னை வேலை செய்யவே விடமாட்டார். எப்பவும் என் பக்கத்திலேயே இருப்பார்.

றொகான் பிறந்த போது, "பிலோமிம்மா இப்படி நீ கஷ்டப்பட்டு வேதனைப்பட வேணுமெண்டா, நாங்க பேசாம ஒரு பிள்ளையை வாங்கி வளர்த்திருக்கலாமடி. நீ இப்படி வேதனைப்படுவதை என்னால தாங்கேலாதடி" என்றவாறு என் கரங்களைத் தன் கரங்களில் வைத்தவாறே, இதமாய் நெற்றியில் முத்தமிட்டு கண்கலங்கினார்.



'சித்தர் அனவரதன்'
(வ.அனவரதன்.)

என் உடம்பு மட்டுமல்ல மனசுங்கூடச் சிலிர்த்தது.

"என்னங்க இது குழந்தைப் பிள்ளைபோட்டம்? எங்கட பிள்ளைதானே! நான்தானே பெறவேணும். ஆரும் பெத்தது எங்கடயாயிடுமா?" என்று அவரத் தேற்றவேண்டியிருந்தது.

பிறகு மூன்று வருஷத்தால், மகள் ஆஷா பிறந்த, உடனே, "இனிக் காணும் பிலோமிம்மா. இதுக்கு மேல உன்னால தாங்கேலாது" என்று நிறுத்திவிட்டார்.

ஆஷாவுக்கு பத்து வயசு நிரம்பியிருக்கும்போதுதான் தொண்ணூறாம் ஆண்டில் எம் பகுதியை நோக்கி ஷெல்லடிகள் ஆரம்பித்தன. ஆமி வரப்போகுதென்றவாறு சனங்கள் வேறிடங்களுக்கு போகத் தொடங்கிவிட்டதுகள்.

"என்னங்க நாங்களும் வெளிக்கிடலாமா?" எனக் கேட்டதற்கு...

"என்ன பிலோமினா எங்கட மண்ணையும் கடலையும் விட்டிட்டு நாங்க எங்க போறது? இஞ்ச ஒண்டும் வராது. நீ யோசிக்காத" என்றார்.

ஆஷா ஓடிவந்து, "அப்பா!, எல்லோரும் வெளிக்கிட்டுப் போகினமப்பா. நாங்களும் போகத்தானே வேணும். ஷெல்லும் நிறைய கிட்டவா அடிக்கிறாங்களப்பா." என்றாள்.

"இல்லைப்பிள்ளை, இஞ்சை ஒண்டும் வராது. நாங்க பிறந்த மண்ணைவிட்டு எங்கட வீட்டைவிட்டு நம்மள வளர்த்த கடல விட்டு எங்கயம்மா போறது? நீ பயப்படாத பிள்ளை, அப்பா இருக்கிறன் தானே" என்றார்.

ஆனால், அன்று இரவு அடிக்கத் தொடங்கின ஷெல்லடியில ஆஷாவும், வீடும் சிதறிப் போக உடுத்த உடுப்போட வெளிக்கிட்டதுதான். அடுத்தநாள் அங்கால போகவே முடியாமப் போயிட்டுது. ஆஷாவின் உடலை அடக்கம் செய்யக்கூட அவகாசம் இல்லாமல் நடந்தோம். யாரை யார் தேற்றுவது? அவரத் தேற்ற யாரால முடியும்? கனத்த மௌனம்தான் எம்மை ஆக்கிரமித்திருந்தது.

தெல்லிப்பழை அம்மன் கோயில்லை தங்கியபோதுதான், "பிலோமினா என்ர பிள்ளைய நானே பலி கொடுத்திட்டனே" எனக் கதறத் தொடங்கினார்.

ஆஷாவில உயிரையே வைச்சிருந்த றொகானும், "என்ர தங்கச்சி போயிட்டாளே அம்மா" எனக் கத்த, அவளச் சுமந்து பெத்த என்ர வயிறு என்ன பாடுபட்டிருக்கும்? என்னை யார் தேற்றுவது?

ஆனாலும் அவர்கள் இருவரையும் நான்தான் தேற்றவேண்டியிருந்தது.

"கர்த்தரே ஏன் எம்மை இப்படி வருத்துகிறீர்?" என ஆண்டவரைத்தான் நோக முடிந்தது.

பின்னர் 'அவர்களின்' உதவியாலும், இவரின் முயற்சியாலும் பாசையூரில் சிறுகொட்டிலில் வீடமைத்து குடிபுகுந்தோம்.

வயிற்றுப்பாட்டுக்கு என்ன வழி?

சொந்தமாய் வள்ளங்கள் வைத்துத் தொழில் செய்வித்தவர், பிறர் வள்ளங்களில் தொழிலுக்கு செல்லத் தொடங்கினார். அதில் கூட எத்தனை தடைகள், எத்தனை கண்டங்கள்!

மாலையிலும் கரை வலை வீசுவார். றொகானும் உதவிக்குப் போய் வருவான்.

இவற்றுடன், கிடைத்த ஒழுங்கற்ற நிவாரணமும் எம்மை ஓரளவு ஸ்திர வாழ்விற்கு வழிகாட்டிற்று.

என்னதான் இருந்தாலும் எங்கட மண்ணுக்கு ஈடாகுமா? எம் ஆஷாவின் இழப்புத்தான் ஆறக்கூடியதா?

எனக்காக அவரும், அவருக்காக நானும், றொகானுக்காக இருவரும் ஏதோ வளைய வந்து கொண்டிருந்தோம்.

இவர்தான் நிறைய மாறிவிட்டார். ஆனாலும் தன்கவலை என்னைத் தாக்கி விட்டிடுமோ என்பதில் அவதானமாக இருந்து தன் மனவேதனைகளை தனக்குள்ளேயே புதைத்துக் கொண்டார்.

"பிலோமினா கஷ்டமாயிருக்காம்மா?" என்பார்.

"நீங்க இருக்கும் வரை எனக்கென்ன கஷ்டம்?" என்பேன்.

"என்னம்மா செய்வது? காலத்தின் கோலம். நீ ஒண்டையும் யோசிச்சுக் குழம்பாத. எல்லாம் கர்த்தர் ஆணைப்படிதான் நடக்கும்." என்றவாறு என்னை ஆதரவாய் அணைத்துக் கொள்வார்.

அந்தப் பரந்த மார்பில் தஞ்சமாகும்போதுதான் என் கண்கள் பொங்கி, நீர் பெருகும். அவருக்குத் தெரியாமல் மறைத்துக் கொள்வேன். அவரும் மேல பார்த்து எனக்குத் தெரிய விடாமல் பீறிடும் கண்ணீரை அடக்கிக் கொள்வார்.

இந்தக் காலத்தில்தான் தொண்ணூற்றி ஐந்து ஐப்பசிக் கடைசியில் தென்மராட்சி நோக்கிய சரித்திர இடப்பெயர்வு ஆரம்பித்தது. அந்தச் சன வெள்ளப் பெருக்கில் நாமும் சிக்கி சாவகச்சேரியில் கச்சாயை அடைந்தோம்.

அந்தப் பெயர்வு அனுபவித்தவர்களுக்கே புரியும். சொல்லியோ, எழுதியோ புரிய முடியாத அவலம் அது.

முதல் நாளிரவு புறப்பட்டு அடுத்தநாளிரவு வரையான இருபத்திநான்கு மணி நேரமாய் நான்கு மைல் தூரத்தை, வெய்யில், மழை, பனி, குளிர், வெள்ளம் இவற்றுடன் சன நெரிசல், வாகன நெரிசல்களுக்கூடாக, உணவோ, நீரோ, காலாற இடமோ இன்றி நத்தை வேகமாய் நகர்ந்த கொடிய அனுபவம் அது.

கச்சாயில் தேவாலயத்தில் தங்கியிருந்தோம். இவருக்குத்தான் அப்படியிருப்பதுபிடிக்காதே. அங்கே யூ.என்.எச்.சீ.ஆர். ஆக்கள் தந்த கூரையின் உதவியுடன் மீண்டும் கொட்டில் வீடமைத்து விட்டார். அத்துடன் கச்சாயிலிருந்து கடற் தொழிலுக்கும் சென்றதால் எம்மால்தொடர்ந்து வாழமுடிந்தது.

றொகானும் பக்கத்தில் இருந்த கராஜில் தொழில் பழகிக் கொண்டிருந்தான்.

கராஜில் 'மெக்கானிக்' தொழில் பழகுகிறான் என்று நாமிருக்க அவனோ அங்கு காதலும் பழக ஆரம்பித்துவிட்டான் என்பதை நாலு மாதத்தில் நான் உணர்ந்து விட்டேன்.

என்ர பிள்ளையில ஏற்படுகிற மாற்றம் எனக்கா விளங்காது?

எந்த தாய்க்குத்தான் தன்ர பிள்ளையில ஏற்படுகிற மாற்றம் புரியாது? அதுதான் தாய்மை என்ற உன்னதம். அது தாய் என்பவளால் மட்டும் உணரப்படும் அலாதியான உறவு அனுபவம்.

இது இவருக்குத் தெரிந்தால் என்னவாகுமோ என்று நான் பயந்து கொண்டிருந்தேன். இது என்னைப் பாடாய்ப் படுத்தியது. என்னில் சின்ன வித்தியாசம் ஏற்பட்டாலும் என்னில தன்னையே காணுகிற இவருக்குத் தெரிஞ்சிடுமே.

"என்ன பிலோமிம்மா? எனக்கு மறைச்சு, பயந்து எதை யோசிச்சுக் குழம்புகிறாய்? என்னம்மா ஏதும் கஷ்டமாயிருக்காம்மா?" என்று கேட்டே விட்டார்.

"நீங்க இருக்கும் வரை எனக்கு என்னங்க கஷ்டம்? அது ஒண்டு... மில்...ல..." என்று இழுத்தேன்.

"என்ன இண்டைக்குப் புதுசா ஒண்டு.. மில்..ல.. எண்டு இழுக்கிறாய்? என்ன விஷயம்?" என்றார். அவருக்கு இதுவரை, ஏதாவது மறைச்சிருக்கிறனா? இல்லையே. இதையும் என்னால மறைக்க முடியுமா?.

"அது வந்துங்க... நம்ம..... றொகான்...."

"என்ன... றொகானுக்கு.... என்னம்மா....?" என்று பதற்றப்பட்டார்.

சூழலின் பாதிப்பால் அப்போது பலதையும் எண்ணிக்குழம்பிவிட்டார் போல, "என்ன பிலோமினா? அவன் எங்கையும் போயிட்டானா?" என்றார் அந்தரமாய்.

"இல்லையுங்க..... றொகான்.... யாரோ பிள்ளையை விரும்பிற மாதிரி எனக்குப் படுகுதுங்க.... அது தான்"

"அட இதுதானா? நான் என்னவோ எண்டு பயந்திட்டேன் அது சரி, அவன் உனக்குச் சொன்னவனா? யாராம் பிள்ளை?"

"அவன் என்னட்ட சொல்லயில்லயுங்க. ஆனா நான் அப்படித்தான் உணர்கிறன்."

"சரி, ஆள் வரட்டும் கேட்டுப்பார்ப்போம்" என்று கதைக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டார்.

எனக்குத்தான் என்ன நடக்குமோ என்று நெஞ்சு படபடத்துக் கொண்டிருந்தது.

பின்னேரம் அவன் வந்ததும், இவர் அவனைப் பாசமாய், "றொகான் இஞ்ச வாடாப்பா" என்று கூப்பிட்டார்.

அவன் "என்னப்பா?" என்றவாறு வந்தான்.

"யாரு அந்தப் பிள்ள?"

"அப்....பா!.... யாருப்...பா?" என்று திக்கினான்.

"றொகான் எனக்கு எல்லாம் விளங்கும். யாரு அந்தப் பிள்ள? நீ உண்மையில அவள விரும்பிறியா? அவளும் உன்ன விரும்பிறாளா?"

"ஓ...மப்பா..." தலை குனிந்து காலால் நிலம் கீறினான்.

"நீ அவளின்ர மனசயும்தானே விரும்பிறாய்? பிள்ளை நல்ல குணந்தானே!"

இவர் எதையும் வெளிப்படையாகக் கதைப்பார். இக்கேள்வி அவனைச் சீண்டியிருக்க வேணும். தலை நிமிர்ந்தான்.

"அவளின்ர குணத்தாலதானப்பா அவள விரும்பிறன்" மனச்சுத்தியுடன் நேர்மையாய், விறைப்பாய் அவன் பதில் வந்தது.

இவர் சிரித்துக் கொண்டே, "அவளும் உண்மையில உன்னை விரும்பிறாள் என்டா நாளைக்கு அவள இஞ்ச கூட்டிக்கொண்டு வா, கதைப்பம்" என்றார்.

"சரியப்பா..." அவன் மனம் நிரம்பிய மகிழ்வுடன் ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்தபடி போய் விட்டான்.

நான் இவரிடம், "என்னங்க! இப்படி உடனே ஓமெண்டிட்டியள்?" என்றேன்.

"பிலோம்மிம்மா, அவனுக்கு பத்தொன்பது வயசு முடிஞ்சுது"

"அதுகாக்காக?" நான் அவசரமா அவர மேல கதைக்கவிடாம குறுக்கிட....

"இல்லையடி, அவன் எங்கட பிள்ள, எங்கள மீறி எதுவும் செய்ய மாட்டான். ஆனா அவன்ர விருப்பத்த நிறைவேத்திறது எங்கட கடமையல்லவா? அவன வேதனைப் படுத்த என்னால முடியாது. அவன் உடம்பைப் பாத்து மட்டும் விரும்பியிருக்க மாட்டான் என்ற நம்பிக்கை எனக்கிருக்கு"

"என்னங்க! அது எனக்கும் தெரியும்தானே. ஆனா பெட்ட என்ன மாதிரியோ?"

"என்ன பிலோமிம்மா? எங்கட பிள்ளையின்ர தெரிவு பிழைக்காது எண்டு நினைக்கிறன். நாளைக்கு பெடிச்சி வரட்டன், பாத்து விசாரிச்சிட்டு நல்லதெண்டா செய்துவைப்பம். எங்களுக்கும் பிரயோசனமாகவும் சந்தோஷமாகவும் இருக்கும்தானே. உனக்கும் வேலைக் கஷ்டம் குறையும்தானே"

"எனக்கென்ன வேலைக் கஷ்டம்?"

"என்ன பிலோமிம்மா உனக்குப் பிடிக்கயில்லையா?"

"அப்படியில்லையுங்கோ...ஆனா..." என்றவாறு இழுக்க...

"நீ ஒண்டுக்கும் யோசிக்காத, எங்களுக்கும் வயசாகி விட்டுது தானே. இனி பேரன் பேத்தி எண்டு வர உனக்குத்தான் என்னைக் கவனிக்க நேரமிருக்குமோ என்னவோ" என்றவாறு என் கன்னத்தைக் கிள்ளினார்.

"இது என்னங்க கதை!, எனக்கு எல்லாமே உங்களுக்குப் பிறகுதானே. அது உங்களுக்கு தெரியாது?" என்றவாறு அவர் மார்பில் சாய்ந்து மார்பு ரோமங்களைக் கோதியபடி வலக்கையால் அவர் மார்பில் மெதுவாய்க் குத்தினேன்.

அவர் அப்படியே என்னை இறுக அணைத்து முத்தமிட்டார்.

"ச... சீ... விடுங்க" என்றவாறு விலகாமலேயே நின்றேன்.

"என்ன பொம்பிளைக்கு வெக்கம் வந்திட்டுதோ?" என்றார்.

எட்டி அவர் காதைத் திருகியபடி, "செல்லம் கூடிப்போச்சு. என்ன இண்டைக்கு குஞ்சுக்கு வலு சந்தோஷமான நிலைபோல. மருமகள் வீட்ட வரப்போறாள். கவனம் இனி இந்தக் கூத்தெல்லாம் அளவோட" என்றவாறு என் வேலைக்குள் புகுந்து கொண்டேன்.

அவரும், "பிலோமிம்மா நாளை மருமகளுக்கு இஞ்சதான் சாப்பாடு என்ன?" என்றவாறு, "நான் போய் சாமான்கள் ஏதும் வாங்கி வாறன்" எனப் புறப்பட்டுப் போய்விட்டார்.

மறுநாள் றொகானுடன் நாணமாய் வந்த பெண்ணைப் பார்த்ததுமே எனக்குப் பிடிச்சுவிட்டுது. அவ

(XIII ஆம் பக்கம் பார்க்க)

# மணமான பின்னும் காதலிக்கலாமா?

**ஆவரங்கால். கண்ணன்.**
திருமணம் செய்யும்படி என்னை வற்புறுத்திய எனது சகோதரர் அதற்குப் பின்னர் எனக்கு உதவி செய்வதையே நிறுத்தி விட்டாரே!
☺**ஏற்றி விட்டு ஏணியை எடுப்பவர்கள் எங்கும் உண்டு கண்ணா!**

❀ ❀ ❀

**கட்டுடை. அழகு.**
பாக்கியசாலி யார்? மணமானவனா? மணமாகாதவனா?
☺**வெட்டியவனுக்கு ஒரு கேணி; வீணனுக்குப் பல கேணி.**

❀ ❀ ❀

**விளான். வசந்தி.**
எருமைகளும் ராகிங் செய்யுமா?



☺எருமைகள்தான் 'ராகிங்' செய்யும்!

❀ ❀ ❀

**நெல்லியடி. வரதன்.**
அழகோடு சீதனத்தையும் எதிர்பார்ப்பவர்கள் குறித்து...?
☺**பணம் பத்தாக வேண்டும்; பெண்ணும் முத்தாக வேண்டும் என்று எதிர்பார்க்கும் பித்தர்கள்!**

❀ ❀ ❀

**கேணியடி. தாசன்.**
இலட்சிய மனைவி கிடைக்க என்ன செய்ய வேண்டும்?
☺**இலட்சங்களைப் பார்க்காது இலட்சணங்களைப் பாரும்.**

❀ ❀ ❀

**அராலி. கார்த்திக்.**
ஒழுக்கத்தைப் பின்பற்றாத சமூகம் என்னவாகும்?
☺**உறுதி உன் பேரில்; விதைப்பு என் பேரில்; விளைச்சல் அடுத்தவன் கணக்கில் என்றாகி விடும்.**

❀ ❀ ❀

**தச்சன்தோப்பு. இராகுலன்.**
பொய் கவர்ச்சியாக இருக்கின்றதே?
☺**பலரும் 'மெய்'யின் கவர்ச்சியில்தானே மயங்குகின்றார்கள்!**

❀ ❀ ❀

**ஊரேழு. ஜீன்.**
கண்ணும் மணியுமாக இருந்த காதலர்கள் பிரிந்து விட்டார்களே...?
☺**கையில் Money இல்லாவிட்டால் பிரிவுதானே!**

❀ ❀ ❀

**யாழ். ஜனா.**
சிலர் நம்பிய பெண்ணை ஏமாற்றுவது ஏன்?
☺**நம்பாத பெண்ணை ஏமாற்ற முடியாது என்பதால்.**

❀ ❀ ❀

**மானிப்பாய். துளசி.**
காதலைக் கடிதம் மூலம் வளர்ப்பதா, நேரில் வளர்ப்பதா நல்லது?
☺**நேரில் வளர்க்க முற்படும் போது காதலோடு கருவும் அல்லவா வளர்ந்து விடுகின்றது?**

❀ ❀ ❀

**கைதடி. வர்ணன்.**
வீட்டில் மனைவி வேலை நிறுத்தம் செய்தால்...?
☺**வீட்டில் வேலை செய்தால் அல்லவா வேலை நிறுத்துவதற்கு?**

❀ ❀ ❀

**தாவடி. விநாயகன்.**
எனது காதலி தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்கின்றாளே?
☺**பதில் குறியீடாகவும் இருக்கலாம்.**

❀ ❀ ❀

**கொக்குவில். மனோகரன்.**
உடற் பருமனைக் குறைக்க என்ன செய்யலாம்?



☺நன்றாக விளையாடுங்கள் - எந்த விளையாட்டானாலும் சரி!

❀ ❀ ❀


**தாவடி. எஸ். லிங்கன்.**
போனால் வராதவை எவை?
☺**நேரமும், நற்பெயரும்.**

❀ ❀ ❀

**நவாலி. க. தீபன்.**
வித்துவானின் பலம் எது? பலவீனம் எது?
☺**வாசகர்கள். (அவர்களின் ஆதரவும், திட்டும்)**

❀ ❀ ❀

**கரவெட்டி. ரவிசங்கர்.**
பேய்க்குப் பயப்படாதவன், மனைவிக்குப் பயப்படுகின்றானே?



☺பலம் எங்குள்ளது என்பது இப்போது புரிகின்றதா?

❀ ❀ ❀

**சித்தன்கேணி. தாய்.**
வீதித் தடைகள் குறைகின்றவே? ஏன்?
☺**அப்பாவிப் பொதுமக்களை ஏற்றி, இறக்கி எரிச்சல் வாங்கித் தந்ததைத் தவிர அதனால் வேறு பயன் இல்லை என்பதை இப்போது காலம் பிந்தித்தான் புரிந்து கொண்டிருக்கிறார்களோ என்னவோ?**

❀ ❀ ❀

**ஊரெழு. ராஜன்.**
யாழ். நகரக் கடைகளில் வேலை செய்யும் பெண்கள் ஞாயிற்றுக் கிழமைகளிலும் கடமைக்குப் போவது ஏன்?
☺**வேலைக்குத்தான்!**

❀ ❀ ❀

**மானிப்பாய். கே. ரதி.**
கனவு காண்பதில் வல்லவர்கள் யார்?
☺**நமது தமிழ்க் கட்சியினரை மறந்து விட்டீர்களா?**

❀ ❀ ❀

**ஆனைக்கோட்டை. தீப்.**
வீதியில் போகும் இளைஞர் ஒருவர் என்னைக் கண்கொட்டாமல் பார்க்கின்றாரே?
☺**உம்மைக் கொட்டப் பார்க்கின்றார் என்று அர்த்தம். கொட்ட விடாமல் வெட்டுவது உமது திறமையைப் பொறுத்தது.**

❀ ❀ ❀

**யாழ். ராதா.**
வாழ்க்கையில் திருமணம் அவசியமா?
☺**இருக்கும் காணியை உழுது பயிரிட்டால்தானே அதற்குப் பெயர் வயல். இல்லாவிட்டால் 'வெறும் தரிசு' ஆகிவிடும் அது!**

❀ ❀ ❀

**நெல்லியடி. சுந்தர்.**
கனிகளில் சிறந்த கனி எது?
☺**க(ன)னி!**

❀ ❀ ❀

**கொழும்பு. டினேஷ்.**
கொழும்பிலிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றில் வித்துவானின் வித்துவம் குறித்து வாங்கு வாங்கென்று வாங்கப்பட்டுள்ளதே?
☺**வித்துவானை விமரிசிக்க அனைவருக்கும் உரிமையுண்டு. அதையும் சுவாரஸியமாக படித்து மகிழுங்களேன்!**

❀ ❀ ❀


**யாழ்ப்பாணம். வரன்.**
பௌர்ணமி விழாவில் உங்கள் பெயரைச் சுட்டாமல் உங்களைக் கீழ்த்தரமாகக் குறிப்பிட்டாரே ஓர் எழுத்தாளர்?
☺**எழுத்தை மட்டும் பார்த்தால் அவர் மேல் தரம் என்பது உண்மைதான்.**

❀ ❀ ❀

**புங்குடுதீவு. சபேசன்.**
காதலிக்குப் பூச்சரம் வாங்கிக் கொடுக்கலாமா?
☺**கூந்தலில் வைக்க என்றால் தவறில்லை. காதில் சுத்துவதற்கு மட்டும் முயற்சிக்காதீர். அது தப்பு.**

❀ ❀ ❀

**அனலைதீவு. சுஜத்.**
தகப்பனும் மகனுக்கும் குடிக்கும் குடும்பம் குறித்து...?




☺தந்தை எவ்வழி, மகனும் அவ்வழி!

❀ ❀ ❀

**மாவடி. க.ஸ்ரீ.**
காதலியின் பார்வை என்னைக் கொல்லாமல் கொல்கின்றதே!
☺**அவள் வேல் விழியாள் போலும்.**

❀ ❀ ❀

**சித்தங்கேணி. ப. பிரகாஷ்.**
க(ன்)னி முதிர்ந்தால்....?

# வித்துவான் பதில்கள்

☺**(கி/ப)ழும் ஆகிவிடும்.**

❀ ❀ ❀

**இணுவில். ஹரன்.**
மணமான பின்னர் காதலிக்கலாமா?
☺**தாராளமாக - மனைவியை!**

❀ ❀ ❀

**நீர்வேலி. விநோ.**
ஏழையின் சிரிப்புக்கும் பணக்காரனின் சிரிப்புக்கும் வேறுபாடு என்ன?
☺**ஏழை சிரித்தால் அவன் வயிறு நிறைந்திருக்கும்; பணக்காரன் சிரித்தால் வேறு நாலு பேரின் வயிறு எரிந்திருக்கும்.**

❀ ❀ ❀

**கல்வியங்காடு. அன்பு.**
செம்மணி விவகாரத்துக்கு நீதியான தீர்வு கிட்டுமா?
☺**நீதிவான் மட்டும் நீதியாக நடந்து பயனில்லை. விசாரணையாளர்களும் நீதியாக நடக்க வேண்டும். இல்லையேல் எல்லாம் கண் துடைப்பாக முடிந்து விடும்.**

❀ ❀ ❀

**வேலணை. சாந்தன்.**
செம்மணி விவகார சந்தேகநபர் ஒருவர் வெட்கித் தலைகுனிந்தாராமே?
☺**தான் புரிந்த மிருகத்தனமான செயல்களை உணர்ந்து அவர் தலை குனியவில்லை. போட்டோவுக்கு முகம் சிக்காமல் இருக்க அவர் எடுத்த முயற்சிதான் அது!**

❀ ❀ ❀

**உரும்பிராய். வேந்தன்.**
நம்மூரில் மாடு போல நெஞ்சை நிமிர்த்தி அடிக்கடி வீதி வலம் வரும் பெண்ணைத் திருத்த என்ன வழி?
☺**ஜல்லிக்கட்டு நடத்திப் பாருங்களேன்!**

❀ ❀ ❀

**குளப்பிட்டி. நித்தி.**
என் காதலி என்னை ஏங்க வைக்கின்றாளே. ஏன்?
☺**அவள் தாங்கத் தயாரில்லை என்பதால்!**

❀ ❀ ❀

**மானிப்பாய். செ. குமரன்.**
அழகுக்கு அவசியம் நடையா? உடையா?
☺**உடைதான். ஏனென்றால் உடையை வைத்துத்தான் இப்போது பலரையும் பெண் என்று தீர்மானிக்க முடிகின்றது.**

❀ ❀ ❀

## இவ்வார ஜோக்

**கிளின்ரன் குறித்து 'இன்ரநெற்'றில் வந்த ஜோக் இது:-**

**வழமையான மருத்துவ பரிசோதனைக்குச் சென்ற கிளின்ரனின் மனைவி ஹிலாரி, அங்கிருந்தவாறே கைத்தொலைபேசியில் வெளிநாட்டு விஜயம் மேற்கொண்டிருந்த தனது கணவனுடன் 'ஹொட் லைனில்' பேசினார்.**

**"ஹலோ! கிளின்ரன் ஹியர்!"**

**"படுபாவி! எத்தனை தரம் படித்துப்படித்துச் சொன்னேன் ஜாக்கிரதையாக இருக்கும்படி. இப்போது நான் தாயாகப் போகிறேன் என்கிறார் டக்டர். உமக்கு வெட்கம் இல்லையா இந்த வயதில் அப்பாவாக...?"**

**சந்தடிக் குழப்பத்தில் பேசும் குரல் கிளின்ரனுக்கு விளங்கவில்லை. தொலைபேசியை 'கட்' பண்ணி வைத்து விட்டார்.**

**மீண்டும் தொலைபெசி மணி அடித்தது. கிளின்ரன் ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்தார். திரும்பவும் அதே பேச்சு.**

**"ஹலோ! நான் திட்டுவது காதில் விழவில்லையா?"**

**"எல்லாம் நன்றாகக் கேட்கின்றது. ஆனால் திட்டுவது யார் என்றுதான் விளங்கவில்லை!" என்றார் கிளின்ரன்.**

# நம்பிய பெண்ணை ஏமாற்றுவது ஏன்?

**அச்சுவேலி. சுதா.**
பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் மரமேற வேண்டும் என்கின்றார்களே...?



☺சில மனிதப் பேய்க்கு வாழ்க்கைப்பட்டவர்கள் 'கோட்' ஏறுவதுதான் வழமை!

❀ ❀ ❀

**கொடிகாமம். மது.**
ஒரு துட்டுக்கு வழி இல்லாதவனும் பல லட்சம் சீதனம் கேட்கின்றானே?
☺**சாண் பிள்ளையானாலும் ஆண்பிள்ளையன்றோ!**

❀ ❀ ❀

**மல்லாகம். திருமதி மனோகரி.**
'வெல் கம்' என்று எங்கே கூறக் கூடாது...?
☺**சுடலையில்!**

❀ ❀ ❀

**மல்லாகம். ஜெகதீஸ்.**
கண்ணுக்கு அழகு எது? பெண்ணுக்கு அழகு எது?
☺**'மை'தான். கண்மையும், பெண்மையும்!.**

❀ ❀ ❀

**சுன்னாகம். ஹரி.**
நீர் பொறுக்கியா?
☺**ஆம் பொறுக்கிதான். பல நூற்றுக் கணக்கில் வந்து குவியும் கேள்விகளில் பொறுக்கி எடுத்துத்தானே பதில் தருகிறேன்.**

❀ ❀ ❀

**உடுவில். ரமேஷ்.**
வித்துவானை 'இன்ரநெற்றில்' பார்க்க முடியுமா?
☺**பாவம்-நமது சர்வதேச வாசகர்கள். இந்த அறுவைக் கஷ்டம் அவர்களுக்கு வேண்டாம் என்று அருள் கூர்ந்து விட்டு விட்டார்கள் போலும் நம் நிறுவனத்தினர்.**

❀ ❀ ❀

# இலட்சிய மனைவி கிடைக்க என்ன வழி?

(18)

அன்று மாலை எமிலி படுபிஸியாக இருந்தாள். மேனுடனும் மோலருடனும் தொடர்பிலும் இருந்தாள். மேனும் வேறெங்கும் போயிருக்க வில்லை.

இந்த அமளிக்குள் அன்று மாலை விடுதலை பெற்றுவிட்ட மேவின் பற்றித் தெரிந்துகொள்ள எமிலிக்கு அவகாசமில்லாமற்போய் விட்டது. விடுதலையாகிய பின் இருள் கவியும் நேரம் கடற்கரை மணற்பரப்பில் அவனது உடல் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

கொலையாளி பற்றி எந்தத் துப்பும் கிடைக்கவில்லை. மைக் மீதே சந்தேகம் எழுந்தது. பாணி அவனது கைவரிசையைப் பறைசாற்றியது.

மைக் எங்காவது உலாவுகிறானா? என்ற பீதி படரத் தொடங்கியது. பெருமளவில் சனப்புழக்கம் உள்ளதோர் நகரத்தில் எந்தவொரு சாட்சியமும் இல்லாமல் கொலை விழுந்திருக்கிறது.

நிம்மதிப் பெருமூச்சுவிட்டான் மேன். டானியலுடன் பேசிக்கொண்டிருக்கும்போது கிடைத்த செய்தியால் எமிலி பரபரப்படைவதையும் அவன் கவனிக்கத் தவறவில்லை.

உடனடியாக இடத்தைவிட்டு நழுவத் துடித்தாள் எமிலி. மேனோ அசைவதாக இல்லை. மாடிக்குச் சென்று மோலருடன் தொடர்பு கொண்டாள்.

மோலரோ மேன் - டானியல் சந்திப்புப் பற்றி விசாரித்தான். தினசரி எத்தனை கொலைவிழும் நகரத்தில் மேவினுக்காக அவன் அனுதாபப்படவில்லை. எமிலிக்கு அதுவும் ஏமாற்றமாக இருந்தது.

மேவின் பற்றிய சந்தேகங்களை அவள் ஏற்கனவே மோலரிடம் சொல்லாமல் விட்டது தப்பாகிவிட்டது. எனவே அடுத்து அவனது கொலைக் கேஸ் அவளுக்கு முக்கியமாகிறது.



# வெள்ளை ரோஜா முள்

**மு.சிவநேசன்**

புழுவாய்த் துடித்த கரோல் துள்ளி எழுந்து பல்லைக்கடித்தபடி அதனை அதே கையால் எடுத்து மைக்கின் மீது வீசினாள். அவள் எறியும் வேகத்தைக் கண்டு கலங்கினான் மைக். தலைக்கு மேலே வரும்கோலைத் தலையைக் குனிந்தபடி கைகளால் தடுத்தான் மைக். அது கையிலும் தலையிலும் பட்டு அவன் மூக்குநுனிகளைச் சீவி மார்பு வழி உருண்டு மடிமீது விழுந்து அவன் ஆடைகளைப் பொசுக்கிக் கொண்டது.

மைக்கின் அலறல் மயங்கும் குடிலின் கூடத்தில் மயங்கிக் கிடந்த கரோல் மீண்டும் நினைவுக்கு வந்தபோது முதுகில் எரிவு தாங்க இயலாது துடித்தாள். அவள் எழுந்து தள்ளாடி வெளியில் வரவும் மைக்கைப் பராமரிக்கும் ஜோனின் எடுபிடி ஆள் ரேகன் வரவும் சரியாக இருந்தது.

அவனைக் கட்டிக் கொண்டு ஓவென்று அழுதாள் கரோல். அவளைச் சமாதானப்படுத்தி தனது குடிலுக்குக் கூட்டிவந்து படுக்கவைத்தான் அவன்.

விடிந்ததும் ஜோனிடம் அவளை வருவது வரட்டும் என்று மைக்கின் குடிசைக்குள் நுழைந்தாள் அங்கே கட்டிலில் கைகள் கட்டப்பட்ட நிலைமையில் மருள மருள முழித்தபடி மைக் கிடந்தான்.

எதிரே எரிந்து முடிந்த விறகுத் தணலின் மீது சிவப்பாக ஜொலிக்கும் அந்த இரும்புக்கோல் கரோலின் கண்களில் பட்டது.

மைக் நீ தொலைந்தாய் எனக் கத்தியவாறே அதை அவதானமாக எடுத்துக் கொண்டு அவனருகே வந்தாள். மைக் மீண்டும் அலறினான்.

கத்தாதே என்று அவனது வாய்க்குள் அதைத் திணித்து அமுக்கினாள். புழுவாய்த்துடித்து மைக் அடங்கிப் போனான். விழிகள் சொருகிக் கொண்டன. வெறித்த பார்வையுடன் கரோல் நின்றிருந்தாள்.

மீண்டும் மீண்டும் கர்ஜனையுடன் சிரித்தாள் கரோல். குடிலைவிட்டு வெளியே வந்தவள் ஓட்டமெடுத்தாள். மைக்கின் நாய்கள் அவளைத் துரத்திக்களைத்துத் திரும்பிவிட்டன. காட்டுப்பாதை வழியே நீண்டதூரம் குறுக்கும் மறுக்கும் ஓடிஓடிக் களைத்து நடந்து ஆறி மீண்டும் எழுந்து நடக்கலானாள்.

மனித நடமாட்டமே இல்லாத பகுதிக்குள் வந்துவிட்ட உணர்வு தான் கண்ணில்பட்டது. இனியும் வாழ வேண்டுமா என்ற விரக்தியும் பிறக்கத்தான் செய்தது. கண்ணில்பட்ட கரோலைக் கைவிட்டமைக்காக ரேகனைத் தின்றுதள்ளினான் ஜோன்.

அத்தோடு மைக்கையும் பறிகொடுக்கும் அளவுக்குப் போதையில் கிடந்தமைக்கும் திட்டித் தீர்த்தான்.

மைக்கைச் சுவடு தெரியாமல் புதைக்க உத்தரவிட்டான் ஜோன். ஆழ்ந்த காட்டுப் பிரதேசத்தில் ஆழமான குழியில் மைக்கையும் சக்கர நாற்காலியையும் புதைப்பித்தான் ரேகன்.

மைக்கின் எடுப்பான சீவியம் இப்படிச் சுவடு தெரியாமல் முடிந்து விட்டது. சுழியன்ஸ் சகாப்தத்தின் ஆரவாரம் இப்படி அடுத்தவருக்குத் தெரியாமல் அடங்கவேண்டும் என்றுதான் விதி இருந்திருக்கிறது.

மைக்கின் மரணத்தைக் கொண்டாட எத்தனைபேர் காத்திருப்பார்கள். எவருக்கும் அதற்கான அவகாசம் கிட்டவில்லை. இனியும் பொலீஸார் அவனைத் தேடிக் கொண்டிருப்பார்கள். நாளை நடக்கும் கொலைகள் கூட அவன் பெயரால் தீர்க்கப்படும்.

* * *

கரோலினால் நடக்க இயலவில்லை. தாகமும் களைப்பும் அதிகமாக இருந்தன. காட்டுக் குழிகளில் தேங்கி நின்ற தண்ணீரை அள்ளிக் குடித்தாள். முகத்தைக் கழுவிக் கொண்டாள்.

விடிந்துவிட்ட பின்பும் மழை மேகங்கள் சூழ இருள் கௌவிக் கொண்டது. அடர்ந்த அக் காட்டுப் பிரதேசம் சாலைகளில் இருந்து வெகுதூரத்தில் இருக்கின்றது என்பதை அவள் உணர்ந்து கொண்டாள்.

மழை மெல்லத் தூறத் தொடங்கியது. அவளது மேனியெங்கும் எரிகாயங்களில் பட்டதும் வலி பல மடங்கு பெருகிக் கொல்லியது. வேதனையில் தவிக்கும் அவளுக்குச் சோதனையாகச் சோவென பெருமழை பொழியத் தொடங்கியது.

(தொடரும்)




கழுத்தறுக்கும் மேனை வெளியே அனுப்பவழியின்றி எமிலி தவித்தாள். அவனோ டானியலுடன் ஆழ்ந்த தொழில்நுட்பப் பிரச்சினைகள் பற்றிப் பேசிக்கொண்டிருந்தான்.

காப்புறுதி, இழப்புப் பெறுமதி, இழந்த பொருள்களின் விவரம் எல்லாம் டானியலிடமே அறியத் துடித்தான் மேன். டானியலோ தகவல்களைக் கசியவிடாமல் அவதானமாக இருந்தான்.

சந்திப்பு முடிவடைந்தபோது நள்ளிரவு கடந்திருந்தது. நிறைய நேரம் குடித்திருந்தும் இருவரும் நிதானம் தப்பாமல் அவ்வோடு அவதானமாக இருந்திருக்கிறார்கள்.

மேனால் எதையும் பெரிதாகப்பிடுங்க இயலவில்லை. அவன் வீதிக்கு வந்தபோது வாகனங்களில் மைக்கின் சுவடுகள் ஏதாவது தென்படுமா எனப் பொலீஸார் தேடிக் கொண்டிருந்தனர்.

தகவல்களைத் தெரிந்திருந்தும் வெளியிடாமைக்காக மோலர் தின்றுவிடுவான் என்ற அச்சத்தில் எமிலி பின்பு வாயே திறக்கவில்லை. கூறியிருந்தால் மேவினின் விடுதலையைத் தடுத்திருக்கலாம். கொலையைத் தடுத்திருக்கலாம். வங்கிக் கொள்ளை, ஆள் கடத்தல் பற்றியெல்லாம் நிறைய மேவினிடம் பிடுங்கியிருக்கலாம்.

* * *

நிலைமையின் கோரத்தை உணர்ந்த கரோல் பழுக்கக்காய்ச்சிப் பறந்துவரும் இரும்புக்கோலைத் தன் கைகொண்டு தடுத்தாள். அதன் வேகத்தைத் தணிக்க முயன்றாள்.

உலைப் பிரசித்திபெற்றது மைக்கின் வீசுங்கலை அல்லவா? அது குறிதப்புமா? தடுத்ததில் அவளது உள்ளங்கையையும் விரல்களையும் அள்ளிக் கொண்டது அது. வேகம் சற்றுத் தணிந்த நிலையில் அவள் மார்பில் வந்து குத்தி விழுந்தது.

கரோலுக்கு மீண்டும் மயக்கத்தைத் தெளியவைத்தது. என்றாலும் ஏதும் இயலாத நிலையில் அவள் விழிகள் மீண்டும் மூடிக்கொண்டன.

இருளைக்கிழித்த அவன் அலறல் வெகுதொலைவில் எவர் காதிலோ பட்டிருக்கிறது. உறக்கத்திலும் போதையிலும் இருந்த ஜோனின் ஆள் ஒருவன்தான் அதைக் கேட்டு எழுந்துவர முயன்றான்.

மைக்கைப் பராமரிக்கும் பணி அவனதாகவே இருந்தது. ஆனால் அவனால் நிதானமாக நடக்க இயலவில்லை.

மைக்கை மொய்த்த அவனது நாய்கள் அவனை நக்கிச் சமாதானப்படுத்த முயன்று கொண்டிருந்தன. அவனது எரிகாயங்களை அவை நக்கியது சற்றுத் தெம்பாக இருந்தது.

என்றாலும் வலி தாங்காமல் மைக் துடித்தான். தலையிலிருந்து மடிவரை முன்பக்கம் பட்டவிடமெல்லாம் எரிவது போன்ற உணர்வு தெரிந்தது.

எதிரே தரையில் சுருண்டு கிடக்கும் கரோலைப் பார்த்து மீண்டும் சபித்தான். இரும்புக்கோலை மீண்டும் எடுத்து அவளை நெருங்க முயற்சித்தான். அது சற்றுச் சூடு தணிந்திருந்தாலும் பரவாயில்லை என்று நினைத்துக் கொண்டான்.

அவளது சட்டையை அதன் சூட்டில் உருக்கி உரித்தான். அவள் முதுகில் KAROL - I LOVE YOU - MIKE என எழுதத் தொடங்கினான். சில எழுத்துக்களை எழுதி முடிக்க முன்னர் சூடு தணிந்தே விட்டது.

மீண்டும் அதைச் சூடாக்கி கொண்டு வரும் வலு அவனிடம் இருக்கவில்லை. என்றாலும் அதைச் சூடு காட்ட நெருப்பினில் வைத்துவிட்டுச் சக்கர நாற்காலியில் சாய்ந்து கொண்டான்.

ஒப்படைக்கலாம் என்பது ரேகனின் எண்ணம். இரவிரவாகக் கரோலைத் தேடியவர்களில் அவனும் ஒருவன்.

கரோலைச் சமாதானப்படுத்தி தூங்கவைத்து அவளது காயங்களுக்கு மருந்து போடும்படி தனது பிள்ளைகளிடம் கூறிவிட்டு மைக்கிடம் வந்தான் ரேகன்.

சக்கர நாற்காலியில் துவண்டு மயங்கிக் கிடக்கும் மைக்கின் உடலில் பல்வேறு காயங்களிலிருந்து நீர் கசிந்து கொண்டிருந்தது. பழுக்கக் காய்ச்சிய இரும்பு நெருப்பில் கிடக்க இவன் முன்னே தவங்கிடந்தவேளை மயங்கியிருக்கிறான் என்பது ரேகனுக்குத் தெளிவாக விளங்கியது.

கரோலின் பொசுங்கிய முடிக்கற்றைகள் கட்டிலோரம் சிதறிக் கிடந்தன.. நடந்ததையெல்லாம் ஊகித்துக் கொண்ட ரேகனுக்கோ ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

மைக்கை கட்டிலை நோக்கி உருட்டினான். கதிரையால் அவனைத் தூக்கிக் கட்டிலில் போட்டு மயக்க ஊசி போட்டு கைகளைக் கட்டியும் விட்டான் ரேகன்.

மீண்டும் ரேகன் தனது குடிலுக்கு வரவும் கரோல் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். போதைத் தலைக்கனம் தாளாது உறங்கிப் போனான் ரேகன். விடிந்ததும் கரோலை ஜோனிடம் ஒப்படைத்து நல்லபேர் வாங்கவேண்டும் என்பது அவன் எண்ணம்.

விடியல்நேரம் விழித்துக் கொண்ட கரோல் வெளியில் வந்தாள். அவளது கோலம் அவளுக்கே அசிங்கமாகவும் அருவருப்பாகவும் இருந்தது. முடி பொசுங்கி உருகி இருந்தது. உடலெங்கும் காயங்கள்.

அவளது அசாதாரண சிரிப்பொலி வானைப் பிளந்தது. இனியும் மைக்கை விட்டுவைக்கக் கூடாது எனக் கூச்சலிட்டாள்.

## பிரார்த்தனை

துன்பங்கள் தா இறைவா! துயரங்கள் தா தலைவா!
இன்பங்கள் தொடருகையில்...
இடைக்கிடையே எங்களுக்கு
துன்பங்கள் தா இறைவா.... துயருந்தா!
அப்பொழுதே...
இன்பத்தின் உண்மைவிலை என்னென்று உயிருணரும்.
உன்நினைவு எங்களது உள்ளத்தில் ஊற்றெடுக்கும்.
தாழ்வு மனப்பான்மை தந்தருளு!
தோல்விகளால்
வாழ்வு தருமாறு வழித்தடைகள் இன்னுமிடு!
'என்செய்வ'தென்று எமதுமனம் நடுநடுங்கப்
பண்ணு;
அப்போதுதான் பலப்பொருளே... உன்பெருமை
என்னென்று புரியும்.
எமதுண்மை நிலை தெளியும்.
(முட்டை நொருங்குதல்போல் முடியவல்ல மனிதவாழ்வில்)
தொட்டதெல்லாம் வெற்றியெனத் தொடர்ந்தால்;
நாம் போடும்
திட்டங்கள் நித்தம் ஜெயித்தால்;
பிறகு...' அன்று;
உன்னிடமே வரம்பெற்று;
வென்றபின்பு மறந்து; உன்னை
நிந்தித்து;
ஆணவத்தின் நிசவடிவம் ஆகிநின்று;'
ஒரேஅடியாய் அழிந்துபோன ஒரு நூறு
அரக்கரைப்போல்
கருவிகள் நாம் சுருதியுனை
மறந்து கருக்கலைவோம்.
சிறுமதியால் நாமும் சீரழிவோம்.
ஆகையினால்....
துன்பங்கள் தாஇறைவா! துயருந்தா!
அப்போதான்
இன்பத்தின் உண்மைவிலை
என்னென்று உயிருணரும்
உன்நினைவு எங்களது உள்ளத்தில் ஊற்றெடுக்கும்.

*- த.ஜெயசீலன்*

## சமரசம் உலவும் இடமே!

நாய்கள் உலவும் - இரவில்
நடமாடத் தடையிருக்கும், - காற்றில்
'ஊய்' எனச் சிலவேளை ஓசைவரும்
உளம் நடுங்க - அங்கு
போவோர் சைக்கிளைப்
பொதுவாக உருட்ட வேண்டும்!

அடைக்கும் பற்றைகளின்
அருகினிலே எருக்கலையும்
வாகாய்ப் பூத்திருக்கும் - கெட்ட
வாசம் கலந்திருக்கும் - இவ்வளவும்
எங்கே இருக்கென்றால் - இரண்டிடத்தில்,
ஒன்று சுடலை; மற்றென்று - சோதிக்கும்
சாவடியாம்!

*- கி. வாயுபுத்திரன்*

# இந்த வார இராசி பலன்

**25-03-2000 இலிருந்து 31-03-2000 வரை**

## சோதிட சஞ்சீவி

## மகாதேவா ஜோதிடம்

| | | | |
|---|---|---|---|
| சூ | செவ் வியா சனி | | |
| புத வெ | இராசிச் சக்கரம் | | ராகு |
| கே | | | |
| | சந் | | |

*மாற்றம்: அனுஷம் - விருச்சிகம் இராசியில் சந்திரன் நிற்கும்.*

*அரசியலின் உண்மை நிலை, இனப்பிரச்சினையின் சூத்திரதாரிகள் யாரென, உலகிலுள்ள சூத்திரதாரிகள், அரசியல்வாதிகளுக்கு தெரிய வரும். உலக நாடுகளும் விடாது. இந்தியாவும் விடாதநிலை ஏற்படும். இந்தியா நிரந்தர உறுப்புரிமை நாடும் வல்லரசாக மாறி அயல்நாடுகளின் பிரச்சினைகளை அணுகும். மேற்கு நாடுகளின் அழுத்தம் கிழக்கு நாடுகளில் புதிய அணுகுமுறை. யுத்த அபாயங்களை உருவாக்கும். இயற்கையான மழை, பூகம்பங்கள் சில நாடுகளில் செயற்கையான அழிவுகளைச் சிலர் திட்டமிட்டுச் செய்வார்கள் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.*

## மேடம்

மனிதர்களின் வாக்குறுதிகள் அடிக்கடி மாறிவிடுவதைப்போல நீங்களும் மாறிமாறி நின்று தடுமாற நேரிடும். அடிக்கடி கோபம் கட்டுமீறி வரும். அதனால் தொழில் ஸ்தானத்தில் பகைமை தேடிவர இடமுண்டு. மேலதிகாரிகளின் கண்டிப்பு இருக்கச்செய்யும். வாக்கால் வெல்ல அடிக்கடி எண்ணம் வரும். சுற்றமொன்று இருந்து சச்சரவு தருகின்றதே என வேதனைப்படுவீர்கள். நீங்கள் இவ்விடத்தில் வந்துவிட்டீர்கள் என்று நாலுபேர் பேசுவார்கள். குடும்பத்தில் சலசலப்பு இருக்கும். எதிர்ப்பாலாருடன் வாக்குவாதப்பட நேரிடும். வயிற்றில் ஒருவலி, நெஞ்சில் படபடப்பு, கண் டாக்டரிடம் காட்ட நேரிடலாம். வாக்குறுதிகளைக் கொடுத்துக் கொடுத்து தடுமாறியபடி இருப்பீர்கள். பத்திரிகைத்துறை, நகை வேலை, வியாபாரம், போக்குவரத்துத் துறை, ரீ.வி. செய்தித்துறையினர் அதிக இலாபம் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: சனி, திங்கள், புதன், வியாழன்.*

## இடபம்

திருமணம் பொருத்தமற்றதானால் அதைச் சொன்னவர் குற்றமா? அல்லது திருமணத்தைச் செய்து வைத்தவர்கள் குற்றமா? எதையும் சிந்திக்க வேண்டியது முக்கியமாகும். பொருத்தமற்ற குடும்பமும் பொருத்தமற்ற தொழிலும் ஒருவரின் நிம்மதியைக் கெடுத்துவிடும் என அடிக்கடி சிந்தித்து சிந்தித்துக் காலத்தைக் கழிப்பீர்கள். உங்களை மேலதிகாரிகள் அடிக்கடி கண்காணித்தபடி இருப்பார்கள். எனவே செயற்பாடுகளில் அவதானமாக இருக்கவும். தேடிவரும் புகழ் பொதுத்தொண்டில் தான் என எண்ணமாட்டீர்கள். நெஞ்சுப் புகைச்சல், சளி, சலவருத்தம் தேடிவரும். குருத்துறை, கொம்பியூட்டர்துறை, வைத்தியத்துறை, சங்கீதத் துறை, ரீ.வித்துறை, சட்டத்துறை, மின்சாரத்துறை தொடர்பானவர்களுக்கு நல்ல இலாபங்கள் கிடைக்கும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, புதன், வியாழன்.*

## மிதுனம்

பலனை எதிர்பார்ப்பவர்கள் மற்றவர்களின் கஷ்டங்கள், தாக்கங்களை அதிகம் சிந்திக்கமாட்டார்கள். எல்லாம் சுயநலத்தால் வந்த வேதனை தான். எடுத்த காரியங்களை நிறைவேற்றுவதற்காக என்னவெல்லாமோ செய்வார்கள். எதற்கும் அவசரப்படாது நிதானமாகச் செயற்படுவது உங்கள் கடமையாகும். தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். நம்பிக்கையால் வெற்றி பெறுவீர்கள். வாய்வுத் தொல்லை, பதற்றநிலை, கைகால் விறைப்பு என்பன கொடுக்கும். செய்தித்துறை, சங்கீதத்துறை, ஆசிரியத் துறை, பொருளாதார வங்கித்துறை தொடர்பானவர்களுக்கு மாற்றங்கள் கொடுக்கும். வேறு வேலைகள், புதிய இடங்களில் வேலைதேட வாய்ப்பு ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்: சனி, புதன், வியாழன்.*

## கடகம்

சில எதிர்பார்ப்புக்களை - பலரது உதவிகளை - நாடிநிற்கும் காலமாகும். தொழில்ஸ்தானத்தில் மிகவும் ஊக்கத்துடன் செயற்படுவீர்கள். 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்பதற்கிணங்க உங்கள் செயல்கள் இருக்கும். புதிய வருவாய் தேடுவதில் ஆர்வம் ஏற்படும். வீடு, வாகனத்தால் செலவுகள் அதிகரிக்கும். எதிர்ப்பாலரால் அவமானம் ஏற்பட இடமுண்டு. இடமாற்றத்தையோ பிரயாணங்களையோ தவிர்த்துக் கொள்ளுங்கள். அல்லது இழப்புக்கள் ஏற்படும். வாய்வுத் தொல்லை, கைகால் உழைவு, பலவீனம், தலைநோ என்பன ஏற்படும். வைத்தியத்துறை மரவேலைகள், தொழில்நுட்பத்துறை, நிர்வாகத் துறை போன்ற துறையினர்கள் அதிக நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, புதன், வியாழன்.*

## சிங்கம்

ஆக்க பூர்வ சிந்தனை அடிக்கடி தோன்றியபடி இருக்கும். பலருக்கு ஆலோசனைகள் சொல்லுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் உங்களின் செயற்றிறன், விடாமுயற்சி பல வெற்றிகளைத் தேடித்தரும் காலமாகும். குடும்பத்தவர்களுடன் கருத்து வேற்றுமைகள் ஏற்படலாம். எதிர்ப்பாலார் நல்லதைச் சொல்லவோ, செயற்படுத்தவோமாட்டார்கள். வாய்வுத் தொல்லை, கைகால் உளைவு, படபடப்பு, தலையிடி, காய்ச்சல் அல்லது உஷ்ணபீடைகள், கண்ணில் வருத்தம் என்பன ஏற்பட்டு வைத்தியம் செய்பவரும். கடல்துறை, விவசாயம், இசைத்துறை, போக்குவரத்துத்துறை, குருத்துறை, செய்தித் துறை, கொம்பியூட்டர், ரீவி போன்ற துறைகளில் ஈடுபாடுடையவர்கள் அதிக நன்மைகளையும் மாற்றங்களையும் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: சனி, புதன், வியாழன்.*

## கன்னி

கணவன் மனைவியின் உறவு மனச்சாட்சியுடன் சம்பந்தப்பட்ட நம்பிக்கையின் உச்ச உணர்வு. அது ஆத்மீகவுணர்வு என்பதைப் புரியாத மனிதர்கள் துன்பத்தாலும், சட்டதிட்டத்தாலும் வரம்புகட்ட முடிவு செய்து தோல்வி அடைகின்றார்கள். இதை வாழ்க்கையில் உணர்ந்திருப்பீர்கள். ஆயினும் தொழில் ஸ்தானத்தில் இதையெல்லாம் பொருட்படுத்தமாட்டீர்கள். சக நண்பர்களின், ஆதரவும், அதிகாரிகளின் ஒத்துழைப்பும் உங்களை நல்ல நிலைக்குக் கொண்டு வரும். சளி, இழுப்பு, விறைப்பு, பேராசை, பயநிலை என்பன ஏற்படலாம். குடும்பத்தில் ஒருவருக்கு கடும் தாக்கம் ஏற்பட இடமுண்டு. நீதித் துறை, குருத்துறை, மருந்துத்துறை, செய்தித்துறை போன்ற துறையில் ஈடுபாடு கொண்டவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்க: சனி, திங்கள், புதன் வியாழன்.*

## துலாம்

செவ்வாய் தோஷத்தை ஏன் இவ்வளவு தூரம் பார்க்கிறார்கள் என்று யோசிக்கிறீர்களா? ஆண், பெண்ணுக்குள் உள்ள இரத்த உறவை, உணர்வின் தாக்கத்தை திசைதிருப்பி மேல் கீழ்நிலைக்கு வாழ்க்கையைத் திருப்பக்கூடியது அது. இதை அலட்சியம் செய்ய முடியாது. தொழில் ஸ்தானத்தில் முக்கிய பங்கேற்கும் விசயங்களில் நல்ல கருத்துக்களை வைத்து இலாபத்தை அல்லது முன்னேற்றத்தை முன்னெடுப்பீர்கள். தோசமான அல்லது கஷ்டமான காரியங்களையும் மனிதர்களையும் விலக்கி நடப்பீர்கள். கண்கூச்சம், வயிற்றுநோ, நெஞ்சுவலி போன்றவற்றினால் அசதிகள் ஏற்படலாம். குருத்துறை விவசாயம், வியாபாரம், மருந்துத்துறை போன்ற துறையுடன் தொடர்புடையவர்கள் நன்மையடைவார்கள். புதிய இலாபங்கள், பணம் வர இடமுண்டு.

*அதிஷ்டநாள்: சனி, திங்கள், புதன், வியாழன்.*

## விருச்சிகம்

மனித வாழ்வின் அசைவில் வழியை ஒருவரின் மனோ ஆத்மீக உறவை, உடலை தாக்கவல்லது அவரவரின் நட்சத்திரங்கள். இரு நட்சத்திரங்களைப் பொருத்தும் பார்ப்பது வாசல் கதவுவரை இருவரும் வாழ்க்கைப் பாதைக்குத் தயாராகும் நிலையைக் கண்டறியும் உண்மையை அறியமுடியும். இதை நீங்கள் அறியாதவரல்லர். தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டியாக சிலர் தொல்லை தருவார்கள். அதிகார தோரணையான குரல்கள் அடிக்கடி உங்களை ஆட்டிப்படைக்கும். மனிதர்கள் தங்கள் சுயநலன்களால் மற்றவர்களுக்கு அடிக்கடி தொல்லைகள் கொடுத்தபடி இருப்பார்கள். எதிர்ப்பாலார் வசை சொல்வர். அடி வயிற்றுநோ, வயிற்றுக்குழப்பம், வாய்வு, தலை, நெஞ்சுநோ வரும். விவசாயத் துறை, சட்டத்துறை, கோயில்துறை, ரீ.வி., ரெலிபோன், கொம்பியூட்டர், அச்சுத்துறை தொடர்பானவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்*

## தனுசு

கிரகபாவம் என்பது குல, கோத்திரச் சுற்றுவட்டச் சுகவாழ்வின் தேவைகள். இரு பகுதியினரின் அசைவுகளையும் காட்டி நிற்கின்றது. பந்த பாசத் தொடர்பு வெந்து போகாமல் அறிவுறுத்துகின்றது. இதையெல்லாம் அலட்சியம் செய்துவிட முடியாது. பிறரின் குறைகளைக் கண்டு உங்கள் கருத்துக்களைச் சொல்லி அவதிப்படாதீர்கள். எதிர்ப்புக்கள் தேடி வரும். அயலவர்களுடன் கவனமாக இருக்கவும். தொழில் ஸ்தானத்தில் மனச்சலிப்பு ஏற்படும். வீட்டில் அடிக்கடி மனக்குமுறல் இடம்பெறும். வயிற்றில் வருத்தம், சளி, வாய்வுதொல்லை கொடுக்கும். இடமாற்றங்களைத் தவிர்த்துக்கொள்ளவும். வியாபாரம், குருத்தொழில், கமிஷன்வேலை, பத்திரிகைத்துறை போன்ற துறையினருக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்:- திங்கள், புதன்.*

## மகரம்

இருவர் வாழ இந்தச் சமுதாயக் கட்டுப்பாடுகள் எதைச் செய்கின்றன? சிலர், பலரை பலதைச் சொல்லிக் கலக்கமடையச் செய்கின்றார்கள். பிழைகளைத் திருத்தலாம். பிழை எனக் கண்டதையெல்லாம் சொல்லுபவர்கள் திருந்த முடியாது! எனவே உங்கள் தொழில் ஸ்தானத்திலும இப்படிப் போன்றவர்களால் பதற்றம் அடைவீர்கள். வீட்டில் எதிர்ப்பாலாருடன் வாக்குவாதப்படுவீர்கள். உங்கள் வாக்கால் காரியங்களைச் சாதித்துக் கொள்ளுவீர்கள். சகோதரங்களுடன் மனக் கசப்பு ஏற்படும். வாகனத்தால் செலவுகள் அதிகரிக்கும். கைகால் விறைப்பு அல்லது காயங்கள் ஏற்படும். பிரயாணத்துறை, வாகனத் துறை, வியாபாரம், விவசாயத்துறையினர்கள் அதிக இலாபங்களை அடைவார்கள். இடமாற்றங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, திங்கள், வியாழன்.*

## கும்பம்

பிள்ளைகளின் விருப்பத்தைப் பெற்றோர்கள் உதாசீனம் செய்துவிட முடியாது. தொழில் ஸ்தானத்தில் மாத்திரம் உங்கள் விருப்பப்படி நடந்துவிட முடியாது. பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும். மறைமுகப் பகைகளால் போராட்டங்கள் ஏற்பட்டபடி இருக்கும். அரச அதிகாரிகளால் நற்பலன்கள் அதிகரிக்கும். எவ்வாறாயினும் காரிய சாதனை நிகழ்த்துவீர்கள். இடமாற்றம் அல்லது பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். மறதி, நரம்புப் பலவீனம், நெஞ்சுப் படபடப்பு இருக்கும். பாதுகாப்புப்பகுதி, நிர்வாகத்துறையினரால் விட்டு விட்டுக் கஷ்டங்கள் ஏற்பட இடமுண்டு. களவு அல்லது இழப்புக்கள் சிலருக்கு வரக்கூடும். அரசியல் தொடர்பானதுறை, பத்திரிகைத்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்களுக்கும் பல மாற்றங்கள் ஏற்பட்டு இலாபங்கள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, திங்கள், வியாழன்.*

## மீனம்

வெளியில் ரீ குடித்தாலும் வீட்டிற்கு வந்தவுடன் ஒரு பிளேன் ரீயாவது குடிக்க வேண்டும் என்ற மனத் திருப்தி உங்களுக்கு. அது போலத் தொழில் ஸ்தானத்தில் சில எதிர்பார்ப்புக்களைத்தேட அவாக்கொள்வீர்கள். பொருளாதாரச் சிறப்பு ஏற்படும். புதிய திட்டங்களால் நன்மை அடைவீர்கள். கலகங்கள் பிறந்து, நியாயங்கள் பிறக்க வழிவரும். குடும்பத்தில் எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமைகள் ஏற்பட இடமுண்டு. வாகன சுகம் உண்டு. நரம்புச்சோர்வு, சளி, கைகால் பிடிப்பு, வாய்வுத் தொல்லைகள் ஏற்படும். இடமாற்றம் நன்மை தராது. நீதித் துறை, பிரயாணத்துறை, விவசாயத்துறை, வியாபாரத்துறை, இரும்புத்துறை போன்ற துறையினர்கள் அதிக இலாபங்களை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, திங்கள், வியாழன்.*

## உலகத் தமிழரே......!

உலகத் தமிழரே நீவிர்
எல்லாம் ஒன்று கூடுங்கள்
ஒருவர்க்(கு) ஒருவர் இதனை
உறுத்தி உணரக் கூறுங்கள்
பலமுற்(று) உயர வல்ல
பாதை நன்று தேடுங்கள்
பான்மை யோடு மேன்மை
யான பலத்தை(த்) தேடுங்கள்
உள்ளே பகையும் உத்த
ரிப்பும் பெருகி மடிவதா?
ஊரும் உலகும் எம்மை(ப்)
பார்த்துக் கேலி செய்வதா?
மெள்ள மெள்ள இவற்றை(ப்)
போக்கி மேன்மை கொள்ளுவீர்!
மேவிப் புதிய செய்தி
ஏந்தி மிடுக்காய்(ச்) செல்லுவீர்!
அங்கும் இங்கும் அகதி
ஆகி அலைய வேண்டுமா?
ஆட்சி உரிமை விட்டு(ப்)
பிறர்க்கு அடிமை ஆவதா?
எங்கும் உள்ள உலகத்
தமிழர் இதனை எண்ணுவீர்!
ஏற்றம் பெற்று மாற்றம்
காண ஒன்று கூடுவீர்!
புதிய இரண்டா யிரமாம்
அண்டு பிறந்து நடக்குது
பூரிப் போடு தமிழர்
வாழ்வு புலரக் கூடுவீர்!
அதிக வளமும் ஆட்சி
நலமும் ஆன்ம பலமுமாய்
அன்று போல என்றும்
ஓங்க ஒன்று கூடுவீர்!
தாயாம் தமிழைத் தன்மா
னத்தை அடகு வைப்பதா?
தட்டிக் கேட்க ஆளில்
லாமல் தனித்து நிற்பதா?
ஓயா(து) எம்முட் பகைமை
முட்டி உறுதி கெடுவதா?
ஒற்று மைக்குள் சேர்ந்து
உயர ஒன்று கூடுவீர்!
நாடு ஒன்று உலகில்
நாங்கள் நாட்ட வேண்டுமே!
நாதி அற்ற மக்கள்
நாமா? கேட்க வேண்டுமே!
பாடு பட்டு(ப்) பலமாய்
ஓங்க(த்) தமிழர் கூடுங்கள்
பக்கு வத்தால் தக்கவ
ராகப் பாரில் வாழுவோம்.

- தீவகன்

## 'தேத்தண்ணி'

எழுதப்பொருள் கிடையாமல் ஏதேதோ சொல்வதற்கு
பொழுதைப் போக்காட்டி புனைகின்ற கவியொன்று
கழிவிரக்கம் கொள்ளாதீர் - கற்றறிந்தீர் - மற்றவரை
விழித்திருக்கச் செய்கின்ற வினைதானே - 'தேத்தண்ணி'

காலையில் எழுந்தவுடன் - களைத்தவுடன், வேலை
செய்து
மாலை வந்து சேர்ந்தவுடன் - மகிழ்கின்ற விருந்தினரைச்
சோலைச் சுவைகாட்டிச் சுகித்திருந்து விடைபகர
ஆளாய் அமைகின்ற அரும்பொருளே - 'தேத்தண்ணி'

முடியாத வேலைகளை முடிப்பதற்குத் தேத்தண்ணி
படியாக அமைகின்ற பகிடியொன்று அலுவலக
நடைமுறையி லுள்ளதெனின், நசநசத்த வேலைகளும்
வடைதேநீர் வழங்குவதால் வலுகெதியாய் நிறைவுபெறும்.

- கி.குருபரன்

# மூர்க்கத்தனத்துக்குப் பெயர்போன முதலை

முதலைகள் என்றதும் சிலருக்கு மூச்சி முக்க ஆரம்பித்து விடும். வடமராட்சியில் ஆண்டு தோறும் .மனிதனுக்கும் முதலைக்கும் போராட்டம் நிகழ்வதுண்டு. ஆயினும் முதலைகள் தேடிவந்து மனிதனைக் கடிப்பதில்லை. நீரில் மனிதக் காலுக்கும், மாட்டுக் காலுக்கும் வேறுபாடு முதலைக்குத் தெரிவதில்லைப் போலும். ஒரு தடவை மனித மாமிசத்தைப் புசித்த முதலை பின் அதைப் பெறும் நோக்குடன் காத்துக்கிடப்பதுண்டு. சுலபமாகக் கிடைக்கும் சுவையுள்ள பண்டம்

முதலைகளும், தவளைகளும், ஓணான்களைப்போல ஓரினத்தந்தமுள்ளவை. (HOMODONT) ஆயினும் இவை பெரிய விலங்குகளுடனும் போராடவேண்டியிருப்பதனால் இவற்றின் பற்கள் பெரியதாயிருக்கும்; கூம்பு வடிவானவை; கூரானவை; குழிகளில் வைக்கப்பட்டிருக்கும் (THECODCNT). குழித்தந்தம் பாலூட்டிகளின் இயல்பு. அது பற்களுக்கு மேலதிக உறுதியைத்தரும்.


முதலையில் மூக்குத் துவாரங்கள் இரண்டும் ஒன்றாக இருக்கும். மூஞ்சியின் முனையில்

குச் சுலபமான வேலை. இங்ஙனம் இழுத்துச் சென்றதை, நீருக்கு அடியில் தனது பதுங்குமிடத்தில் கொண்டு சென்று வைத்து, பின் சாவகாசமாக உண்ணும். உணவை அரைப்பதற்கு உதவும் வகையில் சிறிய கற்கள் அதிக அளவில் விழுங்கப்படும். இதே காரணத்துக்காக அகப்பட்ட மனித இரையின் உலோக ஆபரணங்களும் இரைப்பையில் தடுத்துவைக்கப்பட்டிருப்பதுண்டு. உணவுக் கால்வாயைச் சுத்தம் செய்வதற்காகக் காலத்துக்குக்காலம் வெள்ளைக் களிமண்ணை (KAOLIN - நாமக்

வாலும் உதவும். அவயவ...
பின்னோக்கி அணைத்து ...

உடும்புகள், காட்டுப்பன்...
கள் முதலை முட்டைகளை...
அழிப்பதுண்டு. முதலைக...
தையே உண்ணும் இயல்பு ...
உண்டு. சாதாரண நிலை...
4 வருடங்களில் நிறைவு...
விடும். ஆயினும் வளர்ச்சி...
களுக்கு நீடிக்கும்.

முதலையின் கால்கள் ...


குகன்

1 2 4

என்று அது நினைக்கிறது போலும். இந்த வகையில் ஆள் கொல்லும் முதலைகள் (MAN EATERS) காலத்துக்குக் காலம் இலங்கையில் தோன்றுவதுண்டு. அப்படித் தொல்லை கொடுத்த பெந்தோட்டை ஆள் கொல்லி ( BENTOTA MAN EATER) சரித்திரப் புகழ் பெற்றது. (இந்த வகையிற்றான் சிங்கங்கள், சிறுத்தைகள், புலிகள் ஆள் கொல்லியாக மாறுகின்றன. மேலும் மனிதனால் காயப்படுத்தப்பட்டவை, சாதாரண விலங்குகளை வேட்டையாட முடியாத காரணத்தினால் மனிதனை வேட்டையாடுகின்றன. ஒவ்வொரு ஆள்கொல்லியின் பின்னணியிலும் ஒரு கதையிருக்கும். அது பெரும்பாலும் மனிதனோடு சம்பந்தப்பட்டதாயிருக்கும்.)

தவளைகள், ஓணான்களால் வாயைத் திறந்தால் மூச்சுவிட முடியாது. காரணம் மூக்குத் துவாரங்கள் வாய்க்குழியின் முன் பக்கமாகத் திறப்பதே. பாலூட்டிகளினால் வாய்க்குழியில் உணவை வைத்து அரைத்துக் கொண்டே மூச்சுவிடமுடியும். உணவை விழுங்கும்போது மாத்திரம் மூச்சுவிட முடியாது. இதற்குக் காரணம் மூக்குத் துவாரங்கள் வாய்க்குழியின் பின் பக்கத்தில் திறப்பதாகும். அதாவது மூக்குக்கால்வாய்களையும் வாய்க்குழியையும் பிரிக்கும் வகையில் அண்ணம்(PALATE) என்ற அமைப்புண்டு. முதலைகள் பெரிய விலங்குகளை வாயினாலும் பிடித்து நெடுநேரம் அவற்றுடன் போராடவேண்டியிருக்கும். இவ்வேளையில் இவற்றினால் மூச்சுவிடவும் வேண்டும். அதனால் பாலூட்டிகளைப்போல இவற்றிலும் அண்ணம் விருத்தியடைந்துள்ளது.

முதுகுப்புறமாக ஒரு மேட்டில் வைக்கப்பட்டிருக்கும். அதனால் உடல் முழுவதும் நீரில் இருக்கக் கூடியதாக, மூக்குத் துவாரங்களை மாத்திரம் நீருக்கு வெளியே வைத்துக்கொண்டு முதலையினால் மூச்சுவிட முடியும். கண்களும் தலையில் முதுகுப்புறமாக இருக்கும். அதனால் உடல் நீரில் இருக்கும் நிலையில், தலைப் பகுதியை மாத்திரம் நீர்மட்டத்திற்குக் கொண்டு வந்து, சூழலை முதலையினால் ஆராய முடியும்.

முதலையின் வால் பெரியது; உறுதியானது. இதை ஓர் ஆயுதமாக முதலையினால் பயன்படுத்த முடியும். ஆண் முதலையின் புணர்ச்சி உறுப்பு ஒற்றையாகவிருக்கும். (ஏனைய நகருயிர்களில் உள்ளதுபோல இரட்டையல்ல)

நகருயிர்களிலேயே பெரியவையும், பயங்கரமானவையுமாக இருப்பவை முதலைகளே. இவை கூடுதலான நேரத்தை நீரைக் காட்டிலும் நிலத்திலேயே கழிக்கும். சிறப்பாக இரவு வேளைகளில். இவையும் சூழல் வெப்பக்குருதி நிலையனவையே. அதனால் வெய்யில் காய வேண்டிய அவசியம் இவற்றிற்கும் உண்டு.

இவற்றின் முக்கியமான உணவு நீர்வண்டுகள், இறால்கள், நண்டுகள், மீன்கள், நன்னீர் ஆமைகள் ஆகும். உடும்புகள், பறவைகள், பாலூட்டிகள் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பிடிக்கப்படும். பெரிய பாலூட்டியைப் பிடிக்கும்போது, அதன் மூஞ்சியை முதலை கௌவிப் பிடித்துக்கொள்ளும். பின் சுழல்வதன் மூலம் இரையின் கழுத்தை முறிக்கும். அதே சமயம் வாலினால் அடித்து இரையை விழுத்த முயற்சிக்கும். நிலை தடுமாறி இரை விழுந்தால் அதை இழுத்துக் கொண்டு போவது முதலைக்

களிமண்) போதிய அளவில் பேதியாக உட்கொள்ளும் (பேதிமருந்து மனிதன் கண்டுபிடித்ததல்ல. பலதரப்பட்ட விலங்குகள் பலதரப்பட்ட பொருள்களைப் பேதியாக உட்கொள்வதுண்டு. வட்டப்புழுக்களைக் கட்டுப்படுத்தவே இந்நடைமுறை)

நகருயிர்களில் சத்தத்தைத் தோற்றுவிக்கக் கூடிய சில அங்கிகளில் முதலைகளும், பல்லிகளும் (GECKOS) அடங்கும். முதலைக்குட்டிகள் சீறும். பெரியவை சீறுவதுடன் எருது மாட்டைப்போலச் சத்தமும் (BELLOWING GRUNTS) எழுப்பும். இது அரை மைல் தூரத்திற்குக் கேட்கும்.

முதலைகளில் புணர்ச்சியும், அதனைத் தொடர்ந்து அகக்கருக்கட்டலும் நிகழும். அடைகாக்குங் காலத்தில் தாய் முட்டைகளுக்குப் பாதுகாப்பாயிருக்கும். இத்தகைய பாதுகாப்பு, பொரிக்கும் காலம் நெருங்க - முட்டைக்குள்

## அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்


குட்டிகள் போடும் சத்தம் கேட்கும் வரை - கொடுக்கப்படும். இப்பொழுது குட்டிகள் வெளியேற உதவும் வகையில் முட்டைகளைத் தாய் வெளிப்படுத்திவைக்கும். பொரித்தலில் உதவுவதில்லை. முட்டைகளில் இருந்து வெளியேறும் குட்டிகள் முதலில் நீரையடையும்போது நாய்க் குட்டிகளைப்போல இங்கு மங்கும் தொற்றியேறும். ஒழுங்கான நீச்சலுக்குரிய உடல் அசைவுகள் ஏற்படுவதற்குச் சிறிது நேரம் எடுக்கும். நீந்துவதற்கு உடல் அசைவுகளும்

நிலத்தில் ஓரளவு வேகம...
விரல்கள் உறுதியான நக...
முடிவடையும். உடல் மேல...
(SCUTES) பாதுகாக்கப்பட்...
புறத்தில் செதில்கள் மாத்தி...
முதலையின் வயிற்றுப்புறம்...


குளத்து முதலை. ...
வெளியேறுவது போலக் கா...

(OSTEODERMS) என்ற ...
இவை என்பாக்கம் பெற்ற ...
TES) ஆகும். இவை நிறை...
லைக்குப் பாதுகாப்புக் கெ...

இன்றுள்ள முதலைகள்...
மேல் வளர்ந்ததற்கு ஆத...



1 2 3 4 5 6

(1) செம்மூக்கன் நிறைவுடலியின் விவரணப் படம். (2) பெந்தோட்டை ஆண் கொல்லியின் மண்டை ஓடு. (3) குச்சவெளியில் கிடைத்த ஒரு பெரிய நிறைவுடலியின் ம... குமணாவில் கிடைத்த ஒரு பெரிய நிறைவுடலியின் மண்டை ஓடு. (5) பெந்தோட்டை ஆண்கொல்லியின் தாடை (கீழ் அலகு) (6) குச்சவெளி நிறைவுடலியின் தாடை (... நிறைவுடலியின் தாடை. தாடையென்புகளில் பற்களுக்குரிய குழிகள் துலக்கமாகத் தெரிகின்றன.


# தலைகள்

ம் உதவும். அவயவங்கள் உடலுடன்
னாக்கி அணைத்து வைக்கப்பட்டிருக்கும்.
டும்புகள், காட்டுப்பன்றிகள், ஊனுண்ணி
ழதலை முட்டைகளையும் குட்டிகளையும்
பதுண்டு. முதலைகளிலும் தம்மினத்
ப உண்ணும் இயல்பு (CANNIBALISM)
டு. சாதாரண நிலைகளில் குட்டிகள் 3,
டங்களில் நிறைவுடலிகளாக வளர்ந்து
ஆயினும் வளர்ச்சி பல பத்து ஆண்டு
கு நீடிக்கும்.
தலையின் கால்கள் உறுதியானவை;


பத்திரிகைச் செய்திகளுண்டு. ஆனால் இவற்றை ஆதாரபூர்வமானவையாகக் கொள்ள முடியாது. ஆயினும் உயிர்ச்சுவடிகளின் அடிப் படையில், அனாதியான காலங்களில் 50 அடிகள் நீளம் வரை வளர்ந்த இராட்சத முதலைகள் இருந்தமை தெரியவருகின்றது. நகருயிரிகளின் காலத்திற்குரிய (AGE OF REPTILES) இராட்சதர்களின் மெய்யான எச்சங்கள் என்று முதலைகளைக் கொள்ளலாம். இன்றைய முதலைகளின் அளவு (பருமன்) எத்தகையதாகவிருந்தாலும் அவை ஆபத்தான பேர்வழிகள் என்பதை மறந்துவிடக்கூடாது. இன்றுள்ள முதலைகள் அநாதியானவை. உயிருள்ள சுவடிகள் (LIVING FOSSILS) என்றும் கருதப்படுகின்றன. பல மில்லியன் வருட பின்னணியை உடையவை இவை. இந்த ரீதியில் நோக்கும்போது மனிதனின் பின்னணி வெறும் 50,000 ஆயிரம் வருடங்கள் மாத்திரமே. (சிலர் இதைக் கூட்டி மதிப்பிட்டாலும் ஒரு மில்லியன் வருடங்களுக்கு அப்பால் போகாது.)



இலங்கை முதலைகளில் என்புத் தோல்களின் (பரிசைகள்) ஒழுங்கையும், வடிவத்தையும் விளக்கும் படங்கள் (1) குளத்து முதலை. பரிசைகள் கூடுதலாக சதுரவடிவமுடையவை. (2) செம்மூக்கன். பரிசைகள் நீள்வட்ட வடிவமுடையவை. (3) செம்மூக்கன் நிறைவுடலியில் கறுப்புச் செதில்களின்மேல் வெள்ளைப் பரிசைகள்.




3



4


(1) குளத்து முதலை (2) வட இந்தியக் குளத்து முதலை (3) குளத்து முதலையின் குட்டி, முட்டையிலிருந்து வெளியேறியவுடனும் (4) இளம் செம்மூக்கன். குளத்து முதலை, செம்மூக்கன் ஆகியவற்றின் தலைகளையும், அவயவங்களையும் ஒப்பிட்டுப் பார்க்க.

தில் ஓரளவு வேகமாக ஓட உதவும்.
கள் உறுதியான நகங்களில்(CLAWS)
டையும். உடல் மேலதிக கவசங்களால்
TES) பாதுகாக்கப்பட்டிருக்கும். வயிற்றுப்
ல் செதில்கள் மாத்திரமுண்டு. அதனால்
லயின் வயிற்றுப்புறம் என்புத்தோல்கள்



குளத்து முதலை. வளையிலிருந்து
யேறுவது போலக் காட்டும் படம்.

ODERMS) என்ற கவசங்கள் உண்டு.
என்பாக்கம் பெற்ற பரிசைகள் (SCU-
ஆகும். இவை நிறைந்த அளவில் முத
தப் பாதுகாப்புக் கொடுக்கும்.
றுள்ள முதலைகள் 25 அடிகளுக்கு
வளர்ந்ததற்கு ஆதாரங்கள் இல்லை.



ய நிறைவுடலியின் மண்டை ஓடு. (4)
வுடலியின் தாடை (பாதி) (7) குமண

இலங்கையில் ஒரு சாதிக்குரிய இரண்டு முதலை இனங்கள் மாத்திரமுண்டு. இவற்றைப் பற்றி சற்றே விரிவாகப் பார்ப்போம்.

### குளத்துமுதலை

இதன் விஞ்ஞானப் பெயர் - CROCODYLUS PALUSTRIS KIMBULA. ஆங்கிலப் பெயர் - CEYLON SWAMP CROCODILE அல்லது CEYLON MUGGER. இதன் உடல் பசிய ஒலிவ் நிறமானது. அதில் பெரிய கரிய புள்ளிகளும் உண்டு. இதன் மூஞ்சி குறுகியதும், அகலமானதுமாயிருக்கும். இது பெரும்பாலும் முட்டைகளை மணலில் புதைத்து வைக்கும். இது தென்னிந்தியாவிலும் உண்டு. இவ்வினத்திற்குரிய வகைக்குரிய பேதம் (உபஇனம் என்றும் கொள்ளலாம்) வட இந்தியாவிற்குரியது; நன்னீர் நிலைகளுக்குரியது; சாதுவானது. இலங்கைக்குரிய பேதம் குளங்கள், நன்னீர் நிலைகள் மாத்திர மல்லாமல் உப்பு நீர் ஏரிகளிலும் காணப்படும். பயங்கரமான பேர்வழி. பெரும்பாலும் ஆள்கொல்லியாக (MAN EATER) மாறுவதுமுண்டு. (மண் வாசனை போலும்)

உணவு வகையைப் பொறுத்தவரை, மனித மாமிசத்தை விரும்பும் தற்செயல் பேர்வழிகளைத் தவிர, பொதுவாகக் குட்டிகள் பெரும்பாலும் பூச்சிகள், இறால்கள், தவளைகளையும், நிறைவுடலிகள் பெரும்பாலும் நண்டுகள், மீன்கள், தவளைகள், நன்னீர் ஆமைகள், உடும்புகளையும், எப்போதாவது கிடைக்கும் பாலூட்டிகளையும் உணவாகக் கொள்ளும்.

இதன் வளை "U" வடிவமுள்ளதாயிருக்கும். உட்செல்லும் வாசல் வெளியேறும் வாசல் இரண்டும் நீருக்கடியிலேயே இருக்கும். குளத்து முதலையின் இரு சோடிக் கால்களும் மொத்தமாக இருப்பதுடன், கிட்டத்தட்ட சம நீளங்களை உடையவையாகவும் இருக்கும். விரல்கள் குறுகியவை. பின்னங்கால் விரல்களுக்கிடையே சவ்வு (WEB) உண்டு.

முதலைகளில் தொடர்புசாதனமாக மொழி விருத்தியடைந்திருப்பதாத் தெரிகின்றது. குறியீட்டுக்குரியதாகப் பல சத்தங்களை அது பயன்படுத்தும். (மனிதன் பயன்படுத்தும் சத்தங்களும், சொற்களும் குறியீடுகளே). குட்டிகள் சீறவும், குரைக்கவும் செய்யும். நிறைவுடலிகள் குரைப்பதுடன், எக்காளமிடவும் செய்யும். இனக்கலப்புக் காலங்களிலேயே சத்த ஆரவாரம் அதிகமாயிருக்கும். (தமிழ்ப் படம் பார்த்த அனுபவம் இல்லாமலே "டூயற்" பாடுகின்றன போலும்) நகருயிர்களில், முதலைகளை அடுத்து பல்லிகளுக்கு (GECKOS) மாத்திரம் தொடர்புசாதனமாக ஒலியுண்டு. பாம்புகள் சீறும். சில இன ஆமைகள் கீச்சுக் குரலில் ஒலியெழுப்பும். இவை தொடர்புசாதன "மொழி"கள் அல்ல.


### செம்மூக்கன்

இதன் விஞ்ஞானப் பெயர் CROCODYLUS POROSUS. ஆங்கிலப் பெயர் - MARSH CROCODILE அல்லது ESTUARINE CROCODILE அல்லது SEA CROCODILE. இதைத் தமிழில் செம்மறி மூக்கன் எனவும் கொச்சையாக அழைப்பார்கள். இதற்கும் குள முதலைக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை மாத்திரம் இங்கு கவனிப்போம்.

இது உவர் அல்லது உப்பு நீர் நிலைகளுக்குரியது. இதன் மூஞ்சி ஒடுக்கமாயிருப்பதுடன், இதன் அவயவங்கள் ஒப்பீட்டளவில் மெல்லியதாக இருக்கும். பின்னவயவங்கள் ஓரளவு நெடியவை. விரல்களும் நெடியவை.

இதன் நிறம், முதுகுப்புறம் வெண்கல மஞ்சள். குறுக்கு வரிசைகளாகக் கரும் புள்ளிகள் (அடையாளங்கள்) இருக்கும். வயிற்றுப்புறம் இளம் மஞ்சள். பின்னங்கால்களிலும் வாலிலும் கரும்புள்ளிகள் உண்டு. முதிர்ச்சி அடையாத விலங்குகளின் முதுகுப்புறம் கறுப்பாக மாறும்.

இலங்கையில் ஆள்கொல்லி முதலைகள் குறித்து அவ்வப்போது வெளியான தகவல்கள், செய்திகள் சுவாரசியமான கதைகள் போன்று பிரசுரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



(1) முட்டைக்குப் பாதுகாப்பாக ஒரு செம்மூக்கன் பெண் காவலிருக்கின்றது. (2) தாய் கூட்டு அகற்றப்பட்டு, முட்டைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. முட்டைகள் படத்தின் மையமாக, தூய வெள்ளையாகத் தெரிகின்றன. (3) முட்டைகள் பொரிக்கும் நேரம். சில குட்டிகள் வெளியேறியிருப்பதையும் காணலாம்.

## வேலையில்லாப் புலம்பல்

("ஏழுமலை வெங்கடேசா என்னயிது?" என்ற மெட்டில் அமைந்த பாடல் இது)

ஆறு படைக் குமரப்பா என்னயிது - இந்த
அறிவையெல்லாம் வைச்சு என்ன பண்ணுறது?

பல்கலையில் தேறியாச்சு
பட்டதாரி ஆகியாச்சு
வலிகாமம் வடமராட்சி பார்த்துப் பார்த்து அலுத்துப்போச்சு
சங்கத்தின் கூட்டங்கட்கு சமுகங்கொடுத்து வெறுத்துப்போச்சு
................(தந்)

வீடுவீடாய் ரியூஷன் கொடுத்துமாச்சு
வீண்பழிகள் பல சுமந்துமாச்சு
வியாபார தந்திரத்தில் விண்ணை முட்டி நின்றுமாச்சு
சங்கத்தின் கூட்டங்கட்கு சமுகங்கொடுத்து வெறுத்துப்போச்சு
................(தந்)

கால்நடைக்கு முடிவு கட்டியாச்சு
கரியர்ச் சைக்கிள் ஒன்று வாங்கியாச்சு
கல்லூரிப் படிகள்ஏறி தொண்டர் சேவை செய்துமாச்சு
சங்கத்தின் கூட்டங்கட்கு சமுகங்கொடுத்து வெறுத்துப்போச்சு
................(தந்)

பட்டிமன்றம் பேசியாச்சு
கவியரங்கில் விளாசியாச்சு
பண்பாட்டுக் கழகத்தின் மேடையிலும் ஏறியாச்சு
சங்கத்தின் கூட்டங்கட்கு சமுகங்கொடுத்து வெறுத்துப்போச்சு
................(தந்)

சிறுகதைகள் எழுதியாச்சு
கவிதை முற்றம் கலக்கியாச்சு
காலத்தால் அழிந்துபோகாமல் காவியங்கள் படைச்சுமாச்சு
சங்கத்தின் கூட்டங்கட்கு சமுகங்கொடுத்து வெறுத்துப்போச்சு
................(தந்)

மௌனமொழி புலம்பியாச்சு
மது வெறியில் உளறியாச்சு
மாகாண மட்டம்வரை மகஜர்பல போட்டுமாச்சு
சங்கத்தின் கூட்டங்கட்கு சமுகங்கொடுத்து வெறுத்துப்போச்சு
................(தந்)

ஆலயங்கள் பல தொழுதுமாச்சு
காவடிகள் பால எடுத்துமாச்சு
காரணம் எதுவுமின்றிக் காங்கேசனில் வாடியாச்சு
சங்கத்தின் கூட்டங்கட்கு சமுகங்கொடுத்து வெறுத்துப்போச்சு
................(தந்)

(சங்கம் - வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்)

- வதிரி வாசன் -

# மௌன மொழி

## உங்கள் கவிதைகள்

மோகனமாய் ஒலித்த - உன்
மெட்டுக்கள், மெல்ல
அறுந்திடவே, பெண்ணே!
அடைப்புக்களைத் தாண்டி - நீ
அடியெடுத்து வைப்பது
பெண்ணடிமையின்
அறுவடைக்காகவா...?

- வி. றஞ்சி

மாநிலமே!
மறத் தமிழன் வழி இது.
மாண்புகள் ஆயிரம் கொண்டவர்
கொள்கை இது.
உலகப் பெண்ணினமே
உற்றுப் பார் என்னை
இப்போதாவது தெரிகிறதா
என் வழி?
இருள் என்ன உனது உரிமையா?
உறவு கொண்டாட
வா வெளிச்சத்திற்கு!
தரணியே தமிழ் மங்கை நான்
செல்லும் தடம் பற்று
என்போல் வெற்றி நினதாகும்.

- திரு. பாலன்

*பெண்ணே!*
*மரபு வழிப்பாதையை விட்டு – நீயும்*
*புதுவழி தேடும் போது*
*அடிமை விலங்கும் உடையும் – நீ*
*பட்டதுயரெல்லாம் அகலும்!*

- நிசங்கன்
சுண்டுக்குளி

ஏ...பெண்ணே!
விலங்குகள் வீரத்தைத் தடுக்க...
விடியலின் பாதைகள் தடைப்பட...
விலங்கினைத் தகர்த்து எறிந்து விட்டு
வீறு கொண்டெழுந்து...
விடிவிற்கான உன் பயணத்தை...
விழிப்போடு தொடர்ந்து விடு!

- பகீன்
கொழும்புத்துறை

*அடக்கு முறைகளுள்ளும்*
*ஒடுக்கு முறைகளுள்ளும்*
*முடங்கி வாழ்ந்து...*
*பட்ட துன்பம் இன்றோடு*
*முடிந்து போக...*
*விரைந்து வா தோழி!*
*விடியும் திசையில்...*
*புதிய சரிதம் புனைவோம்!*

- ப. பிறேமலதா

நிலம் பார்த்து நீ
நிலை மாறிப் போகுமுன் - பெண்ணே
உன் பின் தடம் பார்த்து - நீ
தடைதாண்டு.
அறுந்த கொலுசுக்காய்
அல்லற்படாதே!
அவர்கள் சென்ற பாதை
உன் பின்னே செந்நீரில்
செறிந்து கிடக்கிறது
எந்நாளும் நமக்கான
விடிவுகள் சிறைகளே - தங்காய்
ஏனெனில் நாம் தமிழர் ஆனதினால்!

- சீ. ஸ்ரீ
நெடுந்தீவு

நீ தமிழச்சி...
அடிமையாக்கி நாளாச்சு
துடிப்புக்கள் பலிக்காது
நம்பணி வெளியே வெளிக்காது
நடப்பது நம் ஆட்சி.
நீ அழுதால் அது எம் மாட்சி.
காற்றோடு தான் உன் கூக்குரல்கள்
கசங்குவதற்குத் தான் பெண்மலர்கள்
நீ தமிழச்சி...அதனால்
உயிர் அறுத்தாச்சு...

- த. சாம்பவன்

### இளம் எழுத்தாளர்களுக்கு

இன்னொருவரின் ஆக்கத்தை தனது சொந்த ஆக்கமாகக் காட்டிப் பிரசுரிக்க முனைவது இலக்கியத் திருட்டு. அதேபோன்று பிரபல எழுத்தாளர்களின் பெயரைப் பயன்படுத்தி எழுதுவதும் இலக்கிய அநாகரிகம்.

மௌனமொழிக்கு ஆக்கங்களை அனுப்பும் இளம் எழுத்தாளர்களையும் சஞ்சீவிக்கு ஏனைய படைப்புகளை அனுப்பும் இளம் படைப்பாளிகளையும் இதனைக் கருத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு:-

சஞ்சீவி மௌனமொழி – 75 பகுதியில் சாந்தன் என்பவரின் பெயரில் வெளியான கவிதையை மூத்த எழுத்தாளர் ஐ. சாந்தன் எழுதவில்லை.

- ஆசிரியர் -

உணர்ச்சிக் கீறலில்
உதிரம் சிந்தாதே!
மரபுக்கதியால்களை
மாற்றிப் போடு!
'விலங்கறுத்து'
வெளியே வா!!

- சௌ... யா

*தளையறுத்து*
*சுவடுபதித்த பின்பு...*
*தடை தாண்ட*
*தயக்கமென்ன பெண்ணே?*

- ...னியன்

கண்ணகி காட்டினாள்
கற்புக் கன்னி என்று
மாதவி காட்டினாள்
கற்புக் கரசி என்று
பெண்ணவளே நீ
காட்ட வா
கற்புப் பேரரசி என்று!

- கதா
பல்கலைக்கழகம்

வந்த தடம் மாறி
வழி தவறிப் போனாயா?
முழுதாக விலங்கொடிக்க
முடியாமல் நின்றாயா...?

- கி. ஜெனி.:.பர்

தமிழன் நிலைகண்டு
தன்மானம் தலைக்கேற
தகர்க்கிறேன் தடைகளை
பயணிக்கிறேன் என் உறவுகளின்
பாதச் சுவடு தொடர!!

- ந. சிறீதரன்
கிளிநொச்சி

கால்விலங்கை
உடைத்தெறிந்து...
கம்பி வேலி
தனை அழித்து...
கால் தடங்கள்
தான் பதித்து...
களம் சிலிர்க்கப்
புகுந்தவளே!
நீ
போன பின்பு
சிதறுது பார் - சிங்
களத்தின் சிதைமேடை!

- புதுமை
ஈச்சமோட்டை

நீ அடிமைப் பெண்ணல்ல
புதுமைப் பெண்.
நடந்து வந்த பாதை
இடறியிருக்கலாம் – இனி நீ
வைத்திடும் அடிகளால்
வையகம் வியக்கட்டும்

- இணுவை றொட்றிக்

கலைந்த கூந்தலோடு
கையில் காற்கொலுசு கொண்டு
நீதிகேட்டு நிமிர்ந்து நிற்க - நீ
கண்ணகியாய் இருந்தாலும்...
பாண்டியனின் பாங்கிலேனும்
ஆட்சிமுறை இங்கில்லை.
காற்சலங்கையினை உதறிவிட்டு
கையில் எடு சுடுகலத்தை - உன்
தங்கையேனும் வாழட்டும்.!

- கோபி
நெல்லியடி

சட்டத்தின் சுடுகாட்டில்
பிணம் தின்னும் அரசு
இரும்புச் சட்டத்தில்
விலங்கிட்டது.
கொட்டத்தை அடக்க
குலைத் தெறி கால் விலங்கை
திட்டத்தில் உனக்கு
தருவாரோ சுதந்திரம்?

- லோ. யாமினி
வண்ணை



*நட்ட நடு நிசியில் – சிறிது*
*நடுக்கமும் இல்லாது*
*பெண்மை*
*பவனிவந்தது அக்காலம்.*
*நட்ட நடுத் தெருவில்*
*நயவஞ்சகரின் பிடியில்*
*பெண்மை*
*சிதைந்துபோகிறது இக்காலம்.*
*போரின் பெயரில்*
*பெண்மை*
*பாழாகாமல்*
*பாதுகாக்கப்படுவது எக்காலம்?*

- அ. அருட்செல்வி
யாழ். பல்கலைக்கழகம்

தடைமுகாம் தாண்டிச் செல்லும்
தமிழ்ப் பெண்ணே
நாட்டின் தடைகளைத்
தாண்டிடவா
சலங்கையைத் தகர்த்தெறிந்தாய்?

- எல். டயானா
அச்சுவேலி.

கீதமே
என் நிழல் கூட
உன்னை நினைக்கையில்
என் நினைவைக் கடந்து நீ
எங்கே செல்கிறாய்?

- பிரசன்னா
கந்தர்மடம்.

திட்டமிட்ட தீயர் பகையால்
பொட்டிழந்த பூவை! – இவள்
குட்டக் குறுகிப் போவாளா ஒரு
கூனல் பெண்ணாய் பேதை!
கொட்டப் பகைமை அறியாளா
கொலுசு அறுக்கும் பாவை – இனி
சட்டம் இருளாய் ஆனதாலே
கட்ட விழும் தேவை!

- மானியூர் ரட்ணேஸ்

இருட்டினுள் இருந்து இன்னல் சுமந்தவன்
தெருவினில்... நடந்திடும் தீரம் பெற்றுமே
தடம்பல பதித்துத்தன் தலையினை நிமிர்த்தி
வடமதையிழுத்திட வருகிறான் துணிந்து!
தடைகளை யுடைத்து தரணியிலுயரும்
படையதி லிவனும் ஒருவனாயாகி
நாட்டினை மீட்பான்! நன்மைகள் சேர்ப்பான்!!

- சு.க. சிந்துதாசன்.
பொலிகையூர்

விலங்குகளையே சலங்கையாக்கும்
தலைகுனியா நம்மினத்தின்
பாதங்களை அழிப்பினும்
சுவடுகள் பேசுமே
வீரத்தின் பெருமையை.

- என். சரா
முல்லைத்தீவு

*சகோதரனே!...*
*வெளிக்கடையில் இருந்து*
*வெளிவந்து விட்டேனென்று மகிழாதே!*
*கனநாள்கள் நீ வெளியில் இராய்*
*கஜூந்துறை உனக்காய் காத்திருக்கிறது.*

- வே. மயூரன்
மருதங்கேணி


பெண்ணே!
புயலாய்...
எழுந்து பூகம்பமாய்
கிளர்வாய்...
பூட்டிய விலங்கினை
தகர்த்து...
புதுவழியொன்று
சமைப்பாய்
புதுயுகத்தின் விதையாய்!!!

- க.நாகேஸ்வரா

*காற்கொலுசு மண்மீது உன்*
*உயிர் மூச்சு விண்ணோடு*
*உன் முன்னேயும் சுவடுகள்*
*உயிர்தந்தோரின் இரத்தப்படிவுகள்*
*நரிகளின் காவல் இங்கே*
*சிரிக்கும் தளிர்களை இரையாய்க் கொண்டே*
*தமிழ் மகள் மானம் காற்றில்*
*தந்த உடல் ஆடுதோ கயிற்றில்*
*எரியூட்ட நாதி இல்லை - இந்தப்*
*பெண்மணி ஆளும் நாட்டில்...*

- த. தர்மதா

## மௌன மொழி - 79




உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது. இதனை வரைந்தவர் குருநகரைச் சேர்ந்த சே. கலீஸ்.

# என் பிரிய பூமிக்காக...

## விஞ்ஞான ரீதியான கற்பனைத் தொடர்

(18)

சிசிலியாவின் மகிழ்ச்சி அவள் விடைதீர்க்கப்படாதிருந்த ஒரு கேள்விக்குப்பதில் கண்டு விட்டதைச் சொல்லிற்று.

இவானும் சியாராவும் நிக்கலசும் ஆவலாய் அவள் செய்தியைக் கேட்பதற்காய்க் கூடியிருந்தனர்.

சிசிலியா தன் கையிலிருந்த தடித்த புத்தகத்தை விரித்து வைத்தாள். அப் பக்கத்தில் ஒரு தாவரத்தின் கோட்டுவரிப்படம் கீறப்பட்டிருந்தது. இலை முதல் வேர்வரை. சிசிலியா சொல்லத் தொடங்கினாள்.

"உபகுடும்பம் பப்பிலியோனொய்டியே இற்குரிய தாவரங்களின் சிறப்பியல்புகளில் நம் கவனத்தை ஈர்க்கக் கூடிய பெறுமதி வாய்ந்த ஓரியல்பும் உண்டு. அது வேர்ச் சிறுகணு அல்லது வேர்முடிச்சு எனப்படுகின்றது".

"இவ்வேர்ச்சிறுகணு என்பது உண்மையில் வேர்மயிர்க் கலத்துள் புகுகின்ற நுண்ணிய அங்கியான ரைசோபியம் எனும் பக்றீரியா (Rhizobium) வேர்க்கலங்களுக்கு அருகிலுள்ள கலங்களைத் தூண்டிப் பிரிகையடையச் செய்வதால் உருவாகின்றது......."

"இதற்கும் எங்கள் ஆய்விற்கும் என்ன தொடர்பிருக்கின்றது சிசிலியா?" நிக்கலசுக்குப் புரியவில்லை.

"இருக்கிறது: தொடர்பு இருக்கிறது. சாதாரணமாய் இவ்வகைத் தாவரங்களில் உள்ள இப் பக்றீரியா இத்தாவரங்களுக்கு வளிமண்டலத்தில் 70 வீதத்திலும் அதிகமாகவுள்ள நைதரசன் மூலகத்தைக் கரையக்கூடிய சேர்வையாக மாற்றிக் கொடுக்கிறது. இந்த நைதரசன் தாவர வளர்ச்சிக்கு மிக முக்கியமானது".

அதேவேளை 'ரைசோபியம்' தாவரம் தயாரித்த உணவை, காபோவைதிரேற்றைத் தாவரத்திலிருந்து பெற்றுக் கொள்கின்றது. ஒன்றுக்கொன்று நன்மை வழங்கி இரண்டும் உயிர்வாழ்கின்றன".

"இதே விதமாய்த்தான் வில்லை அமைப்பு உயிரிகளும் இத்தாவரத்தில் தங்கியுள்ளன என்கிறாயா சிசிலியா?"

"இல்லை சியாரா நிச்சயமாய் இதேவிதமாய் இல்லை. ஆனால் அடிப்படையான ஓர் இயல்பு இரண்டிலும் பொதுவாய் உள்ளன என நினைக்கிறேன்......"

"என்ன அது....?"

"இத்தாவர வேரிலுள்ள லெக்ரின் (Lectin) எனும் புரதம். இப்புரதத்திற்கு ரைசோபியம் உறுத்துணர்ச்சியுடையது. அதனால் வேரிலுள்ள இந்தப் புரதமும் ரைசோபியத்தின் கலமேற்பரப்பிலுள்ள காபோவைத்திரேற்றும் தாக்கமடைகின்றன. ரைசோபியத்தின் தொற்றல் இவ்விதமாயே நிகழ்கிறது.

"இதேபோலவே வில்லை அமைப்பு உயிரிகளும் 'லெக்ரின்' புரதத்துக்கு உறுத்துணர்ச்சி உடையவையாய் இருக்கின்றன. ஆனால் இங்குசில்வேறுபாடுகளும் உண்டு...."

சிசிலியா அவர்களிடமிருந்து ஏதாவது கேள்விகள் உண்டா என்பது போல ஒரு கணம் மௌனமானாள்.

"இங்கு வில்லை அமைப்பு உயிரிகள் தாவரங்களுக்கு நன்மை எதுவும் செய்யவில்லையே?"

"மிக உண்மை இவான். மிக முக்கியமான வேறுபாடு இதுதான்." சிசிலியா தொடர்ந்தாள். "எனது ஊகப்படி இவ்வில்லை அமைப்பு உயிரிகள் லெக்ரினுக்கு உறுத்துணர்ச்சி உடையவையாய் இருக்கின்றன. அதனால் வேர்மயிர்க்கலங்களோடு தொடர்பு கொண்டு அவற்றினூடாகத் தாவரம் தயாரிக்கின்ற காபோவைதரேற்றைப் பெற்றுக் கொள்கின்றன. தமது உயிர் வாழ்தலுக்காய்".

"ஆனால் அவை தாவர வேர்களுக்கு வளிமண்டல நைதரசனைப் பெற்றுக் கொடுப்பதில்லை. வழமையாக ரைசோபியம் வாழுமிடங்களில் தாம் இருப்பதால் ரைசோபியத்தின் மூலம் தாவரம் பெறும் நைதரசனையும் தடுத்து விடுகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக அச்சூழலிலுள்ள நைதரசனைத் தம்முடலில் இரசாயனச் சேர்வையாகவும் மாற்றி விடுகின்றன.

"இதனாலேயே பாதிக்கப்பட்ட தாவரங்கள் எல்லாம் நைதரசன் குறைபாட்டு அறிகுறிகளை வெளிறிய பசுமையிழந்த இலைகளைக் கொண்டனவாகி இறக்கின்றன......"

சிசிலியா சொல்லி முடித்து அவர்களைப் பார்த்தாள்.

"அப்படியானால் நாசகாரிகள் தமது கிரகத்தில் ஓர் அங்கியை அங்கேயே பன்மடங்காய்ப் பெருக்கி பின் அவற்றை வளர்ச்சிக்காகவும் அழிவு சக்தி மிகுந்த ஓர் இரசாயனச் சேர்வையைத் தொகுப்பதற்காகவும் பூமியின் குறிப்பிட்ட தாவர அடிகளில் புதைக்கிறார்கள். அவை பூரண வளர்ச்சியுற்றதும் உயிரற்று போன அந்த அங்கிகளை மீண்டும் வந்து சேகரித்துச் செல்கிறார்கள்...."

"ஆம்! எனது ஊகங்களின் படி எமக்கு கிடைத்த தகவல்களின் படி இதுதான் அவர்களின் வருகைக்கான காரணம் எனத் தெரிகிறது...."

பிறகு அவர்களின் விவாதம் வளர்ந்தது. தலைமையகத்திலிருந்து ஏற்கனவே கிடைத்திருந்த செய்தியைச் சியாரா பதிவு செய்து வைத்திருந்தான். அச் செய்தியை மீள அவர்கள் ஒப்பு நோக்கிய போது மற்றைய காட்டுப் பிரதேசங்களிலிருந்தும் பெறப்பட்ட தகவல்கள் தம் தகவல்களோடு மிகவும் ஒத்து போவது தெரிந்தது.

இவானின் குரல் மகிழ்வாய் ஒலித்தது.

"எமது ஆய்வின் ஒரு கட்டத்தை முற்றாய் தாண்டியாகி விட்டது".

"ஆம்! உண்மை தான்" நிக்கலஸ் ஆமோதித்தான்.

"நாளை ஒரு நாள் ஓய்வெடுத்துக்கொள்வோம்...... நாளை மறுநாளிலிருந்து நாசகாரிகளுடனான எமது நேரடிச் சந்திப்புக்கு ஆயத்தங்களைச செய்வோம்". சியாரா சொல்ல அவர்களின் மகிழ்ச்சி ஆரவாரமாய் வெளிப்பட்டது.

அடுத்த நாள் சிசிலியாவுக்கு உணவு தயாரிக்கும் பணி. இவான் கூடாரத்தை சூழவுள்ள பகுதியை துப்பரவு செய்தான். நிக்கலஸ்'ம் சியாராவும் இனிச் செய்யவேண்டிய கடமைகள் பற்றிய திட்டங்களை வகுத்துக் கொண்டிருந்தனர்.

சிசிலியா உணவைத் தட்டுகளில் பரிமாறி அவர்களை சாப்பிட அழைத்த போது மதியப் பொழுது தாண்டியிருந்தது. கடமையின் சுமைகள் நினைவை அழுத்தாத நாள். ஏற்றுக் கொண்ட பணியை அதன் பகுதியைச் செவ்வனே நிறைவேற்றிய திருப்தி. சிசிலியாவின் திறமையை நிரூபித்துக் கொள்வதாய் காற்றில் கலந்திருந்த உணவு வகைகளின் வாசனை!

எல்லாமாய் அன்றைய மதிய உணவுப்பொழுதை இனிய நேரமாக மாற்றி இருந்தன. அவர்கள் உணவுத்தட்டுகளை எடுத்து வந்து இருக்கையில் அமர்கின்ற பொழுதில்...... இலத்திரனியற் தொடர்பு கருவியின் அழைப்பு காதில் விழுந்தது.

"சியாரா..... தலைமையகத்திலிருந்து அழைப்பு வந்திருக்கிறது......" இவான் சொல்ல சியாரா உணவுத் தட்டை வைத்து விட்டு எழுந்து சென்றான். அவர்கள் காத்திருந்தனர். சில நிமிடங்கள் கழிந்த பின் சியாரா திரும்பி வந்தான்.

"என்ன சியாரா..... ஏதாவது தகவல் உண்டா....?"

"இல்லை. வழமையான செய்தி தான். நாங்கள் சாப்பிடுவோம்!" சியாரா சொல்ல மீண்டும் உற்சாகம் பொங்கியது அங்கே. இவானின் வார்த்தைகள் கடமை பற்றிய சுமைகளை மறந்து அவர்களை மகிழ வைத்தது. சியாராவை அவன் வார்த்தைகள் சிலதடவைகள் கேலிசெய்த போதும் சியாரா ஏனோ வெற்றுப் புன்னகையுடன் அவற்றை ஏற்றுக் கொண்டு விட்டான். தன்னுடைய சமாதானப் பணி அவசியம் அற்றுப் போனதில் நிக்கலஸ்'க்கு நிம்மதி. சியாரா ஏதோ சிந்தனையுள் அமிழ்ந்து விட்டிருக்கிறான் என சிசிலியாவுக்கு தோன்றியது. ஆனாலும் அவள் எதையும் கேட்கவில்லை. அந்த நேரத்து மகிழ்வு குலைந்து போகக் கூடாது.

உணவு நேரம் முடிந்த பின் இவானும் நிக்கலஸ்'ம் மரநிழலில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்கள். சிசிலியா உள்ளே பொருள்களை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தாள். அரை மணிநேரம் கழிந்திருக்கலாம் நிக்கலஸின் விழிகள் மெல்ல தூக்கத்துக்குள் அமிழ ஆரம்பித்த வேளையில் அந்த அழைப்புக் கேட்டது. "நிக்கலஸ்......"

நிக்கலஸ் தூக்கத்தை உதறி எழுந்த போது... சியாரா நின்றிருந்தான். எங்கோ புறப்படுவதற்கு ஆயத்தமானது போலஉடை அணிந்திருந்தான். தோளில் கனக்கும் தோல்பை.... நிக்கலஸ்'க்கு எதுவும் புரியவில்லை.

"என்ன சியாரா இது? எங்கு புறப்பட்டு விட்டாய்!" சியாராவின் அப்பால் சிசிலியா நின்றிருந்தாள். அவளுக்கு அவன் பயண விவரம் தெரியும் போன்றிருந்தது.

"தலைமையகத்திலிருந்து தகவல் வந்தது நிக்கலஸ்.... என்னை திரும்ப வரும்படி.... இப்போது ஊர்தி வரும என்னை அழைத்துச் செல்ல..."

"எப்போது தகவல் வந்தது சியாரா....?" இவானும் எழுந்து விட்டிருந்தான் குரலில் பிரிவின் துன்பம் தெரிந்தது.

"சாப்பிட ஆரம்பிக்கும் போது அழைப்பு வந்ததே.... அப்போது சொல்லப்பட்டது...." சியாரா சொல்ல அவர்களிடையே இறுக்கமான மௌனம் கவிந்தது.

"அந்த மகிழ்வைக் குலைக்க வேண்டாமென்றுதான் அப்போது சொல்லாமலிருந்தேன்....."

பிறகு அவர்கள் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. காலையில் இருந்து நினைவுகளில் ஊற்றெடுத்த மகிழ்வின் சாரல் திடீரெனவற்றிப் போய்விட்டாற் போலிருந்தது. அன்பாய், எதிர்ப்பாய், சின்னச் சண்டைகளுடனானதாய், பயங்கரங்களுக்கு முகம் கொடுத்த ஒற்றுமையுடனாய் எத்தனை விதங்களில் நினைவுகளில் பதித்து விட்ட சியாரா!

இவான் எழுந்து சியாராவின் அருகே சென்றான்.

"திரும்பி வரமுடியுமா சியாரா....?" சியாராவின் விழிகள் 'தெரியாது' என்பதாய்ச் சின்ன ஏக்கத்துடன் பதிலளித்தன.

"நான் பலதடவைகளில் உன்னைச் சினமூட்டுவதாய் நடந்து கொண்டிருக்கிறேன்.... என்னை மன்னித்துக் கொள் சியாரா...." இவானின் குரல் கரகரத்தது. சியாரா பதிலேதும் சொல்லாமல் அவன் தோளில் தன் கைகளைப் போட்டபடி புன்னகைத்தான். அந்தப் புன்னகையில் தெளிவாய்த் தெரிந்த துயரம் அவர்களைத் துன்பப்படுத்திற்று.

தானியங்கி ஊர்தி தூரே வருவது தெரிந்தது. சியாரா தோள் பையை எடுத்துக் கொண்டான்.



"நான் வர முயற்சிப்பேன். கடமைகள் இடமளித்தால். நீங்கள் எச்சரிக்கையாய் நடந்துகொள்ள வேண்டும். என் வேண்டுகோள் இது மட்டும் தான். அவர்கள் ஆபத்தானவர்கள். எந்தக் கணத்திலும் நிதானம் இழந்து விடக்கூடாது. நிக்கலஸ்.... நான் உனக்கு அதிகமாய்ச் சொல்லத் தேவையில்லை. சிசிலியா.. உன் மாணவச் சிறுவனைப் பற்றி ஏதேனும் சொல்ல முடிந்தால் உனக்குத் தகவல் சொல்லிவிடுகிறேன். இவான் நீ நிதானமாய் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் ஆபத்தானவர்கள்..."

அவன் சொல்லிக்கொண்டே ஊர்தியில் சென்று ஏறினான். கண்கள் கலங்கியிருந்தனவோ? ஊர்தி மெதுவாய் நகரத் தொடங்கி வேகம் பெற்றது. பெரிதாய் எழுந்த தூசிப்படலம் அவர்கள் கண்களில் சியாராவை மறைத்தது. எந்த வேளையிலும் சிந்தித்து நிதானமாய் வழிநடத்துகின்ற சியாரா! அவர்கள் மூவரும் நினைவில் துயரம் நிறைந்திருக்க ஊர்தி சென்ற திசையையே நெடுநேரமாய் நோக்கியபடி நின்றார்கள்....

* * *

எங்கிருந்துதான் அந்த நலிந்த உடலுக்குள் அவ்வளவு விரைவாய்ச் செயற்படுவதற்கான சக்தி வந்ததோ! போர்வையை விலக்கிய சீலியா நாலே அடிகளில் பிரதான மின் இணைப்பை அணமித்ததும் கண்ணிமைக்கும் பொழுதுக்குள்ளாய் ஜோர்ஜ் பாய்ந்து சென்று அவளின் தன்னை அழிக்கும் முயற்சியைத் தடுத்ததும் ஒரு சேர நிகழ்ந்திருந்தன.

திமிறும் சீலியாவைத் தன் கரங்களுள் அடக்கி மீண்டும் படுக்கையில் அவளைச் சாய்த்தார் ஜோர்ஜ்.

எதற்காக என்னைத் தடுத்தீர்கள், நான் இந்தத் துன்பத் தழலில் கருகிச் சாம்பலாக வேண்டும் என்பதுதான் உங்கள் ஆசையா?" சீலியாவின் குரல் விம்மல்களில் தேய்ந்து மறைந்தது. ஜோர்ஜ் துவாலையால் அவள் கன்னத்து ஓரங்களைத் துடைத்தார். கழுத்தின் வியர்வையை ஒற்றி எடுத்தார். காற்றாடியைச் சுழல விட்டு வந்து அவளருகே அமர்ந்தார்.

"சீலியா....." அவரின் மென்மையான அழைப்பு அவளைச் சற்றே சாந்தப்படுத்தியிருக்க வேண்டும்.

"உன் துன்பங்களுக்கு இந்த முடிவு தீர்வாக அமைந்து விடுமென்று நினைத்தாயா சீலியா..."

"..........."

உன்னைச் சாந்தப்படுத்திக் கொள் சீலியா. வீணான கற்பனைகளுக்கு உன் அமைதியை விலையாக்கிவிடாதே...."

"வேண்டாம்..... எனக்கு எந்த வார்த்தையும் கேட்கப் பிடிக்கவில்லை" அவள் தீனமான குரலில் சொன்னாள். ஜோர்ஜ் எதுவும் பேசாமல் மௌனமாயிருந்தார். எவ்வளவு நேரம் கடந்ததோ தெரியவில்லை.

ச.குமுதினி
(சங்கத்தானை)

எண்ணங்களின் போராட்டம் சீலியாவை நன்கு களைக்கச் செய்திருக்கவேண்டும். மயக்கத்துள் அமிழ்ந்தவளாய் தூக்கம் சீலியாவை தழுவிக் கொண்டது. ஜோர்ஜ் சப்தமிடாமல் எழுந்து சென்று அலமாரியைத் திறந்தார். சின்னப் போத்தலிலிருந்த திரவத்தை ஊசியுள் செலுத்தி மீண்டும் அவளருகே வந்தார். சீலியா உன் நிம்மதிக்காக....." அவர் வாய் முணுமுணுத்தது. இடது கையைச் சற்றே நிமிர்த்தி அவள் புயத்தை பஞ்சினால் அழுந்தத் துடைத்தார். ஆழ்ந்த உறக்கத்தில் துவண்டிருந்த சீலியாவின் புயத்தில் ஊசியுள் நிரப்பப்பட்டிருந்த திரவம் மெதுவாய்ச் சென்று அவள் குருதியுடன் கலந்தது.

(தொடரும்)

## சித்திரப் பா

பாரதியார் பாட்டிசைப்பில் பாட்டி படுசுட்டி;
பாரதியா! பல்முளைத்த பாப்பாவும் – பாரசிக்கப்
பாரதி பாட்டொன்று பண்ணெனப் பாடினாள்
பார தியின்பாப்பாப் பா.

– அங்குசன்

## குறள்வெள்ளம்

துறவுதான் தூய்மையான மார்க்கம் என நினைப்பது தவறு. இல்லற வாழ்வில் வழுவாமல் வாழுதல் துறவினும் மேன்மை என்பதை இல்லறவியலில் ஆங்காங்கே வலியுறுத்துகிறார் வள்ளுவர்.

துறவு என்று தீர்மானித்துவிட்டால் எதிர்பார்ப்புகள் தானாக விலகி வழிவிடத்தான் வேண்டும். அங்கே மனத்தூய்மை, பரிசுத்தம் எல்லாம் இயல்பாகப் புகுந்துவிடல் வேண்டும். அதற்கெல்லாம் தனியான பாராட்டைப் பின்னர் எதிர்பார்க்க இயலாது.

துறந்தாரினும் துய்மை உடையார் எவர் என்கிறார் வள்ளுவர் இங்கே? நன்நெறி கடந்து கெட்டவரின் இறந்தார் வாயினின்றும் உமிழப்படும் கொடுஞ் சொல்லைப் பொறுப்பவர்தான் இன்னாச் சொல் நோற்கிற்பவர். அத்தகைய பெருமை பெறுகிறார்.

கயவனின் சுடுசொல் காதில் பட்டதும் பொங்கி வெகுண்டு எழார் அறிவுடையார். கேளாதவர்போல் இருத்தலும் ஒரு காதால் கேட்டு மறுகாதால் விடுதலும் அவரியல்பு அல்லவா?

**துறந்தாரின் தூய்மை உடையார் இறந்தார்வாய்**
**இன்னாச்சொல் நோற்கிற் பவர்** – 0159

*– அம்பிகைபாகன்*

# “பறவைகள் கூடு திரும்புகின்றன”

**கதிர்காமநாதன்**
(தொல்புரம்)

ரீ.வி. செய்தியில் இம்மாதம் குளிர் அதிகமாக இருக்குமென அறிவிக்கப்பட்டது. ரேடியோவும் இதைத்தான் திருப்பிச் சொல்லியது. பனித்தூள்கள் பஞ்சு பஞ்சாய் விழத் தொடங்கியிருப்பது ஜன்னல் ஊடாக தெரிந்தது. உடம்பினை துணிப்பந்தினால் மூடிக்கட்டியும் குளிரின் தாக்கம் குறையவில்லை. செய்தி முடிந்து ரீ.வியில் அந்த இளங் காதலன் காதலியை அணைத்திழுத்தபடி அறைக்குள் சென்றான்.

ரீ.வியை நிறுத்தினேன். பார்த்துப் பார்த்து சலித்து விட்டது. ச்சே... இதுதான் வாழ்க்கையா? மாற்றமில்லை. எவ்வளவு காலம்? பதினைந்து வருடங்களுக்கு மேல். இந்தப் பனிக்குளிர் வெயில், காற்று, ‘பார்ட்டி.’ சினேகிதர்கள், மகிழ்ச்சி ஆர்ப்பாட்டங்கள். இருந்தும் பணத்துக்குக் குறைவில்லை, ‘பாங்க்’ எக்கௌவுண்டில் பணம் கூடக் கூட மகிழ்ச்சி தலைகால் புரியாது. இரவு பகல் வேலை தொடரும். பணமும் கூடிக் கொண்டு போகும்.

சூடாக ரீ குடித்தால் நல்லது போல் இருந்தது. போத்தல் அயிட்டங்கள் சலித்து விட்டன. யூ.கே. வந்து சொந்த வீடு வாங்கியாகி விட்டது. அதுவும் மேல்மாடியோடு. நானும் மனைவியும் இரண்டு பிள்ளைகளுக்கும் இந்த வீடு பெரிதுதான். புதிதாக வந்த இலங்கைக்காரர்கள் வாடகைக்கு ஓர் அறை கேட்டிருக்கிறார்கள். கொடுத்து விடலாம்.

மனம் அலைபாய்ந்தபடி இருந்தது. பிள்ளைகள் இருவரையும் இன்னும் காணவில்லை. பொழுது படும் நேரத்தில் நண்பர்கள் வந்து காரில் அழைத்துக் கொண்டு போய்விட்டார்கள். அதுவும் காரில் வந்தவன் மகளை என் எதிரிலேயே அவள் தலையை இழுத்து உதட்டில் முத்தமிட்டு....

கடவுளே! மகள் இதைப் பெரிது படுத்தவில்லை. போகும்போது ஒரு வார்த்தை ‘அப்பா போட்டு வாறோம்’, ‘அம்மா போட்டுவாறோம்’ எதுவும் அவர்கள் சொல்லவில்லை. நாங்கள் வெறும் இயந்திரங்கள். ஹோலில் காசு உழைக்கும் இயந்திரங்கள் வைத்திருக்கும் ரீ.வி. பிறிட்ஜ் போன்று நாமும் அம்மா, அப்பா என்ற பெயர் வைத்த இயந்திரங்கள்.

அம்மா, அப்பா பயமே இல்லையா? நாங்கள் இப்படியா வளர்ந்தோம்? அப்பாவின் அனுமதியில்லாமல் கேற்றைத் தாண்டிப் போக முடியுமா?

“தம்பி, திருவிழா பாக்க போகப் போறானாம்.”

“செந்திலோட படம் பார்க்கப் போறானாம்.”

“பள்ளிக் கூடத்தில் பந்தடி பார்க்க...”

எல்லாவற்றுக்கும் அனுமதி கிடையாது. அம்மாதான் தூதுவராக நிற்பார். தம்பி, தங்கை, அக்கா எல்லோருக்கும் அம்மாதான் தூதுவர். அப்பாவையும் அம்மாவையும் பார்க்க ஆசையாக உள்ளது. அம்மாவின் மடியில் படுத்து உருண்டு நித்திரை கொள்ள வேண்டும் போல் ஆசை வருகிறது. எல்லாம் நிறைவேறாத ஆசைகள். அவர்கள் போய் விட்டார்கள். இந்த நிலைமையை அவர்கள் பார்க்க வேண்டாம் என நினைத்துக் கடவுள் அவர்களை அழைத்துவிட்டான்.

பின்னேரத்தில் அம்மன் கோவில் மகிழமரத்தடியில் கூடும் நண்பர்கள். இடையே இடையே ஒவ்வொருவராகப் பிரிந்து கொண்டிருந்த காலமது. அரச துருப்புக்கள் திடீர் திடீரென இரவில் இராணுவ ட்ரக் வண்டிகளில் கிராமத்தில் புகுந்து தாங்கள் தேடிவந்த நபர்களைப் பிடித்துக் கொண்டு போனார்கள். கிராமம் அரண்டது; நித்திரை போனது. நாய்களும் உறங்கவில்லை. கதவுகள் இழுத்து மூடப்பட்டன. இளைஞர்கள் சொல்லாமல் கொள்ளாமல் போனார்கள். ஒவ்வொரு வீட்டின் மூலையிலும் அவலச் சத்தம் கேட்கத் தொடங்கி கடைசியில் முடிவற்ற ஒப்பாரி ஆனது.

கடைசியில் நான் மட்டுமே மகிழமரத்தடியில் எஞ்சிநின்ற நிலைமை. சுற்றியிருந்தவர்கள் “எங்கையாவது போ! நிற்காதே. இருந்து பிரயோசனமில்லை.” விடாது சொன்னார்கள். மனமும் சதா ‘போ’ ‘போ’ என்று நச்சரித்தது.

எங்கே ‘போவது’?’ அப்பாவை விட்டுப்போக முடியுமா? அப்பா வெளியில் போக விடுவாரா? காலத்தை அறிந்து அப்பாவால் வளைந்து கொடுக்க முடியுமா?

குஞ்சுகளுக்கு அனுமதி கிடைக்கவில்லை. மேலும் மேலும் சிறகுகளை விரித்து எங்களை அணைத்துக் கொண்ட பெற்றோர் பறவைகளாக உயிர் உள்ளவரை நாம் உங்களைக் காப்போம் என்று சொல்லாமல் சொல்லின. அவை எங்களை நிழலாய்த் தொடர்ந்தன. நாங்கள் வளர வளர எங்களைக் குஞ்சுகளாகவே நினைத்தன. போகும் போது ஏங்கின. வரும்போது சிரித்தன. உள்நாட்டுக் கலகம் வெடித்துக் கிராமமே ஓடிய போது எங்களைக் கூட்டிக் கொண்டு ஓடின. தொடர்ந்து மேலும் அவற்றால் முடியவில்லை. நோய் பிடித்து கொண்டது. குப்பையைக் கிளறிக்கிளறி இரைதேடிச் சிறகுகளுக்கு அடைக்கலம் தந்தன. கண்ணெதிரே இறந்தன.

அப்பா இறந்து போனார். தாய்ப் பறவை கதிகலங்கியது. “நான் என்ன செய்வேன்? நான் என்ன செய்வேன்?” என்று தலையிலும்



மார்பிலும் அடித்துப் புரண்டது. குஞ்சுகள் திகைத்து மிரண்டு பின் ஒவ்வொரு திக்காக வீட்டை விட்டு, நாட்டை விட்டு, கடல் கடந்து...

ரோட்டை மூடி பனித் தூள்கள் பரவி விட்டன. மின்சார விளக்குகள் மங்கலடித்தன. நாளைக்கு பனிக்கட்டிகளை அகற்ற ஆள்கள் வருவார்கள். இங்கு வந்த புதிதில் யோசியாமல் நடந்து கீழே விழுந்தது இப்பொழுதும் ஞாபகத்திற்கு வந்தது. ரீ குடிக்கும் ஆசை மறுபடியும் எழுந்தது. தனியக் குடிக்க மனது ஒத்துவரவில்லை. நேரத்தைப் பார்த்தேன் இன்னும் அரை மணியில் மனைவி கொரி வந்து விடுவாள். சேர்ந்து குடிக்கலாம்.

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. மகனும் மகளும் உள்ளே வந்தார்கள். கூடவே அவர்களின் நண்பரும் நண்பியும். சிரிப்பும் கும்மாளமுமாக... இப்போது கூட வந்தவன் புதிதாக இருந்தான். எந்த நாட்டுக்காரனோ தெரியாது. என்னைப்பார்த்து அவன் சொன்னதைக் கேட்டுப் பிள்ளைகள் பயங்கரமாக சிரித்தபடி அவனுடன் மாடியறைக்குப் போனார்கள். சிரிப்பு இன்னும் ஓயவில்லை. எனக்கு அவன் சொன்னது காதில் விழுந்தது.

நான் நெல்சன் மண்டேலா மாதிரி இருக்கிறேனாம். மனைவியும் வந்து விட்டாள். என்னைப் பார்த்ததும் அவளுக்கு நிலைமை புரிந்தது. அவர்களுக்கு இதெல்லாம் பழக்கமாகி விட்டது. இந்தச் சிரிப்பு, கும்மாளம் எல்லாம் எத்தனை மணிக்கு ஓயும் என்பது எங்களுக்குத் தெரியாது. நான் விறைத்தபடி நின்றேன். மனைவி என்னைப் பார்த்தாள்.

“கூட வந்தவன் என்னைப்பார்த்தால் நெல்சன் மண்டேலா மாதிரி இருக்கிறேனாம் எனச் சொல்லிப் போட்டுப் போறான் இவையளும் சிரிக்கினம்.”

“என்னய்யா சின்னப்பிள்ளை மாதிரி இருக்கிறியள் இது எங்கட ஊரில்லை யு.கே. இங்கை வளர்ந்த பிள்ளையள். நாங்கள் இந்த வயதில் எப்படி இருந்தனாங்கள். ஒண்டும் செய்யேலாதுதான்.” வாயைக் கொடுத்தால் வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டியதுதான்.

மனைவி என்னைச் சமாதானப் படுத்தினாள். மனம் ஆறவில்லை. என் தோற்றத்தைப் பார்த்தா அல்லது நிறத்தைப் பார்த்தா அப்படிச் சொன்னான்? வைத்தியக்காரன். என்ன சொன்னாலும் பெண்கள் விசயத்தில் நிறங்கள் தெரியாது. வந்த புதிதில் இந்த நிறத்தினால் மனம் அடி வாங்கியது. எங்களுக்குப் பின்னால்தான் நீ இருக்க வேண்டும் என வெள்ளை நிறம் சைகையில் சொன்னது. நிறத்தை மாற்ற முடியாது. எப்படிக் கழுவினாலும் போகாது. அன்று கிராமம் ஓடியதும் உயிரிழந்ததும் இதனால்தான்.

இங்கே பல்லைக் கடிக்க வேண்டியிருந்தது. பொறுமையாக இருக்க வேண்டிய நிலைமை. ஒளிவதற்கு இடமில்லை. இனப்பூதத்திற்குப் பயந்து இங்கு வந்தாகி விட்டது. இதுவும் ஒரு பூதந்தான். உடன் விழுங்காது. கொஞ்சம் கொஞ்சமாக என்னை, மனைவியை, பிள்ளைகளை, பணத்தைக் காட்டி உறவுகளை அறுத்து மெல்லப் பொறுமையாக விழுங்கும்.

கடைசியில் எஞ்சி நிற்பது பணமா?

குளிரில் விறைத்து, வெயிலில் சுருண்டு, அறைக்குள் வதங்கித் தனிமையில் பைத்தியமாகி ஊரிலிருந்து கடிதங்கள் வந்தால் ஆனந்தத்துடன் அதையெடுத்துப் பிரித்தால் எல்லாமே துயரங்கள்! அவலச் சாவுகள்....

மாலை வேலை முடிந்து வீடு வரும்போது ஊரிலிருந்து வந்த கடிதம் என்னையும் மனைவியையும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது.

“......... *முந்தி எழுதிய கடிதத்திலேயே எழுதவேணுமெண்டு நினைச்சனான். இப்ப எழுதுறன். இவ்வளவு காலமும் உங்கட வீட்டையும் வளவையும் பார்த்துக் கொண்டு வந்திட்டன். ஊரில பிரச்சினை வந்து சனங்கள் இடம் பெயர்ந்து அலையேக்க ஆக்களைப் பிடிச்சு வீட்டில இருத்திவிட்டனான் ஒரு பிரச்சினையும் இல்லை. சண்டை யாழ்ப்பாணத்தில் உக்கிர மடைந்து வன்னிக்குப் போய் நான் வந்த பிறகு இப்பதான் சனம் கொஞ்சம் கொஞ்சமாக வருகினம். இப்பவும் கன வீடு சும்மா தான் கிடக்குது. வன்னியிலிருந்து வராத ஆள்கள் தங்கட வீட்டையும் வளவையும் பார்க்கச் சொல்லிக் கடிதம் போட்டிருக்கினம். எனக்குச் சிரிப்புத்தான் வருகுது. எத்தனை வீட்டைத்தான் பார்க்கிறது.*

*அண்டைக்கு எஞ்சினியர் முருகேசம்பிள்ளை குடும்பம் வீட்டை என்னைப் பார்க்கச் சொல்லிப் போட்டு கொழும்புக்கு வந்திட்டினம். வெளியால போகப் போகினமாம். இஞ்ச என்னைப் பார்க்கிறத்துக்கு ஒருத்தருமில்லை. நான் என்ன செய்யிறது? நீங்கள் உங்கட வீட்டையும் வளவையும் யாருக்கும் விக்கிறத்துக்கு அலுவல் பாருங்கோ. உடனே செய்யவும்...*”

வீட்டையும் வளவையும் விக்கிறதா? நெஞ்சு முழுவதும் வலியெடுத்தது. எல்லோருடைய வீட்டையும், வளவையும் தனி மனுசன் பார்க்க முடியுமா? பாவம் கந்தசாமி! என்ன பதில் எழுதிப் போடுவது? நானும் மனைவியும் ஒருவரையொருவர் பார்த்து முழித்தபடி நின்றோம்.

நிதானமாக யோசிப்பதா? பொழுது சாய நகர விளக்குகள் கண் சிமிட்டத் தொடங்க பனிக்காலம் தன் கடைமையைச் செய்யத் தொடங்கியது. பிள்ளைகள் இன்னும் வரவில்லை. ரீ.வி. செய்தி இன்னும் பனிக்காலம் இம்முறை அதிகமாக இருக்குமென அறிவித்தது. யுத்தம் தொடருமென இலங்கை சொன்னது.

காலை பனிக் குவியலை ஆள்கள் அப்புறப்படுத்திக் கொண்டிருந்தார்கள். கார் ஒன்று முழுவதுமாக மூடப்பட்டிருந்தது. மேல் மாடியில் மனைவி அறையைத் துப்புரவு செய்யும் சத்தம் கேட்டது. இன்னும் எவ்வளவு காலம் மனைவி பொறுமையாகச் செய்யப்போகிறாள்? சிகரெட், மதுபானப் போத்தல், இறைச்சி எல்லாம் சேர்ந்து ஒருவிதமான வாசனை வந்தது. மனைவி என்ன சொன்னாலும் கேட்கமாட்டாள். இன்னும் சில நிமிடங்களில் இருவரும் கிளம்பி விடுவோம். அவரவர் வேலைகளில். வெவ்வேறு திசைகளில்.

அலுத்துவிட்டது. இந்த நாடகத்தில் மாற்றமில்லையா? பிள்ளைகளை நம்பியிருக்க முடியாது என்பது நிச்சயமாகத் தெரிகின்றது. மனதில் மறுபடியும் நெல்சன் மண்டேலா குரல் கேட்டது. நாங்களும் வரும் நாள்களில் அவர் போல் கைதிகளாகி விடுவோமா? வீட்டை விட்டு வெளியேபோகப் பக்கத்து வீடு ‘ஹென்றி போர்ட்’ காலை வணக்கம் சொன்னான். ஆரம்பத்தில் எங்களை அறிமுகப்படுத்தியபோது அலட்சியப்படுத்தினான். இப்போது மாறிவிட்டான்.

பிள்ளைகளும் இப்படி மாறி விடுவார்களா? முடியாது. போகும் போது வழியில் தெரிந்த முகங்கள். ஊரிலிருந்து முழுவதுமாக வந்து விட்டார்களா? இங்கே உருவாகும் சந்ததியை நாளை எப்படி அழைக்கப்போகின்றோம். தமிழா? ஆங்கிலமா? நாங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றோம்? இங்கிருந்து போகும் வீடியோக்கள், அல்பங்கள் எல்லாம் ஊரிலுள்ள ஆள்களை மயக்கிக் கொண்டிருக்கின்றன. ‘எங்களைக் கூப்பிடுங்கோ!’ எனக் கடிதம் வருகின்றது. மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன.

சகோதரங்கள், உறவினர்கள் திகைத்து நிற்கின்றார்கள். இதுதான் எங்களுக்கு இடம். வீடு எல்லாமே என்று தீர்மானித்து விட்டார்களா? எங்களின் நரக வேதனை இவர்களுக்குத் தெரியாதா? ஒன்றுமே சந்தோஷமான செய்திகளாகத் தெரியவில்லை.

மாத இறுதியில் விடுமுறையைக் கழிக்க ‘டூர்’ போவது ஞாபகத்திற்கு வந்தது. அதை நினைக்க மனது சந்தோஷப்பட்டது. எங்கேயாவது ஓடிப்போக வேண்டும் போல் இருந்தது. கந்தசாமி என்பதில் வரும் வரை வீட்டையும் வளவையும் பார்த்துக் கொண்டிருப்பார். பிறந்து வளர்ந்து ஓடியாடித் திரிந்த வீடு. அப்பாவின் கோட்டை, ராஜதானி எல்லாம் அதுதான். அப்பா நட்டுவைத்த மா, பலா, தென்னை, கமுகு எத்தனை? கிணற்றிலே தண்ணி அள்ளித் தான் ஊற்றியதை அடிக்கடி சொல்லுவார். உயிரும், வியர்வையும் கலந்த வீடு. கந்தசாமி கைவிட்டால் அந்தக் கோலத்தை நினைக்க முடியவில்லை.

“கனக்க யோசியாதயுங்கோ, ஏதோ செய்யத்தான் வேணும் ஒருக்கா போய் எல்லாத்தையும் முடிச்சிட்டு வந்திட்டா பிரச்சினை தீர்ந்து போகும். ஊருக்கும் எனக்கும் உள்ள தொடர்பு அறுந்துவிடும்.

ரெலிபோன் மணியடித்தது. எடுத்தேன்.

“ஹலோ! அண்ணை நான் சுந்தரம் கதைக்கிறேன்”

“என்ன விசயம் அப்பு, ஏதேனும் அவசரமோ?”

“அங்க யாழ்ப்பாணத்தில உங்கட வீட்டைப் பார்க்கிற கந்தசாமி செத்துப்போனார்.”

தாங்க முடியாத அதிர்ச்சி. கந்தசாமி செத்துப் போய்விட்டாரா?

“எப்ப நடந்தது சுந்தரம்?”

“நடந்து இரண்டு கிழமைக்கு மேல் ஆகுது. ஆள் செத்தது உடன யாருக்கும் தெரியாதாம். இரண்டு நாள் கழிச்சு வீட்டுக்கால மணம் வர விசயம் தெரியவந்தது. உடன பொடியை எரிச்சுப்போட்டினம். உங்களுக்கு சொல்லச் சொல்லி சொன்னவை.”

மனைவியும் விசயம் கேட்டுத் துடித்துப் போனாள்.

உடல் மனம் எல்லாம் சோர்ந்து விட்டது. மாத இறுதியில் வரும் டூரை நிறுத்திவிடலாம். ஆனால் நான் வரவில்லை என்று அறிவித்தால் எல்லாம் குழம்பிவிடும். இங்கிருந்து என்ன செய்யப்போகிறேன்?

அந்த சொகுசு பஸ் எங்களை அந்த இடத்தில் இறக்கிவிட்டபோதே விநோதமான சத்தங்கள் கேட்கத் தொடங்கின. நகர்ப்புற ஆர்ப்பாட்ட இரைச்சலின்றி மனது குதூகலிக்கும் பறவைகளின் சத்தம். ஒவ்வொருவிதமான பறவை! ஒவ்வொருவிதமான சத்தம். மெல்ல மெல்ல நடந்தபடி நீர் நிலைகளின் மத்தியில் படர்ந்திருந்த மரங்களில் மொய்த்தபடி இருந்த பறவைகளைப் பார்த்தோம்.

பொன்னிறமாய், பச்சையாய், கறுப்பும் நீலமும் வெள்ளையும் சாம்பலும் கலந்து குட்டைக் கழுத்து, நீண்ட கழுத்து கட்டைக் கால்கள், அகன்று பருத்த அலகுகள்.... எத்தனை விதம். எங்களுக்கு வழிகாட்டியாக வந்த பெண் பறவைகளைச் சுட்டிக் காட்டிச் சொன்னாள்.

“வெவ்வேறு நாடுகளில் இருந்து பறவைகள் தங்கள் நாட்டில் எழும் பருவ மாற்றங்களைச் சமாளிப்பதற்கு இங்கு வருகின்றன. இம்மாதம் தொடங்கி வரும் மாதம் வரை இங்கு அதிகமான பறவைகளைப் பார்க்கலாம். இங்கேயே மரங்களில் கூடுகட்டி குஞ்சுகள் பொரித்து...”

“சகோதரி அதன்பின் இந்தப் பறவைகள் நிரந்தரமாக தங்கள் இருப்பிடங்களை இங்கேயே அமைத்துக் கொள்கின்றனவா?” வந்த பயணிகளில் ஒருவர் அந்தப் பெண்மணியைக் கேட்டார்.

வழிகாட்டி பெண் மென்மையாகச் சிரித்தாள்.

“இல்லை இங்கேயே தங்கள் இருப்பிடங்களை அமைத்துக் கொள்வதில்லை. அவைகள் இங்கே தொடர்ந்து தங்கும் எண்ணத்தில் வருவதில்லை. தங்கள் தாய் நாட்டில் பருவமாற்றம் சீராக சொந்த நாடுகள் சென்று விடுகின்றன. இதில் எவ்வித மாற்றமுமில்லை.”

மனதில் ஏதோ ஒன்று செய்வது போலிருந்தது.

இந்த இயற்கையான சூழலை விட்டு திரும்பவும் தங்கள் நாட்டுக்கு பறவைகள் போய்விடுகின்றனவா?

கடவுளே ஐந்தறிவுப் பறவை எவ்வளவு சுலபமாக - இயற்கையாக நடந்து கொள்கிறது. கேவலம் நாங்கள்... திரும்பி வரும்போது மனைவி பிள்ளைகளைப் பார்த்து கூறினேன்.

“நாங்கள் யாழ்ப்பாணம் போகப் போகின்றோம்.” (யாவும் சிந்தனை)

## மன முகத்தின் குணமென்ன?

தீயென்றார் உன்னை!
நீ..தீ; புரிகிறது.
ஆனால் நீ ஒளிவிளக்கின் சுடரா?
குடிசைகளில்,
மோகமுற்றுப் பற்றுகிற மொக்குக் கடுங்கனலா?
ஊன்குடித்துச் சிதையில்
உருவாகும் காங்கைதானா?
பட்டும்படாமலும் ஞானியைப்போல் நின்றணையும்
அடுப்படி அக்கினியா?
ஆலயத்தில் அருள் சுரக்கும்
கற்பூரக் கொழுந்தா?
காட்டினையே உணவாக்கி
ஏப்பமிடும் பெருநெருப்பா? அக்கினிச் சிறுகுஞ்சா?
எட்ட இருந்தால் இதம் நல்கி
நெருங்கி வந்து
தொட்டாற் பொசுக்குகின்ற,
குளிர்விரட்டும் இளந்தணலா?
பொங்கியெழும் எரிமலையின் முதிர் அனற்குழம்பா
என்பதுதான் புரியவில்லை.
உனையறிய என்ன விலை?

- த. ஜெயசீலன் -

# யாரோடு - - - - -

(IV ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கும் நிரம்பவே பிடிச்சுவிட்டுது. பிறகென்ன? நிம்மி எங்கள் குடும்ப அங்கத்தினராக ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டாள். தாய் தந்தையரை இழந்த - சகோதரங்கள் யாருமற்ற - பெரிய தாயாருடன் தங்கியிருந்த - நிம்மி எம்முடனேயே தங்கிவிட தடையேதும் இருக்கவில்லை. நிம்மியின் பெரியம்மாவுக்கும் இது பெரிய விடுதலையாகவே இருந்தது. திருமணப் பதிவினையும் மறுநாளே முடித்துவிட்டோம்.

நிம்மி வெகு இயல்பாக எம்முடன் இணைந்துகொண்டாள். மிக இனிமையாகவும், அன்பாகவும் பழகினாள். எல்லா வேலைகளையும் சலிப்பின்றித் தானே செய்வாள்.

இந்நிலையிலேயே மீண்டும் தொண்ணூற்றி ஆறு ஏப்ரல் கடைசியில் யாழ்ப்பாணம் திரும்பினோம்.

எமது பழைய வீடு அப்படியே இருந்தது. அதைத் துப்பரவாக்கி மீண்டும் அதில் குடிபுகுந்தோம்.

இவர் மெல்ல மெல்ல கடலுக்கு செல்லத் தொடங்கினார். றொகான் அரியாலையில் கராஜ் ஒன்றைத் தன் நண்பனுடன் இணைந்து நடத்தத் தொடங்கினான். வாழ்வு ஓரளவு சுமுகமாகவே போய்க்கொண்டிருந்தது.

மூன்று மாதம் கடந்திருக்கும், ஒருநாள் காலைப் பொழுதில், நான் முற்றத்தில் கூட்டிக்கொண்டிருக்கும் போது....

"என்ர நிம்மிக் குட்டியல்லா தாம்மா!" என்ற றொகானின் கெஞ்சும் குரலும், தொடர்ந்து......

"இப்ப இல்ல. பேந்துதான்" என்ற நிம்மியின் குரலும் கேட்க......

ஏதாவது காசு ஏதும் கேட்கிறானாக்கும், நான் குடுப்பம் என எண்ணித் திரும்ப...

மீண்டும்...

"நிம்மிக்குட்டியல்லா ஒன்றே ஒன்று கன்னத்தில கடனாத்தாம்மா, வந்து வட்டியோட தாறன்" என்று றொகானின் குரல் கேட்க நின்றுவிட்டேன்.

சற்றுநேரத்தில் "அம்மா போட்டு வாறன்" என்றவாறு அவன் போய்விட்டான்.

மத்தியானச் சாப்பாட்டுக்கு வாறவன் அதுக்கும் வரயில்ல. வேலையாக்கும் என்று இருந்துவிட்டேன்.

நிம்மிதான் அடிக்கடி வாசலைப் பாத்தபடி சாப்பிடாம காவலிருந்தாள்.

பின்னேரம் இவர் வந்துவிட்டார். அவனக் காணயில்ல. நிம்மியின் முகத்தைப் பாத்திட்டு, "றொகான் மத்தியானம் வரயில்லையா?" எனக் கேட்டார்.

நான்தான் "இன்னமும் காணயில்லயுங்க" என்றேன்.

அவரும் பதற்றமானார்.

பொழுதாகியும் அவன் வராமல் போகவே எம் எல்லோரையும் பயம் பற்றிக்கொண்டது.

இவர் "நான் கராஜ் வரை போய் பாத்து வாறன்" என்று புறப்பட்டுப் போய் பதற்றமாய்த் திரும்பி வந்தார்.

"என்னங்க?" இது நான்.

"மாமா அவர் எங்க? ஏன் மத்தியானம் வரயில்லயாம்?" என்னை முந்திக் கொண்டு நிம்மியின் குரல்.

"அவன் இண்டைக்கு கராஜ்க்கே வரயில்லயாமே!"

எம்மைப் பெரும் பீதி ஆட்கொண்டது.

நிம்மி அழத் தொடங்கிவிட்டாள்.

இரவு சிவராத்திரியாகவே இருந்தது. விடிந்ததும் மூவருமாகவே அவன் கராஜ் வரையான பாதையிலுள்ள காவலரண்களில் அழுது குழறியவாறே விசாரித்தோம். எல்லா இடமும் கையையே விரித்தார்கள்.

றொகான் வந்தபாடாயில்லை.

எவரும் கண்டதாகவும் சொல்லவில்லை.

"எம் பிள்ளைகள் ரெண்டையும் பறிகொடுத்துட்டடமே!" என்றவாறு இவர் புலம்பிக்கொண்டிருந்தார்.

என் நிலமய எப்படி நான் சொல்வது? பெத்த வயிறு மட்டுமல்ல மனசும் கொதித்தது.

எமக்கு மட்டும் ஏன் இப்படித் துன்பங்களாகவே இருக்கின்றன? கர்த்தரே எம்மை ஏன் இப்படி வதைக்கின்றீர்? எனத் துவளத்தான் முடிந்தது.

நிம்மியைத் தேற்றவே முடியவில்லை.

சாப்பாடு தண்ணியுமில்லாமல் புலம்பியவாறே இருந்தாள். இவர் ஏசினால்தான் ரெண்டுபிடி சாப்பிடுவாள்.

எங்கு தேடித் திரிந்தும் றொகான் கிடைக்கவேயில்லை. செஞ்சிலுவைச் சங்கத்திற்குத் திரிந்தோம்; மனிதஉரிமைகள் ஆணைக் குழுவுக்கு நடந்தோம்; தமிழ்ப் பெடியளின்ர கட்சி அலுவலகங்களில் தவமிருந்தோம். ஆனால் காணாமல் போனவன் காணாமற் போனதுதான்.

நிம்மிக்கு யார் ஆறுதல் சொல்லுறது?

தனிய இருந்து அடிக்கடி அழுவாள். இரண்டு கிழமையிலேயே ஆள் பாதியாய்ப்போய் எலும்பும் தோலுமாகிவிட்டாள். கடைசியாய்ப் போகயுக்க அவன் கடனாக் கேட்டது இவள் கொடுத்தாளோ என்னவோ? அவன் வட்டியும் கொடுக்கயில்ல; முதலையும் கொடுக்கயில்ல.

கிழடுகள் நாங்கள் இருக்கிறம். இளசுகள் அவங்களப் பிரிச்சுக் கர்த்தர் அவனைப் பறிச்சிட்டாரே. அவன் எங்க இருக்கிறானோ? இல்லையோ? யோசிக்கவே இதயம் வெடிக்கிறது போல இருக்கும்.

எமக்கு ஏதோ ஆறுதலாக நிம்மியாவது இருந்தாள்.

இப்படியே நாலு மாதம் போயிருக்கும்.

நிம்மியின்ர பெரியம்மாவின் மகன் தினேசிடம் இருந்து ஒரு கடிதம் நிம்மிக்கு வந்தது. அதில, "யாழ்ப்பாணத்தில பிடிச்ச பொடியள் கொஞ்சப் பேர களுத்துறையில வச்சிருக்கிறாங்கள். வந்தாப் போய்ப் பார்க்கலாம்" என்று சொல்லியிருந்தான்.

நிம்மி இவரிட்ட "நான் போய்த் தினேசுடன் அங்கே சென்று பாத்து வரட்டா மாமா?" எனக் கேட்டாள்.

"தனிய என்னண்டம்மா?" என்றார் இவர்.

"அங்கே தினேஸ் வருவான் தானே மாமா. போய் ஒருக்காப் பாத்து வாறன்."

"சரி பிள்ளை, ஆனா இப்ப பிளேனில் போறது பயமல்லா?"

"அவரே இல்ல, இனி எதுக்கு மாமா பயப்பட வேணும்? இருந்தா என்ன? செத்தா என்ன மாமா? சனம் போகுதுதானே மாமா. அவங்கள் ஒண்டும் செய்யாங்கள்."

"சரி பிள்ளை. உன்னை மறிக்க எனக்கு மனசு இடந்தருகுதில்ல. சுகமாய் போய்ச் சேர்ந்து அங்க இருந்தா அவனையும் கூட்டிக் கொண்டு நல்லபடியா வந்து சேர்" என்றார்.

"நீயும் இல்லாட்டி நிம்மி, எங்கள தனிமையே கொன்று போடும்" என்று நான் பாசமாய்ச் சொன்னேன்.

ஆனால் என்ன அநியாயம்!

அவள் போன பிளேன் விழுந்திட்டுதாம். அவளையும் நாம் இழந்ததுதான் மிச்சம்.

எங்கட றொகான் மட்டும் கிடைக்கவேயில்லை. இதற்கு யாரொடு நோவது?

இவர்தான் மிகமிக மாறி விட்டார். எவ்வளவு சந்தோஷமான மனிசன். இப்படி அமைதியாக, சோகமாகி விட்டாரே. மற்ற இழப்புக்களை எப்படியோ தாங்கிய என்னால் இதைத் தாங்க முடியாதிருந்தது. இருவரும் தனிமையில் ஏதோ சாப்பிட்டு, படுத்து வாழ்நாள்களை வீணாகச் செலவாக்கிக் கொண்டிருந்தோம்.

இந்நிலையில் தான் அண்மையில் கரையோரப் பகுதியிலுள்ளவர்கள் இடம்பெயர்ந்து வேறிடங்களுக்குச் செல்லுமாறு அறிவித்தல்கள் பரவலாகப் பரவின. ஷெல்களும் விழ ஆரம்பித்தன.

"என்னங்க! நாங்க தள்ளிப் போய் எங்காவது இருப்பமா? எழும்பச் செல்லிட்டாங்களாம்" என்றேன்.

"என்ன பிலோமினா! எத்தனை தடவைதான் நாம் வாழ்க்கையில இடம்பெயர்ந்து கொண்டே இருப்பது?" என்றார்.

"என்னங்க செய்ய முடியும்? இழக்கக் கூடாததெல்லாம் இழந்திட்டம். வீடு வாசல், பொருள் பண்டம் இழந்தம்; எங்கட மகள, மகன, மருமகள இழந்தம்; நீங்க எங்கட கடல், எங்கட மண் என்று சொல்லுற இடங்கள இழந்தம்; சந்தோஷத்த இழந்து விட்டம்; நிம்மதியப் பறிகொடுத்தம், எல்லாப் பக்கத்தாலும் சனங்களால் நாங்கதான் இழப்புகளைச் சந்திக்கிறம். இனி எங்களிட்ட இழக்க எங்கட உயிர் மட்டுந்தான் இருக்கு. எங்களப்பத்தி யாரு சிந்திக்கிறாங்க, கவலைப்படுறாங்க? சீ........ என்....... ன..... வாழ்க்கையுங்க"

"சரி பிலோமிம்மா, இஞ்ச இருந்து நம்மள்ள ஓராளுக்கு ஒண்டு நடந்தா தாங்கேலாது. இனியும் இழப்புகள மனசு தாங்காது. வா! அரியாலைப்பக்கம் போய்க் கொஞ்ச நாள் இருந்திட்டு வருவம்."

பாசையூரில எங்கட வீட்டை விட்டிட்டு அரியாலையில றொகான் நடத்தின கராஜ்க்கு பக்கத்தில, அவனோட சேர்ந்து நடத்தின, அவன்ர சினேகிதன் வீட்டில தங்கியிருந்தம்.

ரெண்டு நாள் கழிய இவர் "வீட்டுப்பக்கம் போய்ப் பார்த்து வாறன்" எனறு போய்க் கவலயாய் திரும்பி வந்தார்.

"என்னங்க ஒரு மாதிரி வாறீங்க?" என்றேன்.

"பிலோமினா அங்க வீட்டில ஒரு சாமானுமில்லை. நிண்ட கோழியளயும் காணயில்லல. எங்கட சங்கக் கடையையும் உடைச்சுப் போட்டங்கள். இந்தக் கள்ளராலயும் பெரிய மோசமாக் கிடக்கே" என்றார்.

"அநியாயப்படுவார் எல்லாருமாச் சேந்து எங்களப் போட்டு வதைக்கிறாங்களே. கர்த்தரே! இதுகளுக்கெல்லாம் ஒரு விடிவு வராதா?" என்று ஆண்டவனைத்தான் நொந்தேன்.

இரவு வெளியில இவர் வாங்கு ஒன்றில படுத்துக் கிடந்தார். நான் குசினியுக்க புட்டுக் குத்திக் கொண்டிருந்தேன். திடீரெண்டு, "டும்... படார்." என்றவாறு இரு ஷெல்கள் வீட்டுக்கு மேலே விழுந்த மாதிரி சத்தம் கேட்டிச்சுது.

"ஐயோ ஆண்டவரே" எனக் கத்திக் கொண்டு வெளிய ஓடிவந்தா, இவர் வாங்கில்ல இருந்து கீழ விழுந்து, வயிறு, தலை, கால் எல்லாத்தாலயும் ரத்தம் பாய வயித்தப் பொத்தியபடி முனகிக் கொண்டிருந்தார்.

"ஐயோ! எங்களக் காப்பாத்துங்கோ... யாராவது ஓடி வாங்களேன்." எனக் கத்தியவாறு ஓடிப் போய்ப் பார்க்க, அவர் மயக்கமாகியிருந்தார். அவரின் தலையைத் தூக்கி என் மடியில வைத்துக் கொள்ள......

"மொக்கத்த.... மொக்கத்த....." என்றவாறு 'இவர்கள்' நாலைந்து பேர் வர, அயல்ச் சனமும் கூட 'இவர்களின்' வாகனத்தில் அவசரமாக அவர ஆஸ்பத்திரிக்கு கொண்டந்திட்டாங்கள்.

அங்க நிண்ட அயல் பெடியனொருத்தனைக் கெஞ்சி பின்னால நானும் அவன்ர சைக்கிளில ஆஸ்பத்திரிக்கு வந்திட்டேன்.

"ஸ்ரீபனோட வந்தது யாரு? ஏ! அம்மா.... ஸ்ரீபனோட வந்தது நீங்க தானே?!" என்ற அந்த நேர்ஸின் குரலுக்கு திடுக்கிட்டுத் திரும்பி நிஜ உலகுக்கு வந்தேன்.

"ஓம்.... ஓம்.... நான் தான்..... என்ன?" என்றவாறு பதற்றத்துடன் எழுந்து போக, ஒரு பேப்பர்த் துண்ட நீட்டியபடி."அவசரமாக இதில இருக்கிற மருந்து ரெண்டும் வாங்க வேணும். கெதியா வாங்கியிண்டு வாங்க. அத்தோட ரத்தமும் வேணும், டொக்டர் சொல்லி ஒரு பைந்த் ஏத்தியாச்சு, அதுக்கும் ஆயத்தம் செய்யுங்க."

"எனக்காரம்மா இருக்கினம்? ரத்தத்திற்கு நான் எங்கே போறது? இப்ப மருந்து வேண்டவும் என்னட்ட காசில்லையே! நான் என்ன செய்யிறது? ஆண்டவரே!" என்று நான் குழற....

"இதில நிண்டு கத்தாம கெதியா வாங்கி வாற அலுவலைப் பாருங்க." என்றவாறு கதவுக்குள்ளால தலையை நீட்டிக் கதைச்ச நேர்ஸ் உள்ளுக்க போயிட்டாள்.

யாரிட்ட நான் போய் கேக்கிறது? எனக்கார் இருக்கினம்? மல போல நம்பியிருந்த இவருக்கு இப்படியாயிட்டுதே?! இத யாரிட்ட சொல்லி நீதி கேக்கிறது?

நான் குழம்பி அழுதவாறு, யாரும் பாமசிக்காரங்களிட்ட கெஞ்சிக் கேட்டுப் பார்ப்போம் என எண்ணியவாறு,"கர்த்தரே அவர எப்படியாவது என்ட்ட மீட்டுத் தந்திடு." என்று செபஞ் சொல்லி பிரார்த்தித்து விட்டு, நாலடி எடுத்து வைச்சிருப்பன்.

"அம்மா! இஞ்ச நில்லுங்க." நேர்ஸின் குரல் புறத்தால கூப்பிட்டது. நின்று திரும்ப, "அம்மா! அவர் இறந்து விட்டார். டொக்டர்ஸ் முழு முயற்சி செய்தும் பலனில்லாமல் போட்டுது. 'பொடி'யைக் கொண்டு போக ஆயத்தப்படுத்துங்க." இடியொன்று செவிவழியாக இதயத்துள் பாய்ந்து இறங்க இதயம் சிதறிய தாய் உணர்ந்தேன்.

"என்னங்க!" என்ற குரல் மட்டும் பலமாய் வெளிப்பட படீரென விழுந்தேன்.... இதென்ன வாய், மூக்கால் ரத்தம் கசிகிறதே. ஆ.... என் உணர்வுகள் எல்லாம் மங்குகிறதே. என்னால் மூச்சுவிட முடியாதிருக்கிறதே. எதுவுமே எனக்கு.... தெரி....... ய...... வி...... ல்.........!. *

குறுங்காவியம்



## பசிப் பிணி மருத்துவன்

-புலவர் ம.பார்வதிநாதசிவம-

அங்கம்:- இரண்டு

"ஏடென்றால் என்னென்றும் அறியா வண்ணம்
எம் பெற்றோர் வாழ்ந்திட்டார்!" என்றே நீங்கள்
கேடொன்றும் மற்றவரைக் கூறல் வேண்டாம்!
கிளக்கரிய கல்வியினைக் கற்பதற்கே
நாடென்றும் வயதென்றும் தடைகள் இல்லை
நல்லார்வம் ஒன்றிருந்தால் எளிதாம் யார்க்கும்
பிடெய்த வேண்டுமெனில் இன்றே நீங்கள்
கற்றிடுவீர்! பிள்ளைகட்கும் அதுவே வேண்டும்!

உலகிலுள்ள பலவாய மொழிகளுள்ளும்
உயர்ந்த மொழி நம்தமிழே! அதைக் கற்காமல்
நலமிழந்து வாழ்வதுவோ? இதனைப் பற்றி
நன்கேநீர் சிந்திப்பார்த்ததுண்டோ?
பலகலையும் நம் சொந்தம் உலகம் காணாப்
பண்பாடும் நம் சொந்தம் சுவைகுன்றாத
இலகுபல நூல் சொந்தம்! இதனை யெல்லாம்
இனியேனும் நீர் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

அற மிதென்றும் மறமிதென்றும் எடுத்துக் கூறும்
அற்புத நூல் திருக்குறளும் நமக்குச் சொந்தம்!
உறுவிதியின் ஆற்றலினை விளக்கிக் கூறும்
உயர்நூலாம் சிலம்பும்தான் நமக்குச் சொந்தம்!
திறமை தரும் போர் நூல்கள் நமக்குச் சொந்தம்
தித்திக்கும் காதல் நூல் நமக்குச் சொந்தம்!
பெறலரிய இலக்கியமாம் செல்வம் பெற்றுப்
பின்னிவற்றைக் கற்றில மேல் பிறவி ஏனோ?

அருவி ஒலி தரும் இன்பம்! மழலை இன்பம்!
அன்பான காதலியின் இதழின் இன்பம்!
பெருவளம் செய் நல்லாற்றில் நீந்தும் இன்பம்!
பேரெழில்கொள் சோலையிலே உலவும் இன்பம்!
தருவெல்லாம் தருகின்ற கனியின் இன்பம்!
தக்கசுவைப் பொருளெல்லாம் நல்கும் இன்பம்!
பொருவில் தமிழ் இன்பத்தின் பின்னே என்ற!
புதுமையினை அறியாது வாழ்தல் நன்றோ?

நாளை முதல் தமிழ் கற்ற புலவர் தம்மை
நன்கிங்கே அனுப்பிடுவேன் அவர்பால் நீங்கள்
வேளைதோறும் கற்றிடுங்கள் கருப்பஞ்சாற்றின்
மிகுசுவையை அறிந்திடுங்கள்! என்றும் சொன்னான்
"ஏழைகள் பால் அன்பு வைத்த பெரியோய் நீதான்
ஈதலினால் வள்ளல் எனும் சிறப்புப் பெற்றாய்
நாளை கல்வி நமக்களிக்கும் காரணத்தால்
நமக்கெல்லாம் நீ இறைவன்தானும் ஆவாய்"

என்று ரைத்தார் மக்களெல்லாம் இதனைக் கேட்டே
இன்புற்ற பண்ணனவன் தன் வீட்டுக்குச்
சென்றிட்டான்! அப்போது மதியவேளை
திரண்டிருந்தார் ஏழையர்கள் அவன் தன் வீட்டில்
"நற்றன்பு மக்களே! பசியை நீக்க
நாடி என்பால் வந்தீர்கள் உவகை உற்றேன்"
என்று ரைத்தான் குரல் கேட்ட ஏவலாளர்
ஏழையரை உணவளிக்க இருத்தினார்கள்.

முதியோர்கள் பலர் இருந்தார்! உழைத்தல் ஆற்ற
முடியாதோர் பலர் இருந்தார்! முன்வராத
புதியோரும் அங்கிருந்தார்! சுற்றத்தோரால்
புறக்கணிக்கப்பட்டோரும் அங்கிருந்தார்!
இதயமெலாம் ஆண்டவனை இருத்தும் பண்ணன்
இவர் நடுவே நின்றிட்டான்! ஏவலாளர்
அதுபோதில் எல்லோர்க்கும் உணவிட்டார்கள்!
அன்பாகப் பண்ணன் 'உண்ணும்! உண்ணும்!' என்றான்.

வயிறார உண்ட இளம் சிறுவர் தாமும்
மற்றுளரும் பசிக்களை தான் தீர்ந்ததாலே
உயிராக விளங்குகின்ற பண்ணனுக்கே
உரையாலும் குறிப்பாலும் நன்றி காட்டி
நயமாக மிகுதிச் சோற்றினை உருட்டி
நல்லொழுங்கிற் சென்றார்கள் இந்தக் காட்சி
அயராத எறும்பு மழை வருதல் எண்ணி
அதன் முட்டை கொண்டு செலல் போன்றதாலோ

இரவென்று வந்தாலும் பகல் வந்தாலும்
எப்போதும் சோறளிக்கும் பண்ணன் வீட்டில்
பெருவெள்ளம் வருவது போல் பசித்தோர் கூட்டம்
பெருகிக் கொண்டே இருக்கும்! பழுத்ததான
மரமொன்றிற் பறவையின ஆரவாரம்
மண்ணிடையே கேட்பது போல் ஒலிதான் கேட்கும்!
உரமுடையான் பண்ணன் போற்பலர் இருந்தால்
ஓடி ஒளித்திடப் பசிதான் இடம் தேடாதோ?

வற்றா ஆற்றினைக் கடந்தும் வளர் மரங்கள்
வகை வகையாய் ஓங்கிய காட்டினைக் கடந்தும்
கற்றோரும் வியக்கின்ற புலமை வாய்ந்த
கவி ஒருவன் வந்திட்டான் பண்ணனே நீ
அற்றோர்க்கே உதவுகின்ற வள்ளல் தம்முள்
அதிசயக்கத்தக்கவன் காண் அதனால் அன்றோ
சற்றேனும் பிறரை வியவாத சோழன்
தமிழ்க்கவியால் நின் புகழைப் பாடினானே!

(தொடரும்)

# மின்மினிகளும் நட்சத்திரங்களென......

ச.ஆனந்தி



வெண்பனித்துகள் உருகும் வேளையில் நிறம் வெளிறுவது போலக் காலை தன் வெண்மையை இழந்து கொண்டிருந்தது. அமைதியான பனிமூட்டம் கொஞ்சம் கொஞ்சமாய்உருமாறிக்கொண்டிருந்தது.

காலை மாற்றி மாற்றி ஊன்றிக் கொண்டாலும சலிப்பு மறைவதாய்த் தெரிவதில்லை.வலத்தோளில்தூங்கி வழியும் குழந்தைவேறு. குழந்தையின் வெளிறியிருந்த வெற்றுடம்பை முந்தானையால் போர்த்தாள் லட்சுமி.

'சரியாய் அவரையே உரிச்சு வைச்சிருக்குது' நெஞ்சம் வேதனையில் சுருங்கியது. 'இந்த வெள்ளைத் தோலும், காதுக்குக் கீழ மச்சமும்....ஹும்' கண்களில் நீர் திரையிட்டது. கலங்கிய கண்களினூடாகக் கண்முன் நின்ற மாளிகை நடுங்கிக் குழம்பியது. கண்ணைத் துடைத்து விட்டு மீண்டும் பூட்டியிருந்த வெளிக்கதவையே பார்த்துக் கொண்டு நிற்கத் தொடங்கினாள்.

இன்னும் 'அம்மா' சமையலறையில்தான் இருப்பாள் போலிருந்தது. வந்தவுடனேயே லட்சுமி சீனனிடம் கேட்டிருந்தாள். 'அம்மா'வை உடனடியாக ஒருதரம் சந்திக்கவேணுமென்று. பூனைக் கண்ணும், மூன்றடி உயரமும் வழங்கிய அப்பெயருள்ள சீனன், வீட்டுக்குள் ஒரு தரம் போய் விட்டு வந்தான். முற்றத்தில் நின்ற 'ரொமி'க்கு 'பிஸ்கட்' போட்டபடியே "அம்மா கையில வேலையாய் இருக்கிறாவாம்; வாறாவாம்" என்றான். பிறகு ரொமியையும் கூட்டிக்கொண்டு போய்விட்டான்.

அப்பொழுதிருந்தேலட்சுமி நின்று கொண்டிருக்கிறாள். இடையில் ஒருதரம் வெளிக்கதவு திறபட, ஆவலாய் எட்டிப்பார்த்தாள். அது அம்மாவின் மூத்த மகன். இவளின் இருப்பையே கவனியாதவன் போலப் பிரஷும் நுரையுமாய் இவளை நோக்கி வந்தான். தனக்கு ஏதோ சொல்ல வருகிறானோவென நினைக்கும் போதே இவளுக்கு மிக அருகாக இருந்த கானுக்குள்வந்து எச்சிலைத் துப்பிப் போய்விட்டான்.

அவன் போன பிறகு குழந்தையின் இடக்கையில் தெறித்திருந்த வெள்ளை நுரைத்துளியை சேலைத் தலைப்பால் துடைத்தபடி அவசரமாய் இரண்டடி தள்ளி நின்றுகொண்டாள்.

'எவ்வளவு நேரம் போயிருக்கும்' நெஞ்சுள் வினாகொக்கியிட்டது. இலைகளுக்குக் கறுப்புநிற ஓரம் கட்டி ஒளி உள்நுழைகிறபோதே இங்கு வந்துவிட்டது ஆயாசத்தைத் தோற்றுவித்தது. 'கண்ணம்மா பாண் வேண்டியிருக்கும்; போய் ஒரு தண்ணி வைச்சுக் குடுத்தாத்தான் அதுக்கு நடக்க ஏலும். சும்மா தூரமே, இரண்டரை மைல் வரும். அவர் இருக்கேக்கை கோயிலுக்குக் கூட அதை நடக்க விடுறேல்லை.' ஊசியாய் நினைவுகள் உறுத்தின. சிறிதாய்க் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

'போட்டிக்கோ'வில் இருந்து ஐயாவின் 'ஸ்கூட்டர்' புறப்படுவது தெரிந்தது. "நல்ல காலம் நான் பின் வாசல்ல நிற்கிறது. இல்லாட்டி சகுனம் பாக்கிற ஐயாவுக்கு இண்டைக்கு..." நினைவுத் தொடர் அறுந்தது.

சீனனின் குரல் கேட்டது. 'இன்னும் வரேல்லையே' ரொமியின் காலைக்கடன் முடிப்பித்துக் கூட்டி வந்து கொண்டிருந்தான். ஒன்றுமே சொல்லவேண்டும் போல் இருக்கவில்லை லட்சுமிக்கு. மௌனமாய் நின்றாள். இவளுக்குக் கேட்கும்படி "செவிட்டுப் பிறவியள்..."என்று முணுமுணுத்தபடி போய்விட்டான்.

"என்ன லச்சுமி கனநேரமே...." சரீரம் தூக்கும் தொழில் செய்தபடி வந்தாள் 'அம்மா'.

"என்ன காலங்காத்தாலை...?" சற்று எட்டியே நின்றாள்.

"இடிப்புக் கூலி மிச்சம் தாறதெண்டனியள்..."

"ஓ! அதுக்கேன் விடியிற நேரத்தில வந்தனி....?"

"அவசரம் அம்மா; அதுதான்."

"என்ன அப்பிடி அவசரம்"

"பள்ளிக்கூடத்தில ஏதோ கண்காட்சிக்குக் கூட்டிக்கொண்டு போகினமாம். அம்பது ரூவா. இண்டைக்குத்தானாம் கடைசி. அதுதான் வந்தனான்..."

"கண்டறியாத கண்காட்சி. உதுகளுக்குக் காசைக் கொட்டி ஏன் பிள்ளையை நாசமாக்கிறாய்..."

"இல்லை அம்மா. இது கல்விக் கண்காட்சியாம்..."

"என்னவோ...?"முணுமுணுத்தபடி உள்ளே சென்று திரும்பினாள்அம்மா.

"இந்தா அறுவது இருக்கு"

"இன்னும் பதினைஞ்சு ரூபா தாங்கோ அம்மா. ஊரில குடுக்கிறதத்தான் கேக்கிறன்" நைந்த குரலில் சொன்னாள்.

"ஊரைக் கேட்டே நான உனக்கு வேலை தாறனான்...?"

"இல்லையம்மா...."

"சரி... சரி... எனக்கு வேலை இருக்குது போட்டுவா..."

லட்சுமி கேற்றடியைத் தாண்டும் போது 'அம்மா'வின் உரத்த குரல் காதைக் உரசியது. "இந்த றோசா 'பூவில்லாமல் பாக்க அந்தரமாக் கிடக்கு இண்டைக்கு ஒரு போத்தல் மருந்து வாங்கி வா" திரும்பிப் பார்த்தாள். சீனன் தலையாட்டி ஆமோதிப்பது தெரிந்தது. விடுவிடென நடக்கத் தொடங்கினாள்.

வாசலில் கண்ணம்மா நிற்பது தூரத்திலேயே தெரிந்தது. 'சாப்பிட்டாளோ தெரியேல்ல' கால்களை எட்டி வைத்தாள். 'கோடை நிலத்தில பெய்யுற மழை மாதிரி பிள்ளையின்ர படிப்புக்குச் செலவழிக்கிறது வீணாகப் போகாது' நெஞ்சில் ஒரு திருப்தி.

"அம்மா, நான் போட்டுவாறன்..." வாறுத்துத் தொங்கும் செருப்பினுள் காலை நுழைத்தாள் கண்ணம்மா. குடிசையோரமாய் அமர்ந்து முந்தானையால் முகத்தைத் துடைத்தபடி "சாப்பிட்டியே பிள்ளை" என்றாள்.

"இந்தா இதில அம்பது ரூபா இருக்கு... இண்டைக்குக் காசைக் கட்டிவிடு" கையில் தாள்களை நீட்டினாள்.

"தம்பிக்கு மருந்து வாங்கவேணுமெல்லே அம்மா....?"

"அது பிறகு வாங்குவம். கண்காட்சி பிரயோசனமாயிருக்கும். இதைப்பிடி. இவனுக்கு இப்ப கடுமையில்லைத்தானே..."

"வேண்டாம் அம்மா..."

"நேரம் போட்டுது. என்னட்டை வேறை காசிருக்குது; 'அம்மா' தந்தவ நீ போட்டு வா"

"உண்மையா இருக்கே அம்மா..?"

"ஓம் பிள்ளை"

"அப்ப நான் போட்டுவாறன் அம்மா. தம்பியை மருந்துக்குக் கொண்டுபோங்கோ..." இரட்டைப் பின்னல் துள்ள ஏறத்தாழ ஓடினாள் கண்ணம்மா.

கையிலிருந்த பத்து ரூபா நோட்டை விரக்தியாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள் லட்சுமி. குழந்தையின் உடலில் சூடு கூடியிருப்பது போலிருந்தது.

*   *   *

"காசு கட்டாதவை நாளையிண்டைக்கு வரத் தேவையில்லை." நாகமணி ரீச்சரின் குரலை இடைமறித்தது ஒரு பிஞ்சுக் குரல்.

"நான் காசு கொண்டு வந்திட்டன் ரீச்சர்"

"ஆர் கண்ணம்மாவே...? இண்டைக்கே கொண்டு வந்தனி...?"

"ஓம் ரீச்சர் இண்டைக்குத்தான் கடைசியெண்டு சொன்னனியள்"

"ஓமோம்; சொன்னனான்தான். காசை கொண்டா..."

"இந்தாங்கோ ரீச்சர்"

நாகமணி ரீச்சர் தாள்களை எண்ணிப் 'பாக்'கினுள் போட்டா.

"என்ரை பேர் பதியேல்லை ரீச்சர்... கண்ணம்மா. தானா கண்ணம்மா"

"அதெல்லாம் எனக்குத் தெரியும். நீ போய் இரு."

கண்ணம்மா மகிழ்வாய் அமர்ந்த போது வாசலில் தேவி ரீச்சர் நிற்பது தெரிந்தது.

"ஸ்டாவ் மீற்றிங் எல்லே ரீச்சர் வாறியளோ..."

'ஓமோம், மறந்துபோனன். இதுகளை மேய்கிறதிலை எல்லாம் மறந்து போகுது." இருவருமாக வகுப்பைவிட்டு வராண்டாவில் இறங்கியபோது "உங்களுக்கொரு சந்தோசமான செய்தியெல்லே ரீச்சர்" முகம் மலரத் தேவி ரீச்சர் சொல்ல, நாகமணி சலித்துக் கொண்டா.

"உந்த எருமைகளோட உழலுற எனக்கு என்ன சந்தோசம் வரப் போகுது?"

"தவறாம வந்து ஒழுங்கா வகுப்புக்குப் போறதிலை நீங்கள் தானாம முதலாவதா தெரிவுசெய்யப்பட்டிருக்கிறியள். ஆசிரியர் தினத்துக்கு உங்களைக் கௌரவிக்கப்போகினமாம்"

நாகமணி ரீச்சர் நின்றேவிட்டா.

"உண்மையாய்த்தான் சொல்லுகிறீரோ..?

"உண்மையாத்தான்...."

"படிப்பிக்கிறதைவிடும். என்னை மாதிரித் தவறாமல் வேற யார் கிளாசுக்குப் போறவையள்...?" நாகமணி ரீச்சர் தனக்குக் கிடைக்கப் போகிற கௌரவத்தைத் தானே நியாயப் படுத்துகிற மாதிரி தொடர்ந்து கதைத்துக்கொண்டே வந்தா. தேவி ரீச்சருக்கு மௌனமே சிறந்த பதில் போலப்பட்டது. அவவை ஆமோதிப்பதுபோல் மௌனமாய் நடந்தா. ஹோல் வந்துவிட்டது. இன்னும் மீற்றிங் தொடங்கியிருக்கவில்லை. ஹோல் வாசலில் கண்காட்சிக்கான விளம்பரம் பெரிதாக ஒட்டப்பட்டிருந்தது.

"எக்ஸிபிஷனுக்கான வேலையெல்லாம் முடிச்சுப்போட்டியளே ரீச்சர்" தேவி ரீச்சரின் கண்கள் விளம்பரத்தை ஆராய்ந்தன.

"ஓமோம்; நான் நேற்றே முடிச்சிட்டன். பேரெழுதிப் போமும் அனுப்பிப் போட்டன்"

"அப்ப நான் உங்கட வகுப்புக்கு வரேக்கை ஒரு பிள்ளை காசு தந்துதே..."

"ஓமோம்; அது ஒண்டு. இவ்வளவு நாளும் விட்டுவிட்டு இண்டைக்குத்தான் காசு கொண்டு வந்தது..."

"போம் அனுப்பியிருந்தா இனி ஒண்டும் செய்யேலாதே!"

"செய்யேலாதுதான். அது வலுசுழி. உண்மையைச் சொன்னா ஆயிரம் கேள்வி குறுக்க கேக்கும்..."

" .............. "

"இப்ப ஐம்பதுரூபா பெரிய காசே? அதுகளின்ர வீட்டில ஒருநாள் 'குடி'க்கு காணாத காசு தானே...." நாகமணி ரீச்சர் தொடர்ந்தும் ஏதோ சொல்லிக் கொண்டு போனா. தேவி ரீச்சருக்கு எங்கோ ஒரு மூலையில் இதயம் வலிப்பதாய் ஓர் உணர்வு. தூரே தெரிந்த மைதானத்தைப் பார்த்தா. அலட்சியமான, கொஞ்சம் வலிமையுள்ள காற்றாக இருக்க வேண்டும். மண்ணை வாரி எத்தி வெளி மண்டலத்தைத் தூசாக்கிக் கொண்டிருந்தது. *

# "சொல்லும் சொல் கேட்டி சுடர் இழாய்"

கற்றறிந்தோர் ஏத்துங் கலித்தொகையுள், இரண்டாம் பிரிவில் இடம்பெறுவது குறிஞ்சிக்கலி, இஃது இருபத்தொன்பது பாடல்களால் அமைந்தது. இதனை 'வெறுத்தகேள்வி, விளங்கு புகழ்க் கபிலர்' என்று போற்றப்படும் சங்கப்புலவர் யாத்துதவினார்.

கபிலரைப்பற்றி, முன்பு அறிந்துள்ளோம். இவர் பழைய பாடல்கள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் முத்திறத் தொகைகளுள் இடம்பெற்றுள்ளன. கபிலர் முத்தமிழ்த்துறையும் முறை கண்டுணர்ந்தவர். அதனை 'முத்தமிழ்க் கபிலர்' என்னும் தொடர் குறிக்கும்.

கபிலர் வேள் பாரியின் கெழுதகை நண்பர்; பாரியின் அவைக்களப் புலவர்; பரணர் என்னும் பழம்புலவருடன் நட்புரிமை கொண்டவர். அதனால் 'கபிலபரணர்' என்றும் கூறப்பட்டவர்.

இவர் பாடல்கள் சொற்சுவை, பொருட்சுவை, இலக்கியநயம் மிக்கவை. இயற்கை எழிலை இயைத்துக் கூறும் இவர் அமையம் வாய்க்கும் வழியெலாம் வாழ்வியலுக்கு வேண்டும் விழுமியங்களைக் கூறாமற் கூறிச் செல்பவர். குறிஞ்சிக் கலியுள் வரும் ஒவ்வொரு பாடல்களும் செஞ்சொல் ஓவியங்களாகத் திகழ்கின்றன.

இன்று, குறிஞ்சிக் கலியுள் வரும் சொல்லோவியம் ஒன்றைக் காண்போம். அஃது 'ஒன்று இரப்பான் போல்' என்று தொடங்கி 'நெஞ்சே' என்று நிறைகின்றது. (குறிஞ்சி11)

தேன்கூடு

ஆம். ஆணெழில் அண்ணல் ஒருவன் ஆயிழை ஒருத்தியைக் காதலித்தான். அவளும் காதலித்தாள் காலம் நீண்டது; கருமம் நிறைவெய்தவில்லை. காதலியின் ஆருயிர் தோழியின் உதவியை அவன் நாடினான்; அவளும் நிறைவேற்றி வைப்பதாக ஒப்புதல் அளித்தாள். தோழி தன் தலைவியிடம் வருகிறாள். இருவரிடையேயும் உரையாடல் தொடர்கிறது.

''அணிகலம் பூண்ட அரிவையே! வீதியில் இளைஞன் ஒருவனைக் கண்டேன். ஏதோ ஒன்றை இரப்பான் போல் நிற்கின்றான். பணிவுடன் சில பகரத் தொடங்கினான். அம்மம்மா அவன் சாதாரண பேர்வழி அல்லன்; உலகைக் காக்கவல்ல மதுகை – வன்மை – உடையவன். கல்வி கேள்விகளில் வல்லாரை வழிபட்டு, உயர்ந்த உண்மைகளை அறிந்தான் போல் தோன்றுகின்றான். அடக்கம் மிக்கவன். பார்வைக்கு, வறியோரின் பசித் துன்பம்களையும் வள்ளல் போல் – ஈகைக் குணத்தால் மிக்கவன்போல் – தெரிகிறான். மிக்க பெரும் பொருளைத் திரட்டவல்ல வன்மையும் கொண்டவன். இறப்பவும் உயர்ந்த அவன் ஆண்தகை விட்டுச் சொல்லும் சொல் கேள்!''

''நறுநிதால்! அவன் நின்னை இன்றி உயிர்வாழ மாட்டானாம்; பாவம்! சாகத்துணிந்தான் போலும். அவன் சொல் நம்பற்கு உரியதா? யான் மனம் மாறினேன் பிறர்க்கும் இவ்வாறு ஆகுமோ!''

''அவன் பெரிதும் வருந்துகிறான். நீ அதனை அறிகிலை போலும். எம்போல்வாராலும் அவன் கூறும் சொல்லின், இயல்பை அறிந்து முடிவுகாண்டல் ஒல்லாதே! இயையாதே!''

''நீ, தன்னைக் கைவிட்டால், வாழலேன் என்கின்றான் அயலான் ஒருவனுக்காக, நான் வருந்துகிறேன். ஊரார் என்னைப் பேதை என்னாரோ? ஆம் நாம் இருவோரும் கூடி ஆராய்வோம்.....''

''ஆமாம்; நாண்துறந்து, அவன்முன் சென்று 'நில்லாதே போ' என்று துரத்துவது நன்றன்றே! மேலும், 'அயலான் ஒருவனை இவர்கள் ஏற்றுக் கொண்டனரே!' என்று ஊரார் இழித்துக் கூறுவது எம் பெண் தன்மைக்குப் பொருந்தாதே!''

தோழி, சுருதியை மாற்றுகிறாள்! ''அவன் நம்மைக் கைப்பற்றத் துணிந்து விட்டான். நெஞ்சே! எம்பெருமாட்டி இதற்கு இசைந்திலள். நீ அவனிடம் சென்று; நான் கூறுவது போல் குறிப்புக் காட்டி – 'அவன் மேஎவழி மேவாய்' – அவன் விரும்பும் இடத்திற்குச் செல்!''– என்று கூறியமைகின்றாள். இலக்கண நூலோர் இதனை இடம்பெற்றுத் தழாஅல் என்பர்.

இனி, பாடலின் சில வரிகளையாவது காண்போம்

"ஒன்று இரப்பான்போல் எளி வந்தும் சொல்லும், உலகம்
புரப்பான் போல்வதோர் மதுகையும் உடையன;
வல்லாரை வழிபட்டு ஒன்று அறிந்தான் போல்
நல்லார்கண் தோன்றும் அடக்கமும் உடையன்;
இல்லோர் புன்கண் ஈகையில் தணிக்க
வல்லான் போல்வதோர் வன்மையும் உடையன்;
அன்னான் ஒருவன் தன் ஆண்தகை விட்டு என்னைச்
சொல்லும் சொல் கேட்டி சுடர்இழாய்!............
..........................................................................வாவெனக்
கூறுவேன போலக் காட்டி
மற்று அவன் மேஎவழி மேவாய் நெஞ்சே" (குறிஞ்சிக்கலி11)

இனி, இப்பாடல் கொண்டு இற்றை நாளில் இளைஞர்கள் பால் நாம் வலியுறுத்தற் பாலதாம் விழுமியங்கள் எவை எனச் சிந்திப்போம்.

## சிந்திப்போம் செயற்படுவோம்

எவருக்கும் வலிமை என்பது வேண்டப்படுகின்றது. அவர்கள் கல்வி கேள்விகளில் மிக்காரிடம் சென்று, உயர்ந்த உண்மைகளை அறிந்து கொளல் அவசியமாகின்றது. தன்னடக்கம் மிக மிக வேண்டப்படுகின்றது. ''காக்க பொருளா அடக்கத்தை – ஆக்கம் அதனின் ஊங்கு இல்லை உயிர்க்கு'' என்பது வள்ளுவர் வாய் மொழி அன்றோ!

ஈகைக் குணத்தை இறுகப் பற்றுதல் வேண்டும். ''வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை, மற்று எல்லாம் – குறியெதிர்ப்பை நீரது உடைத்து''என்பதைப் புரிந்துணர்தல்வேண்டும். குறியெதிர்ப்பை அளவு குறித்து வாங்குவது ஆண்டகைமை பேணுதல் வேண்டும். மகளிரும் நாண் எனும் நல்லணியைப் பணுதல்வேண்டும். ''உயிரினும் சிறந்தன்று நாணே! நாணினும் செயிர் தீர் கற்புச் சிறந்தன்று''என்று ஆசிரியர் தொல்காப்பியர் கூறுவர். (சிறந்தன்று– சிறந்தது)

அறத்தொடுபட்ட வாழ்வு வாழ்ந்து ஆரா இன்பம் துய்ப்போம்.

(தொடரும்) *சிகண்டியார்.*

# அடிக்கடி சர்ச்சைகளில் சிக்கும் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா

நீதிமன்றங்களையும் நாடாளுமன்றத்தையும் தேவைப்படின் இழுத்து மூடும் அதிகாரம் அரசியல்வாதிகளுக்கு உண்டென்றும் அதற்கான ஆணையை மக்கள் தங்களுக்கென தங்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளான அரசியல்வாதிகளுக்கு வழங்கியுள்ளார்கள் என்றும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அமைச்சரவையின் முன்னணி அமைச்சரான எஸ்.பி.திஸநாயக்கா பொது வைபவமொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்ததன் மூலம் நீதித்துறையினரதும் நீதிபதிகளினதும் கடும் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டது மட்டுமன்றி அவர்களின் பலத்த கண்டனங்களுக்கும் உள்ளாகியதுடன் மிகவும் இக்கட்டான ஒரு நிலைமைக்கும் தள்ளப்பட்டுள்ளார்.

சந்திரிகா குமாரதுங்கவின் அமைச்சரவையில் கடும் செல்வாக்கைக் கொண்ட அமைச்சர்களில் முதன்மையாகக் கருதப்படுபவரும் ஜனாதிபதியின் பெரும் நம்பிக்கைக்கு உரியவருமான இவரது நடத்தை அண்மைக் காலத்தில் பல்வேறு தரப்பட்ட துறையினராலும் அடிக்கடி விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

சமுர்த்தி, இளைஞர், விவகார விளையாட்டுத் துறை அமைச்சரான இவர் கடந்த இரண்டு வருட காலங்களுக்கு முன்னர் இலங்கையின் ஒலிம்பிக் ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜயசிங்காவுடன் தொடர்புடைய ஒரு நடத்தைப் பிரச்சினை காரணமாக ஊடகவியலாளர்களினதும், எதிர்க்கட்சியினரதும் கண்டன விமர்சனங்களுக்கு ஆளாகியிருந்தார். இதனால் மேற்கொண்டு தனது தடகள விளையாட்டுக்களை இலங்கைக்காக நடத்துவதில்லை என்று கூறி வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க நாட்டைவிட்டு வெளியேறி அமெரிக்காவில் தனது விளையாட்டைத் தொடருமளவுக்கு அந்தப் பிரச்சினை பூதாகார வடிவானது.

இதன் பின்னர் வடமேல் மாகாண சபைத் தேர்தலின்போது குண்டர்களைப் பயன்படுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்களைத் தாக்கினார் என்றும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் நாவின்ன வெற்றி பெற உதவினார் எனவும் எதிர்க்கட்சி அங்கத்தவர்களால் சாடப்பட்டவர். ஆனாலும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அமைச்சரவையின் மிகவும் சக்திவாய்ந்த, துடிப்பான அமைச்சராக இவர் ஒருவரே விளங்கிவருகிறார். இதன் பின்னர் நடைபெற்ற ஏனைய மாகாணசபைத் தேர்தல்களாக இருந்தாலும் சரி எவ்வகையிலாவது பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கமும் ஜனாதிபதியும் வெற்றி பெறச் சகல வழிகளிலும் முன்னின்று அயராது உழைத்த ஒரேயொரு இளைய அமைச்சர் இவரேயாவார்.

அமைச்சர் திஸநாயக்கா கடந்த பெப்ரவரி 29 ஆம் திகதி இலங்கைக் கட்டிடக் கலைஞர்கள் ஒன்றியத்தில் கலைஞர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

இந்தநாடு யுத்தத்திற்காய் பெரும் தொகையினைச் செலவழித்து வருகிறது. எமது அரசாங்கத்தின் கருத்துப்படி எம்போன்ற சிறியநாடுகளுக்கு இவ்வாறான செலவினங்களுக்கு மீண்டும் மீண்டும் இடமளிக்க முடியாது. இப்போது நாம் இதற்கென தெளிவான ஆனால் உண்மையான ஓர் அரசியல் தீர்வொன்று அவசியம் என்பதை உணர்ந்துள்ளோம். அல்லாவிடில் இந்தியா போன்ற அயல்நாடுகளும் உலகநாடுகளும் இதுபோன்ற தனியான இராணுவத் தீர்வு மூலம் மட்டுமே இப்பிரச்சினைக்குத் தீர்வினைக் காணமுடியும் என்ற நிலைப்பாட்டில் எம்மைத் தொடர்ந்து செல்ல அனுமதிக்கமாட்டா.

ஏறக்குறைய 73 நாடுகளில் இனரீதியான, மொழிரீதியான பிணக்குகள் காணப்பட்டு அவற்றில் 52 நாடுகள் ஏற்றுக் கொள்ளக்கூடிய அதிகாரப்பரவலாக்கலின் மூலம் தீர்வு கண்டுள்ளன. பதினாறு நாடுகள் பிரிந்து சென்று விட்டன. மிகுதி நாடுகளில் இப்பிரச்சினை தொடர்ந்தும் நிலவுகின்றது. ஆனால் எமக்கு எமது அரசமைப்பின் அடிப்படையிலும் நீதித்துறையின் அடிப்படையிலும் நாடாளுமன்றத்தில் இவற்றை அமுல்படுத்த எவ்வித அதிகாரங்களும் இல்லை. ஆனால் எமது கடந்தகால தேர்தல் விஞ்ஞாபனங்களின் போது நாம் எமது மக்களிடம் இவற்றைத் தெளிவாகக் கூறி அதிகாரப் பரவலாக்கலின் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்க ஆணையும் அனுமதியும் கேட்டிருந்தோம்.



எமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலம் இல்லாவிட்டாலும் இந்தச் சீர்திருத்தங்களைச் செய்ய எமக்கு ஆணை தரும்படி மக்களிடம் விளக்கமாகக் கேட்டிருந்தோம். ஆகவே எம்மை மீண்டும் தெரிவு செய்ததன் மூலம் மக்கள் எங்களுக்கு இந்த ஆணையை வழங்கியுள்ளார்கள் என நாம் பரிபூரணமாக நம்புகிறோம்.

இப்போது நாம் மேற்கொண்டு வரும் பேச்சுவார்த்தைகளின் மூலம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு உள்ளேயும் மற்றும் தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளுடனும் 99 வீதமான பிரச்சினைகளில் உடன்பாடு ஒன்றைக் கண்டுள்ளோம். அடுத்து ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனான பேச்சுவார்த்தைகளின் போது மீதமுள்ள பிரச்சினைகளுக்கும் வேற்றுமைகளுக்கும் உடன்பாடொன்றைக் கண்டு கொள்வதன் மூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவோம் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

எதிர்வரும் மே மாதமளவில் புதிய அரசமைப்புச் சீர்திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதன் சம்மதத்தையும் பெற்றுவிடுவோம் என எண்ணுகிறோம். அப்படி மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அங்கு பெற முடியாதுவிடின் சிறிது காலத்திற்கு நாடாளுமன்றத்தை அடித்து மூடி - தேவைப்படின் நீதிமன்றங்களையும் மூடி - ஒரு புதிய அரசமைப்பை நடைமுறைப்படுத்த முயல்வோம். அப்பொழுது அங்கு ஏதாவது சட்டரீதியான சர்ச்சைகளும் வாக்குவாதங்களும் எழக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. அவை எவ்வாறாயினும் சரி நாம் புதிய அரசமைப்புச் சீர்திருத்தத்தை நாட்டில் அமுல்படுத்துவோம். யாராவது நீதிபதிகள் இதனுடன் முரண்படுவார்களாயின் அவர்கள் வீடு செல்லலாம் - என்றார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் இவரது இப்பேச்சு நாடாளுமன்றத்தையும் நீதிமன்றங்களையும் இலங்கையின் நீதித்துறையையும் அவமதித்துள்ளதா என உச்ச நீதிமன்றம் விசாரணைசெய்து வருகின்ற பொழுது அமைச்சர் திஸ்நாயக்கா மீண்டும் கடந்த 3 ஆம் திகதி கம்புறுப்பிட்டியவில் தேசிய விளையாட்டு வைபவ நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் மீண்டும் இதை வலியுறுத்திக் கூறியதுடன் அரசியல்வாதிகளுக்கு நாடாளுமன்றத்தையோ அன்றி நீதிமன்றங்களையோ மூடும் அதிகாரம் தாராளமாகவே இருப்பதாகவும் அடித்துக் கூறியுள்ளார்

இவரது இந்த நடவடிக்கை நீதிமன்றத்தை அவமதித்துள்ளதா என்பதை ஆராய மூன்று நீதிபதிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

அமைச்சரது இந்தக் கூற்று நாடாளுமன்றத்தையும் சபாநாயகரையும் அவமதித்துள்ளதாகவும் இவரது இந்த நடத்தைக்கு உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுக்கும் பொருட்டு விசேட தெரிவுக்குழு ஒன்றை அமைக்கும்படியும் எதிர்க்கட்சித் தலைவர் சபாநாயகரைக் கேட்டுள்ளார். Bar Association of Srilanka தனது அறிக்கையில் இந்த விமர்சனத்தை வன்மையாகக் கண்டித்துள்ளது.

இவ்வேளையில் அமைச்சர் திஸநாயக்கா தனது இக்கருத்து உயர் நீதிமன்ற நீதிபதிகளையும் நீதித்துறையைச் சார்ந்தவர்களையும் புண்படுத்தியிருந்தால் அதற்காக மிகவும் வருத்தப்படுவதாகக் கூறியிருக்கிறார். ஆனால் இங்கு கவனிக்கப்படவேண்டிய அம்சம் என்னவென்றால் அமைச்சர் இங்கு தனது வருத்தத்தைத் தெரிவித்துள்ளாரே தவிர தான் கூறியது தவறு என்றோ அதற்காக மன்னிப்புக் கோருவதாகவோ எதனையும் கூறவில்லை.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற அமர்வுகளில் நீதி அமைச்சர் ஜி.எல்.பீரிஸும், விமான்ச்சுற்றுலா போக்குவரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்காவும் நாடாளுமன்றமோ அன்றி நீதிமன்றங்களோ ஒருபோதும் மூடப்படமாட்டா எனவும் அவ்வாறான எண்ணம் அரசுக்குக் கிடையாது எனவும் உறுதியளித்துள்ளனர். மறுபக்கம் அரசியல்வாதிகள் தாங்கள் நினைத்தவற்றை எல்லாம் பேசவும் நாடாளுமன்றத்திலும் நீதித்துறையிலும் நம்பிக்கையில்லை என்று கூடக்கூறவும் சுதந்திரம் இருப்பதாகவும் அமைச்சர் திஸநாயக்கா கூறியுள்ளார்.

## கொழும்பு மடல்

- அஜந்தன் -

இறுதியாகக் கடந்த வாரம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றுகையில் அமைச்சர் தான் தனிப்பட்ட ரீதியில் நீதித்துறையையும் நீதிபதிகளையும் மதிப்பதாகவும் ஆனால் அது தனது பேச்சுச் சுதந்திரத்துக்குத் தடையாக அமையாது எனவும் கூறியுள்ளார். ஆகவே நீதித்துறையா, நாடாளுமன்றமா அல்லது அரசியல்வாதிகளா வல்லவர்கள் என்பதை அறிய எமக்கு இன்னும் சில காலம் தேவை. *

## தேசிய இனம் என்ற........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை வகிக்கக் கிடைத்தமையைச் சிறப்பாக புனித யோவான் கல்லூரி பழைய மாணவர்களும், நலன் விரும்பிகளும் பெரும்பேறாக எடுத்துக் கொண்டு மேற்படி ஆராதனை சிறப்பாக அமைவதில் தமது பங்களிப்பையும் இணைத்துக் கொள்வார்களாக. இந்த விஷேட ஆராதனைக்கு தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பப்படுவதில்லை. ஆராதனை குறித்த தகவல் மட்டுமே தொடர்பு சாதனங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டு வருவது வழமை.

தந்தை செல்வாவின் பெயரால் வீடமைப்புத் திட்டமும், குடியேற்றத் திட்டங்களும் ஓர் ஆரம்பப் பாடசாலையும் குடாநாட்டில் உண்டு. இவையும் தேசபிதாவின் ஜனன தினத்தை வரலாற்றுச் சிறப்புடன் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்வார்களாக.

தனது தேசபிதாவை உரிய முறைப்படி கௌரவித்து மகிமைப்படுத்தாத எந்தத் தேசிய இனமும் தரணியில் தலையெடுத்து வாழ்வாங்கு வாழமுடியாது. எனவே தமது தேசபிதாவுக்கு நன்றி பாராட்டவும் அவரை நினைவுகூரவும் தமிழினம் முன்வர வேண்டும்.

## 'சிறுவர்சுடர்' விடைகள்


XVI ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள 'சிறுவர் சுடர்' பகுதிக்கான விடைகள் வருமாறு:-

### பிரிக்க முடியுமா?



# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.147




### சொற்சிலம்பம் இல. 147

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ......................................................................

விலாசம்: ......................................................................

......................................................................

..............................இங்கே வெட்டுக..................................

முடிவுத் திகதி:- 31 - 03 - 2000

### இடமிருந்து வலம்

1. எழுப்புதல். 6.வடக்கின் கற்பகதரு. 7. கட்டியான 8.இதை இதனாலேயே எடுக்க வேண்டும். 9. ஒரு புள். 11. ஐம்புலன்களையும் அடக்கும் முயற்சி இது. 13. வருடம் தோறும் கூடும். 15. சோற்றுக்குச் சேர்க்கலாம்; தனியாகவும் குடிக்கலாம். 16.பன்மைத் தன்மையைக் குறிப்பது. 17. சொல். 18. இணக்கம். 20.ஓர் உப உணவுப் பொருள். 21. சமய 22. பிள்ளை 23.மா இடிக்க உதவுவது.

### மேலிருந்து கீழ்

1. தொல்லை. 2. ஊற்று. 3. செய்தி. 4. கண்ணி/சுவடு. 5.போதையை தரும் பானம். 8. தீர. 9. ஆகாயம். 10. புலவன். 12. பிச்சை. 14. குறித்தல். 16. தெப்பம். 18. ஒற்று. 19. அறிவீனமான. 20. அதிக.

### சொற்சிலம்பம் 145 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1. சிலாபம். 4. அதீத. 7. வடம். 8. கரும்பு. 9. தம்பட்டம். 10.வர. 11. சுயம்பு. 14. வீரன். 15. தண்டம் 16. சனகன். 19. மல்லி. 20.மன்னன்.

### மேலிருந்து கீழ்

1. சிவதனுசு. 2. லாடம். 3. பம்பரம். 4. அரும். 5. தீம். 6.தபுதாரன். 8. கடல். 10. வரம். 12. யன்னல். 13. புதன். 14.வீடணன். 16. சம. 17. கலி. 18. ஏன்.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

**முதலாம் பரிசு:-** கந்தசாமி ஜெகதீபன்,
கலையரசு லேன்,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

**இரண்டாம் பரிசு:-** இ.யோ.லெஸ்லி,
36/5, புனித ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**மூன்றாம் பரிசு:-** திருமதி எம்.ஏ.ஜி.பத்மநாதன்,
27, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 146 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில்.

## கூடுங்கள்


சிறுவர் எல்லாம் வாருங்கள்
சிரித்து ஒன்று கூடுங்கள்
ஒற்றுமையாய் வாருங்கள்
உலகை வென்று காட்டலாம்!

வன் முறையை வெறுத்திட
வந்து ஒன்று கூடுங்கள்
அன்பு காட்டி உயர்ந்திட
அழகுக் கரம் நீட்டுங்கள்!

உழைப்பின் பெருமை
உரைக்கவே
உடனே ஓடி வாருங்கள்
வாழ்த்தி உலகை உயர்த்திட
வந்து இங்கே கூடுங்கள்!

-சிவ.கலாகான்-

## புள்ளிகளை இணையுங்கள்



இங்கே தரப்பட்டுள்ள படத்தில் காணப்படும் புள்ளிகளை அவற்றுக்குரிய எண்களின் ஒழுங்கு வரிசைப்படி இணைத்து இங்கு மறைந்திருக்கும் உருவம் என்ன என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

## அறிந்து கொள்ளுங்கள்

நாதஸ்வரத்தைத் தயாரித்த பின்பு தண்ணீரில் ஆறு மாதங்கள் ஊறவைப்பார்கள். இதற்குத் தண்ணீர்ப்பாடம் என்று பெயர். பின்னர் நல்லெண்ணெய், கடலை எண்ணெய் ஆகிய எண்ணெய்களை ஒரு குறிப்பிட்ட அளவில் கலந்து குழகுழப்பாக ஆக்கி அதில் நாதஸ்வரத்தை ஊறப்போடுவார்கள். இதற்கு எண்ணெய்ப் பாடம் என்று பெயர்.

இவ்வாறு செய்வதனால்தான் வாயில் வைத்து வாசிக்கும்போது எச்சில் பட்டும் அது ஒட்டுவதில்லை. நாதஸ்வரம் வாசிக்கும்போது வரும் எச்சில் நாதஸ்வரத்தில் ஒட்டாது. வெடிப்பும் ஏற்படாது.




தொகுப்பு: நம்பி

## கழுதை வைத்த பங்கு

அடர்ந்த காடு ஒன்றில் ஒரு சிங்கம் வசித்து வந்தது. சிங்கம் காட்டுக்கு ராஜா. அதனால் சிங்கம் எங்கே சென்றாலும் பயபக்தியுடனும் மரியாதையுடனும் எல்லா மிருகங்களும் ஓடி ஒளிந்து கொள்ளும். எதுவுமே கிட்டவந்து பேசாது.

சிங்கராஜா தனக்கு நண்பர்கள் யாராவது கிடைக்கமாட்டார்களா என்று ஏங்கினார்.

ஒரு நாள் இரைதேடப் போனபோது ஒரு காட்டுக் கழுதை சிக்கிக் கொண்டது.

சிங்கம் கழுதையைத் தன் குகைக்கு அழைத்துக் கொண்டு வந்தது. இதே போல் காலில் காயம்பட்டு ஓடமுடியாது தவித்து சிக்கிக் கொண்ட நரி ஒன்றையும் தனக்கு நண்பனாக இருக்க அழைத்துக் கொண்டு வந்தது. மூன்றும் சிங்கத்தின் குகையிலே



தங்கின.

மறுநாள் பொழுது புலர்ந்தது. 'நீங்கள் இருவரும் இங்கேயே இருங்கள், நான் போய் இரை ஏதாவது தேடிக்கொண்டு வருகிறேன்' என்று கிளம்பியது சிங்கம். அது வேட்டையாடித் திரும்பி வந்தபோது ஒரு புள்ளிமானைக் கொண்டு வந்தது.

'நண்பனே! இந்த மானைப் பங்குபோடுங்கள்' என்று கழுதையிடம் கேட்டுக் கொண்டது சிங்கம்.

சிங்கம் அளித்திருந்த நண்பன் என்ற உரிமையில் தனது நிலையை மறந்திருந்த கழுதை, மானை மூன்று பங்காகப் பிரித்தது. பின்பு 'நண்பரே! எந்தப் பங்கை வேண்டுமென்றாலும் எடுத்துக்கொள்ளுங்கள்' என்று சிங்கத்திடம் கேட்டுக் கொண்டது.

சிங்கத்திற்குக் கோபம் ஏற்பட்டது. 'வேட்டை தேடி இரை கொண்டு வந்த எனக்கு இதுதானா பங்கு?' என்று ஆத்திரத்துடன் கேட்ட சிங்கம், கழுதையை ஓங்கி அறைந்தது. உடனே கழுதை இறந்து விட்டது.

'நண்பரே! நீங்களாவது சரியாகப் பங்குபோடுங்கள்' என்று நரியைக் கேட்டுக் கொண்டது சிங்கம்.


பயந்து நடுங்கிய நரி தனக்கு மிகவும் கொஞ்சமாக வைத்துக் கொண்டு மீதியை சிங்கத்திற்கு ஒதுக்கி எடுத்துக் கொள்ளும்படி வேண்டியது. சிங்கத்திற்கு ஒரே மகிழ்ச்சி.

'இவ்வளவு புத்திசாலியாக இருக்க எங்கே கற்றீர்கள்?' என்று கேட்டது சிங்கம்.


'நண்பர் கழுதையாரின் முடிவில் இருந்து' என்றது நரி அமைதியாக.

அடுத்தவருக்கு ஏற்படும் அனுபவத்திலிருந்து பாடம் கற்பவன் தான் மகிழ்ச்சியாக இருப்பான்.

✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦




## பிரிக்க முடியுமா?




ஐந்து நேர்கோடுகளை மட்டும் வரைவதன் மூலம் இங்குள்ள நட்சத்திர வடிவ உருவை பத்து சமபாகங்களாகப் பிரிக்க உங்களால் முடியுமா? (விடை XV ஆம் பக்கம் பார்க்க)

## உங்களுக்குத் தெரியுமா?

1. உலகில் உள்ள மிகப் பெரிய சமுத்திரம் எது?
   பசுபிக் சமுத்திரம்.
2. உலகில் உள்ள மிகஉயரமான மலை யாது?
   இமயமலை (எவெரெஸ்ட்)
3. உலகில் உள்ள மிகப் பெரிய பாலைவனம் எது?
   சகாராப் பாலைவனம்
4. உலகில் மிகப் பெரிய திமிங்கிலம் யாது?
   நீலத்திமிங்கிலம்
5. உலகின் மிகப் பெரிய நதி யாது?
   நைல் நதி
6. உலகில் மிகப் பெரிய சுவர் யாது?
   சீனப் பெருஞ்சுவர்
7. உலகின் மிகப் பெரிய நீர்வீழ்ச்சி யாது?
   வெனிஸ்வெலா
8. பென்சில்கூர் எதனால் செய்யப்படுகின்றது?
   காரியம்

இ. சயூரன்
தரம்9, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

## தனித்திருப்பவர் யார்?




மேலுள்ள ஐவரில் ஒருவர் மட்டும் தனித்திருக்கிறார். அவர் யார் என்று கண்டுபிடியுங்கள்!

## [illegible]

ஊர்காவலர் நள்ளிரவு நேரம் தெருத் தெருவாக வலம் வந்து கொண்டிருந்தார். முல்லா வீட்டின் அருகில் வந்தபோது யாரோ ஓர் ஆள் வீதியில் நின்று முல்லா வீட்டு யன்னல் வழியாக உள்ளே பார்ப்பதை ஊர்காவலர் கவனித்தார். ஓடிச் சென்று அந்த மனிதரைப் பிடித்த ஊர்காவலர் திடுக்கிட்டு விட்டார்.

அந்த ஆள் வேறு யாருமல்ல. முல்லாவேதான். 'முல்லா அவர்களே! உங்கள் வீட்டுக்குள் நீங்களே ஏன் எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? உமது மனைவி உம்மை வெளியே அடித்துத் துரத்திவிட்டாரா?' என்று ஊர்காவலர் கேட்டார்.

"ஒரு முக்கிய ஆராய்ச்சியில் இப்போது நான் இருக்கிறேன். நான் இரவில் தூக்கத்தில் நடப்பதாக எனது மனைவியும் அயலவர்களும் கூறுகிறார்கள். நான் உண்மையிலேயே தூக்கத்தில் நடக்கிறேனா, இல்லையா என்று தெரிந்து கொள்ளவே நான் என் 'வீட்டு யன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று முல்லா பதில் கூறினார்.

அவர் பதிலைக் கேட்ட ஊர்காவலர் சிரித்துக் கொண்டே போய் விட்டார்.